To Venkatasubbier and wife – the best wishes of his friend W. Greenway

உ

ஹிந்துதர்மசாஸ்திரசங்கிரகம்.

இங்கிலீசில்

சென்னபட்டணத்து ஹைகோர்ட்டு ஜட்ஜியவர்களான

தாமஸ் - லம்ஸ்டன் - ஸ்திரஞ்சு துரையவர்களாற்

செய்யப்பட்டது.

செங்கற்பட்டுச்சில்லாக் கருங்குழி டிஸ்டிரிக்டு முன்ஸீப்பாகிய

சே. வீராசாமிபிள்ளை யவர்களால்

தமிழில்

பெயர்க்கப்பட்டு.

ராஜதானி சாஸ்திரபாடசாலையின் தமிழ்த்தலைமை உபாத்தியாயராகிய

தி - ஈ - ஸ்ரீநிவாசராகவாசாரியரவர்களால்

திருத்தப்பட்டது.

SECOND EDITION.

COPYRIGHT.

Madras:
PRINTED AT THE HINDU PRESS, BY C. V. KRISHNASAWMI PILLAI,
No. 13, ARMENIAN STREET.
1867.

T. K. Rajan,
42, Hospital Street,
KOTTAIYUR. P. O.,
Ramanathapuram Dist.

4-8-0

பீடிகை.

இந்தக்கிரந்தம் முக்கியமாய் கோர்ட்டுகளில் வாதிக்கும் வக்கில் முதலானவர்களுக்கு இந்துதருமசாஸ்திர விவகாரம் கிரமமாய் எளிதிலுணரப்படும்பொருட்டுச் செய்யப்பட்டது. இது என் எண்ணமென்று கிரந்தத்தைப் படிப்பதனுல் விளங்கும். இந்தச்சுருக்கம் முதலில் - ௧௮௫௬ - ம் வருஷத்தில் பிரசுரஞ்செய்யப்பட்டது. என்தகப்பனுரான ஸர்தாமஸ் ஸ்திரஞ்சு அவர்களால் செய்யப்பட்டு - ௧௮௨௪ - ம்வருஷத்திலே பிரசுரம் பண்ணப்பட்டு மிகவும் பிரசித்தமாயிருக்கிற "எலிமென்ட்ஸ் ஆப் ஹிந்துலா" என்கிறகிரந்தம் இதற்குமூலம்- ஸர் தாமஸ் ஸ்திரஞ்சு அவர்கள் தாம்பார்க்க அனுகூலப்பட்ட சாஸ்திரங்களெல்லாவற்றையும், கோர்ட்டார்களாவது அவ்விடத்துப் பண்டிதர்களாவது சாஸ்திரங்களையெல்லாம் ஆராய்ந்துசொன்ன வசனங்களெல்லாவற்றையும் ஆராய்ந்துபார்த்ததுமல்லாமல் சாஸ்திரம்படித்தவர்களால் கூடுமான அளவு உதவியையும்பெற்ருர். அவர் தான்மேற்போட்டுக்கொண்டவிஷயம் அதுவரையிலும் பூர்ணமாய்ப்பரிசோதிக்கப்பட்டதல்லவென்று தெரிந்து பிறருக்குத்தெரிவிக்கப் புகுந்தவனுக்குச்சரியான மார்க்கத்தைத் தெரிவிக்க எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு சிரத்தையெடுத்துக்கொண்டார். அவர்செய்த எத்தனங்கள் யாவர்க்கும் சம்மதமாகையால் அவருடைய கிரந்தம் எல்லாவிடங்களிலும் மிகவும் பிரமாணிகமென்று ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அன்றுமுதலின்றளவும் முக்கியமாய்க்கோர்ட்டார் நடத்தினகிரந்தங்களால் வெளிப்படையான அமிசங்களை அவரைப்போலவே கூட்டி இந்தக்கிரந்தத்தைப் பெருக்கினேன்.

நடையிலாவது கிரந்தத்தை யேற்படுத்துவதிலாவது ஸர் தாமஸ் ஸ்திரஞ்சு அவர்களைப்போலேஎத்தினிக்கவில்லை. அவர் சாஸ்திரத்தை விவரிப்பதில் அதின் அர்த்தமும் கருத்தும் எதெதற்கு அது உபயோகப்படுமோ அந்தந்த அம்சமும் விசாரித்துப்பிறதேசத்தாருடைய தருமசாஸ்திரங்களோடும் முக்கியமாய்பழையரோமக தருமசாஸ்திரங்களோடும் இங்கிலீஷ்காரருடைய தருமசாஸ்திரங்களோடும் ஒப்பிட்டு அவற்றிற்கு உண்டான பேதாபேதங்களையும் விவரித்துச்சொல்லிக்கொண்டுவந்தார். அப்படிப்பட்ட காரியம் திருத்தமாய் ஒருதரம் செய்திருக்கிறதனால் மறுபடிசெய்யவேண்டியதில்லை. அந்தக்காலத்தில் இந்துதருமசாஸ்திரத்தில் இங்கிலீஷ்காரருக்கு விசேஷபரிசயமில்லை. ஆதலால் ஸர் தாமஸ் ஸ்திரஞ்சு அவர்கள் எழுதின வாதகிரந்தத்தால் விசேஷபிரயோஜனம் உண்டாயிருந்தது. சாஸ்திரஹேதுக்களை அறியவிரும்பினவர்களுக்கு எப்போதும் அதனால் அந்தப்பிரயோஜனம் உண்டாய்க்கொண்டிருக்குமேயல்லாமல் ஒருபோதும் வீணாகமாட்டாது. நான் விவாதத்துக்கு வேண்டிய பகுப்புகளைமாத்திரம் எழுதக்கருதிசாஸ்திரத்தை விவகரிப்பவர்களுக்காகஎன்கல்வியளவுமெய்யானசாஸ்திர வசனங்கள் இப்படிப்பட்டவையென்றுஎழுதினேன்.

மற்றவர்களுடைய மதம் எனக்குச்சம்மதமாகாத விடத்தில் எனக்குத்தோன்றின அபிப்பிராயங்களையே தெரியப்படுத்தினேன். உண்மையாய்ச் சாஸ்திரமல்லவென்று நம்புவதற்குக் காரணங்களிருக்கையில் சாஸ்திரமிதுவேயென்று எழுதினபக்ஷத்தில் என் எழுத்து யதார்த்தமென்று சொல்லப்படமாட்டாது. எங்கேயாகிலும் ஒவ்வோரிடத்து என்மதம் ஸர் தாமஸ் ஸ்திரஞ்சு அவர்கள் மதத்துக்கும் தருமஸ்தானத்தாருடைய தீர்ப்புகளுக்கும் வேறானதல்லாமல் பண்டிதர்களுடைய மதத்துக்கும் வேறாயிற்று. அப்படிபேதம் உண்டானவிடத்தில் அதற்கு உள்ளஹேதுக்களைச்சுருக்கமா யுதாகரித்தேன்.

மூலகிரந்தங்களையே பரிசோதித்து இந்துதருமசாஸ்திரமிப்படிப்பட்டதென்று கண்டுநிச்சயித்தல் யூரோபியன் தலையிட்டுக்கொள்ளத்தக்கதன்று. இப்போதிய இந்துக்களுக்கும் அதைநிறைவேற்றுதல் அரிது. மூலகிரந்தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற பழையவியாக்கியானங்களை விசாரித்தால் அனேகவசனங்களுக்கு எழுதியிருக்கிறபொருள் இப்போதியார்புத்திக்குமாறாய்த்தோன்றுகின்றது. ஆனாலும் நெடுநாளாய் சர்வசம்மதங்களாய் எப்போதும் ஆசரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற அந்தவியாக்கியானங்கள் பிராமாணிகங்களாயிருக்கின்றன வாதலால் அவைகளை உண்மையான சாஸ்திரார்த்தங்களாக எடுத்துக்கொள்ளலாம். அதனால் துன்பமுண்டாகமாட்டாது-ஆயினும்இப்போதிய வர்த்தமானத்தையனுசரித்து மூலகிரந்தங்களுக்கே இப்போது வியாக்கியானஞ்செய்தோமா மிகவுந் துன்பமுண்டாகும். சந்தேகமில்லை- ஆதலால் இப்படிப்பட்ட விபரீதமார்க்கத்தைத் தருமஸ்தானபண்டிதர்கள் பிரவேசித்துத் தங்கள்புத்திசாதுரியத்தினால் மூலகிரந்தத்துக்குப் புதியபொருளுரைத்து இதுவரையில் சர்வசம்மதங்களாய் நிலைபெற்றேற்பட்டிருக்கிற நிபந்தனைகளை அர்த்தசந்தேகமுள்ளனவாக்கினதுபோல் எனக்குத்தோன்றின இடத்திலேயே வெகுவாய்ப்பண்டிதர்களுடைய அபிப்பிராயங்களைத்தருமஸ்தானத்திலாவது இந்தக்கிரந்தத்திலாவது ஒத்துக்கொள்ளாமற்போனேன். பண்டிதரல்லாதவர்கள் பெரும்பாலும் பிரகிருதத்தில் ஆசாரமில்லாத நிபந்தனைகளையே இப்போதிய நிபந்தனைகளாகவும் பங்காளசம்பிரதாயத்து நிபந்தனைகளைக் காசீசம்பிரதாயத்து நிபந்தனைகளாகவும் பாவித்துக்கொள்ளுதலால் அநியதேசத்தார் (என்றால் இங்கிலீஷ்காரருடைய) ஆசாரத்தைப்பற்றின புத்திமயக்கத்தினாலே தப்பிப்போனதாக என்புத்திக்குத்தோன்றுகின்றது. ஆனாலும் இப்படி சிலசமயங்களிலேயே கருத்துமாறுபட்டபடியால் பேதிக்கத்தக்கதன்று.

சாஸ்திரத்தின் முக்கியார்த்தத்துக்காவது அதின்நடத்தைக்காவது பேதப்பட்டகாரியங்கள்சில இவ்விடத்தில் விவரிப்பது யுக்தமென்று தோன்றுகின்றது. இதுவரையிலும் சாஸ்திரத்தின் அர்த்தம் பேதிக்கும்படிசம்பவித்த அன்னியசம்பந்தமானகாரணங்கள் இத்தன்மைய என்றுதெரிந்துகொண்டோமா இனிமேல் அதைப்பேதப்படுத்தத்தக்க காரியங்கள் நேர்ந்தபோது ஜாக்கிரதையோடிருந்து அநியாயமாயாவது கேடுண்டாகும்படியாயாவது அவை வீணாமலிருக்கும்படி செய்யலாம்.

எப்படியென்றால் இந்துதருமசாஸ்திரங்கள் எவர்களுக்காக முதலில் செய்யப்பட்டனவோ அவர்களேயல்லாமல் மற்றவர்களும் அதையனுஷ்டிக்கிறார்கள். இந்தராஜதானிக்குக்கீழ் மேற்கரைநாட்டில் வசிக்கிறசிலகூட்டத்தார் மகம்மதுமதஸ்தராயிருந்தும் தங்களைச்சுற்றியிருக்கிற இந்துக்களுடைய ஏற்பாடான தாயபாகக்கிரமங்களையே யனுசரிக்கிறார்கள். அந்தத்தேசத்திற்கும் இந்தராஜதானியின்கீழுள்ள மற்றத்தேசங்களுக்கும் நடுவில் மேற்குக்கணவாய் என்கிறமலைத்தொடர் ஒன்றிருக்கிறது. ஆதலால் அவ்விடத்து ஆசாரங்களும் வேறாயிருக்கின்றன. ஆதியில்வந்துசேர்ந்த மகம்மதியர்களானாலும் மகம்மதியமதத்தைப் பற்றிக்கொண்டவர்களானாலும் முதலில்மிகவுஞ் சிலராய் அங்கங்கே ஒவ்வொருவராய்ச் சிதறியிருந்தார்கள் - ஆதலால் சுற்றுப்பட்டில் ஆசரிக்கப்படுகின்ற ஆசாரங்களைத் தடுக்கமாட்டாமல் அவற்றிற்கு உட்பட்டு நடந்தார்கள். மேலும் இந்தராஜதானிகருக்கீழ் சகலதேசங்களிலும் இந்துகுலத்தாரான கிரஸ்தவர்களும் தாயபாகவிஷயத்தில் இந்து தருமசாஸ்திரத்தையே அனுஷ்டிக்கிறார்கள். அவர்களுக்கு அனுகூலப்படத்தக்க இதரசாஸ்திரமில்லாமையால் தங்கள் சுற்றுப்பட்டி லிருக்கிறவர்களுடைய சாஸ்திரங்களையே அனுசரித்தல் இயல்பாயிருந்தது. மேலும் நன்மார்க்கத்தை விடுதல், ஒழுக்கத்தவறு, கலியாணமாகாதவரிடத்திற் பிறப்பது, முத

லான காரணங்களால் ஜாதிபிரஷ்டராய்ச்சாஸ்திரத்திற்குப்புறம்பான இந்துக்கள்புதுக்கூட்டத்தாராய் ஏற்பட்டுத்தங்களுக்கு ஒத்தவரையில் இந்து தருமசாஸ்திரத்தைத் தங்களுக்குத் தாங்களே அனுசரிக்கின்றார்கள்.

முக்கியமாய் விவாகவிஷயத்திலும் ஸ்வீகாரவிஷயத்திலும் பழமையான சாஸ்திரத்தின் ஆசாரம் தப்பிபபோயிருக்கிறது. முன்பு பிராமணர்கள் தங்கள்கீழ்க்குலத்துக் கன்னிகைகளை விவாகஞ் செய்துகொள்ளலாம். அப்படிப்பட்ட விவாகத்தால் பங்குகள் ஏற்படுத்தும் விஷயத்திலும் குழந்தைகளாலுண்டாகுமதசம்பந்தபிரயோசனத்தை நிச்சயிக்கும் விஷயத்திலும்பேதங்கள் உண்டாயிருக்கின்றன. இப்போது பிராமணர்மற்றச்சாதியாரைப்போலவே தங்கள்சாதிப்பெண்களையே விவாகஞ்செய்துகொள்ளலாம். சகோத்திரத்தில் தந்தைக்குமுற்பட்ட ஆறுதலைமுறையாருடைய பிள்ளைகளை விவாகஞ்செய்துகொள்ளக்கூடாதென்று ஏற்பட்டிருக்கும் சாஸ்திரம் வழக்கத்துக்குத் தப்பியிருக்கின்றது. அந்தவிரோதம் தாய்தந்தையர் சகோதரர்கள்பிள்ளைகள் இப்படிப்பட்ட முறையிலிருக்கிறவர்களுடைய விஷயத்தில்மாத்திரம் வழங்கிவருகின்றது. ஸ்வீகாரத்திற்குப்பன்னிரண்டு வகைகள் முன் ஏற்பட்டிருந்தன. ஒருசிசு சாஸ்திரப்பிரகாரம் ஜநகபிதா ஸ்வீகாரஞ்செய்தபிதா இவ்விருவருக்கும் பிள்ளையாயிருக்கலாம் என்கிறநியமமிருந்தது. அவுரசன் இல்லாதவர்கள் இப்போது ஸ்வீகாரஞ்செய்துகொள்வதற்கு ஒருவகை வழக்கத்திலிருக்கின்றது- என்றால் மகனை ஸ்வீகாரஞ்செய்துகொள்ளுதல். இப்படிப்பட்ட ஸ்வீகிருதன் ஸ்வீகரித்துக்கொண்டபிதாவுக்கே புத்திரனாயிருக்கின்றான். ஸ்வீகரிக்கப்படுகிறவனுடையதாய் நியாயமாய் ஸ்வீகாரஞ்செய்துகொள்ளுகிறவனைக் கலியாணஞ்செய்துகொள்ளத்தக்க முறையுடையவளா யிருக்கவேண்டுமென்கிற நிபந்தனை திரவிடதேசத்தில் தப்பிப்போயிருக்கின்றது - ஆனதால் தவுகித்திரனையா

வது பாகினேயனையாவது தத்துவாங்கிக்கொள்ளும்வழக்கமுண் டாயிருக்கின்றது.

சுபாவகுணங்கள் கற்பிதங்களான சாஸ்திரசம்பந்தமான தடையற்ற நுணுக்கங்களை வேறுபடுத்தத் தலைப்பட்டபடியால் இந்தவேறுபாடு உண்டாயிருக்கின்றது - ஆதலால் அதுசவுக்கியகரமென்று சொல்லத்தகும். மெய்யான நடக்கையின் எல்லைசடந்தகாலத்துக்குமுன்னே வெருகாலமா யுண்டானமுதல் சாஸ்திரத்திற்கு இவ்வளவுகாலஞ்சென்றும் இப்படிப்பட்ட அற்பபேதமுண்டானது ஆச்சரியமாயிருக்கின்றது.

ஆனாலும் இந்தச்சாஸ்திரம் இந்துதேசத்தின் மற்றப்பக்கங்களில் நிலையாயிருப்பதுபோல் பங்காளதேசத்தில் இருக்கவில்லை. அங்கே இந்தத் தருமசாஸ்திரநிபந்தனை நடக்கைக்குப்பெரும்பாலுமாறி இப்படிப்பட்ட மாறுதல் பிரத்தியக்ஷமாய் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற சித்தாந்தத்தால் ஏற்பட்டிருக்கிறது. அந்தச்சித்தாந்தம் பூர்ணமாய் அனுஷ்டானத்துக்குவந்தபோது எல்லாச்சாஸ்திரங்களும் அடிபட்டுப்போம். “ஒருமெய் நூறுபிரமாணங்களாலாவது மாற்றப்படமாட்டாது என்று”, அவர்களுடைய பிராமாணிகமானதாய பாகத்தில் சொல்லப்பட்டது. என்றால் ஒவ்வொருமனிதனுக்கும் தன்சவுக்கியமே சாஸ்திரமாயிருக்கவேண்டியது-சரிதான் ஆனால்ஜனங்கள் இவ்வளவு கலக்கத்துக்கு ஒப்புகொண்டிருக்கவில்லை. ஆனாலும் சாஸ்திரமரியாதைகள் சரியாயேற்படாதபோது சந்தேகமும் கலக்கமும் உண்டாகவேண்டும். மற்றத்தேசங்களைவிட அதிகமாய்ப்பங்காளதேசத்தில் வியாக்கியானகர்த்தாக்கள் சிலர் உண்டாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கருத்துகளைச்சாஸ்திரங்களின் சரியானபொருளாக ஏற்படுத்திச் சாஸ்திரத்தை நிபந்தனைக்கு உட்படுத்தினார்கள். வீண் அபிப்பிராயத்துக்கே இப்படிப்பட்ட மேன்மையைக் கொடுத்தபோது தாற்பரியபேதங்கள் விஸ்தாரமாய் அவசியமுண்டாகும்.

ஸர் உல்லியம்ஜோன்சு அவர்களுடைய அனுமதியினால் ஜகன்னா தபண்டிதர் இயற்றிய சாஸ்திரசங்கிரகத்தைப்பார்த்தால் பங்காளத்துச் சாஸ்திரம் வியாக்கியானகாரரால் பழிக்கப்படுகிற நிலைக்குக்கொண்டுவரப்பட்டதென்று விளக்கமாய்க்காணப்படுகின்றது. அதனாலே இந்துசாஸ்திரத்தில் மனதினால் ஊகிக்கத்தக்க எப்படிப்பட்ட சித்தாந்தத்துக்காயினும் எவ்வளவு ஒன்றுக்கொன்று மாறாயிருக்கிறதற்காயினும் அனுகூலமாய் ஒருபிரமாணவசனமும் அதை ஸமர்த்திப்பதற் கொருபண்டிதனும் சித்தமாய் உண்டென்று இந்தச்சாஸ்திரத்தைப்பலதரம் எளிதாய்த்தூஷிக்கிறார்கள். அந்தத்தூஷணை அஞ்ஞானத்தால் செய்ததேயன்றிச் சரியானதன்று. ஆனாலும் இப்படியுண்டான கெட்டபெயர்பெரும்பாலும் பங்காளசாஸ்திரத்துக்குத்தகுமே யல்லது மற்ற இந்துதருமசாஸ்திரத்துக்குத்தக்கதன்று.

பிரிடீஷ் துரைத்தனத்தாருக்கு அவ்வவ்விடத்துள்ள மற்றச் சாஸ்திரங்களைப்போலவே இந்துதருமசாஸ்திரத்தையும் திருத்த அதிகாரமுண்டாயிருந்தும் அவர்கள் அதின்சோலிக்கு அவ்வளவாய்ப் போனவர்களல்லர். விதந்துக்கள் விவாகஞ்செய்துகொள்ளலாமென்று செலவுகொடுத்தார்கள் ஆனாலும் அதுபயிலப்படுமென்று தோன்றவில்லை. மதமுதலானவற்றை விடுவதினாலேயாவது இன்னம் வேறுஹேதுக்களாலேயாவது ஜாதிபிரஷ்டரானவர்கள் செத்தவர்களைப் போன்றவராதலால் அவர்களுக்குத் தாயாதிகாரமில்லையென்று இந்து தருமசாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிற அமிசத்தைப்பிரடீஷ்துரைத்தனத்தார் தடுத்துஅவர்களுக்குத்தாயாதிகாரம் முன்போலே நிலைக்கும்படியாகச் சட்டஞ்செய்தார்கள், மேலும் இந்துதருமசாஸ்திரத்தில் வழக்கைக்கொண்டு வருவதற்காக ஏற்பட்டிருக்கிற காலாவதி நிர்ணயத்தை நிறுத்தி இந்துக்கள் முதலான எல்லாவிதமானவர்க்கும் ஒரேவிதமான காலாவதி சாஸனத்தை விதித்திருக்கிறார்கள். இந்தச்

வது பாகினேயனையாவது தத்துவாங்கிக்கொள்ளும்வழக்கமுண்டாயிருக்கின்றது.

சுபாவகுணங்கள் கற்பிதங்களான சாஸ்திரசம்பந்தமான தடையற்ற நுணுக்கங்களை வேறுபடுத்தத் தலைப்பட்டபடியால் இந்தவேறுபாடு உண்டாயிருக்கின்றது - ஆதலால் அதுசவுக்கியகரமென்று சொல்லத்தகும். மெய்யான நடக்கையின் எல்லைகடந்தகாலத்துக்குமுன்னே வெகுகாலமா யுண்டானமுதல் சாஸ்திரத்திற்கு இவ்வளவுகாலஞ்சென்றும் இப்படிப்பட்ட அற்பபேதமுண்டானது ஆச்சரியமாயிருக்கின்றது.

ஆனாலும் இந்தச்சாஸ்திரம் இந்துதேசத்தின் மற்றப்பக்கங்களில் நிலையாயிருப்பதுபோல் பங்காளதேசத்தில் இருக்கவில்லை. அங்கே இந்தத் தருமசாஸ்திரநிபந்தனை நடக்கைக்குப்பெரும்பாலுமாறி இப்படிப்பட்ட மாறுதல் பிரத்தியக்ஷமாய் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற சித்தாந்தத்தால் ஏற்பட்டிருக்கிறது. அந்தச்சித்தாந்தம் பூர்ணமாய் அனுஷ்டானத்துக்குவந்தபோது எல்லாச்சாஸ்திரங்களும் அடிபட்டுப்போம். "ஒருமெய் நூறுபிரமாணங்களாலாவது மாற்றப்படமாட்டாது என்று" அவர்களுடைய பிராமாணிகமானதாய பாகத்தில் சொல்லப்பட்டது. என்றால் ஒவ்வொருமனிதனுக்கும் தன்சவுக்கியமே சாஸ்திரமாயிருக்கவேண்டியது-சரிதான் ஆனால்ஜனங்கள் இவ்வளவு கலக்கத்துக்கு ஒப்புகொண்டிருக்கவில்லை. ஆனாலும் சாஸ்திரமரியாதைகள் சரியாயேற்படாதபோது சந்தேகமும் கலக்கமும் உண்டாகவேண்டும். மற்றத்தேசங்களைவிட அதிகமாய்ப்பங்காளதேசத்தில் வியாக்கியானகர்த்தாக்கள் சிலர் உண்டாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கருத்துகளைச்சாஸ்திரங்களின் சரியானபொருளாக ஏற்படுத்திச் சாஸ்திரத்தை நிபந்தனைக்கு உட்படுத்தினார்கள். வீண் அபிப்பிராயத்துக்கே இப்படிப்பட்ட மேன்மையைக் கொடுத்தபோது தாற்பரியபேதங்கள் விஸ்தாரமாய் அவசியமுண்டாகும்.

ஸர் உல்லியம்ஜோன்சு அவர்களுடைய அனுமதியினால் ஜகன்னாதபண்டிதர் இயற்றிய சாஸ்திரசங்கிரகத்தைப்பார்த்தால் பங்காளத்துச் சாஸ்திரம் வியாக்கியானகாரரால் பழிக்கப்படுகிற நிலைக்குக்கொண்டுவரப்பட்டதென்று விளக்கமாய்க்காணப்படுகின்றது. அதனாலே இந்துசாஸ்திரத்தில் மனதினால் ஊகிக்கத்தக்க எப்படிப்பட்ட சித்தாந்தத்துக்காயினும் எவ்வளவு ஒன்றுக்கொன்று மாறாயிருக்கிறதற்காயினும் அனுகூலமாய் ஒருபிரமாணவசனமும் அதை ஸமர்த்திப்பதற் கொருபண்டிதனும் சித்தமாய் உண்டென்று இந்தச்சாஸ்திரத்தைப்பலதரம் எளிதாய்த்தூஷிக்கிறார்கள். அந்தத்தூஷணை அஞ்ஞானத்தால் செய்ததேயன்றிச் சரியானதன்று. ஆனாலும் இப்படியுண்டான கெட்டபெயர்பெரும்பாலும் பங்காளசாஸ்திரத்துக்குத்தகுமே யல்லது மற்ற இந்துதருமசாஸ்திரத்துக்குத்தக்கதன்று.

பிரிடீஷ் துரைத்தனத்தாருக்கு அவ்வவ்விடத்துள்ள மற்றச் சாஸ்திரங்களைப்போலவே இந்துதருமசாஸ்திரத்தையும் திருத்த அதிகாரமுண்டாயிருந்தும் அவர்கள் அதின்சோலிக்கு அவ்வளவாய்ப் போனவர்களல்லர். விதந்துக்கள் விவாகஞ்செய்துகொள்ளலாமென்று செலவுகொடுத்தார்கள் ஆனாலும் அதுபயிலப்படுமென்று தோன்றவில்லை. மதமுதலானவற்றை விடுவதினாலேயாவது இன்னம் வேறுஹேதுக்களாலேயாவது ஜாதிபிரஷ்டரானவர்கள் செத்தவர்களைப் போன்றவராதலால் அவர்களுக்குத் தாயாதிகாரமில்லையென்று இந்து தருமசாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிற அமிசத்தைப்பிரடீஷ்துரைத்தனத்தார் தடுத்துஅவர்களுக்குத்தாயாதிகாரம் முன்போலே நிலைக்கும்படியாகச் சட்டஞ்செய்தார்கள், மேலும் இந்துதருமசாஸ்திரத்தில் வழக்கைக் கொண்டு வருவதற்காக ஏற்பட்டிருக்கிற காலாவதி நிர்ணயத்தை நிறுத்தி இந்துக்கள் முதலான எல்லாவிதமானவர்க்கும் ஒரேவிதமான காலாவதி சாஸனத்தை விதித்திருக்கிறார்கள். இந்தச்

சட்டங்களெல்லாம் செய்யத்தக்கவை-மேலும் சாஸ்திரத்தைக்காப்பவர்களாகிய தருமஸ்தானத்தாருடைய தீர்ப்புகளினாலே சிறிதுபாகம் விவகாரத்திற்பேதித்தது. சில அம்சங்கள் முழுமையுமாறிப்போயின.

ஓரமிசத்தில் சாஸ்திரம்பேதப்படாமல் அதை விவகரிக்கவேண்டிய ஒழுங்குமாறினது - எப்படியென்றால் - இந்துகுடும்பம் சமுசிருஷ்டமாயிருப்பது இயற்கை. குடும்பத்துக்குப் பெரியவனாயிருப்பவன் சமுதாயகாரியங்களை விசாரித்துக்கொண்டு குடும்பத்திற்சேர்ந்தயாவர்க்கும் வேண்டிய பிரயோசனங்களைச்செய்கிறான். அப்படியிருந்தாலும் குடும்பத்திற்சேர்ந்தஎவனாகிலும் ஆஸ்தியில் தனக்குவரவேண்டிய பாகத்தைத்தனித்துக்கொடுப்பிக்கவேண்டுமென்று கேட்டுவாங்கிக்கொண்டு பிரத்தியேகமாய் குடும்பத்தாரோடு சம்பந்தமில்லாமல் தனக்குத்தான் சுதந்தரமாயிருக்கலாம். இவ்விதமாய்ச் சந்தேகமின்றித் தருமசாஸ்திர மேற்பட்டிருக்கிறது. ஆயினும் பிரிடிஷ் துரைத்தனத்தார் வருமுன்னே குடும்பத்திற் சிறியவனாயிருப்பவன் தன்னிஷ்டப்படி அதிகாரத்தைவகிக்க எத்தனித்தது அரிது. அப்போது ஜனங்களால் கெட்டவனென்பித்துக்கொள்வதற்குச் சாகஸமாய் வெட்கம்விட்டவனைத்தவிரமற்றெவனும் தன்னை ஒருவழியால் விசாரிப்பவனாதலால் தகப்பனுக்குச்சரியான குடும்பத்தலைவனை த்தன்பங்கைக்கொடுவென்றுகேளான். மிகவும்ஆவசியகமுண்டானபோதுமாத்திரம் அந்தப்படி சாதாரணமாய்க் கேட்பதுண்டு. குடும்பத்தலைவன் ஆஸ்தியைப்பாழாக்கும்போதாவது குடும்பத்தின் பொதுப்பொருள் அதிகப்பட்டிருக்கும் போதாவது விபாகாதிகாரம் மிகவும் உபயோகமாகிறதேயன்றிக் குடும்பத்தாரெல்லாருடைய நன்மையைவிசாரியாமல் சுதந்தரமாயிருக்கவேண்டுமென்கிற கோரிக்கைமாத்திரத்தினாலே தடையின்றி மனம்போனபடி தாயத்தைப் பிரித்துக்கொண்டபக்ஷத்தில் கே

டுஉண்டாகும். இவ்விதக்கேடு பிரிடிஷ் துரைத்தனத்தார் ஸ்தா பித்ததருமஸ்தானங்களால் மிகுதியாய் உண்டாயிற்று. குடும்பா திகாரியால் பங்கையடையவேண்டுமென்று இந்துராஜாக்களோ டு சொல்லிக்கொள்ளமுயன்றபோது உண்டாகிறதடைகள் பி ரிடிஷ்தருமஸ்தானங்களில் வருகிறவர்களுக்கு உண்டாவதில் லை - மற்றவர்களுடைய நன்மையைவிசாரியாமல் சாஸ்திரப்ப டி அவனுக்குவரவேண்டியபங்கை அவனுக்குக் கொடுப்பிப்ப தனுல் அவன்ஸ்வப்பிரயோஜன மிப்படிப்பட்டதென்று பலதர ம் தருமஸ்தானத்தாரால் கற்றுக்கொள்ளத்தலைப்பட்டான். இ ப்போது தான்வராமலே வக்கீலைக்கொண்டு வழக்குநடத்தலா ம் - அவனுக்குபயபயங்களைச் சொல்லுவாரில்லை. தருமஸ்தாண த்தார் மற்றப்பாகங்களை விசாரியாமல்சாஸ்திரத்திற் சொல்லியி ருக்கிறதென்கிறமாத்திரத்திஞலே தீர்ப்புசெய்கிருர்கள். அவ்வள வில்குடும்பம் வேறுபட்டுச் சிதறிப்போகின்றது. இப்படிநடப்ப து நல்லதன்று-இப்பொதுஇப்படி தினந்தோறும் நடக்கின்றது- ஆனதனுல் ஒருமைப்பாடுஇல்லாமற்போயிற்று - வழக்குகள்அ திகமாயின- இல்லாமைநேர்ந்தது - மலையாள தேசத்தில்மாத்திரம் சாஸ்திர மிப்படிப்பட்டதன்று- அங்கேபங்காளிகளெல்லாம் ச ம்மதித்துப் பங்குபிரித்துக்கொள்ளவேண்டுமேயல்லது நியாயஸ் தானங்களில் வழக்கிட்டுப்பிரித்துக்கொள்ளக்கூடாது. ஆதலால் இப்போது அவ்விடத்தில் பழமையானகுடும்பங்களும் விஸ்தீர் ணங்களாகி விபாகப்படாத ஸ்தாவரதிரவியங்களையு முடைய வைகளாயிருக்கின்றன. இந்தராஜதானியின் கீழுள்ளமற்றவிடத் தில் அதற்குநேரோவிரோதமாய் பிதுரார்ஜிதம், மறுபடி மறுபடி எல்லையின்றிப் பிரிவுபடுதலால் ஒன்றுக்கொன்று விரோதமும் வறுமையும்அவைகளால் பலவகை இடையூறுகளும் உண்டா கின்றன. கன்னடதேசத்தில்மாத்திரம் ஏறக்குறையமலையாளசம் பிரதாயம் செல்லுகின்றது.

இந்தப்பிரகாரம் சாஸ்திரத்தைத்துன்மார்க்கமாய் விவகரிப்பதற்குச் சாஸ்திரத்திலேயே இடம் உண்டாயிருந்தாலும் அதற்கு மாறுசெய்கை யுண்டாக்கல் வருத்தமன்று. தரும சாஸ்திரப்படி விவகாரத்தை நடத்துவதற்கு நாம்ஏற்படுத்திய தருமஸ்தானஒழுங்கு அதைக்கிரமமாய்ப்பரிபாலிப்பதற்குத்தக்க தல்லவென்று ஏற்பட்டதனால் அதற்குத்தக்க எல்லையை யேற்படுத்தல்நியாயமாயிருக்கும். ஆனாலும் இதினிமித்தம் சாஸ்திரத்தை மாற்றுவது அவசியமில்லை. குடும்பத்தின் அதிகாரி பொதுதிரவியத்தைப்பாழ்செய்கிறானென்றாவது துரோகஞ்செய்கிறானென்றாவது ஏற்பட்டபோதுதவிரதருமஸ்தானத்தார் பங்குக்குத் தீர்ப்புசெய்யக்கூடாதென்று ஏற்பாடுசெய்யலாம். இப்படிப்பட்ட நிபந்தனை இப்போதும் தருமசாஸ்திரத்தில் பாலியருடை தாயபாகப்பிரகரணத்திற் சொல்லியிருக்கிறது. அந்தநிபந்தனையே யாவர்க்கும் உபயோகமாம்படிசெய்யவேண்டிய அக்கரை பிரத்தியக்ஷமாய்க்காணப்பட்டுக்கொண்டிருக்கையில் அப்படிசெய்வதுஅநியாயமன்று.

இப்படிஜனங்கள் தங்கள் சாஸ்திரத்தைத்துர்மார்க்கமாய் உபயோகப்படுத்திக்கொண்டு அதற்குச்சாஸ்திர பரிபாலகர்களை நிந்திக்கவேண்டியதில்லை. ஆனாலும் சில அம்சங்களிலே சாஸ்திரத்தைப்பரிபாலனஞ் செய்யவேண்டியவர்கள் தங்கள் அதிகாரம் துர்மார்க்கமாய் விநியோகிக்கச் செய்ததைக்கடந்துசென்றார்களென்பதற்குச் சத்தேகமில்லை.

இந்துக்களுடைய உயில்களுக்குச்சிலாவணியுண்டாக்கல் எப்படிப்பட்ட அக்கிரமம் - இங்கிலீஷ்காரருக்கு உண்டாயிருக்கிற அந்தஅதிகாரம் இந்துக்களுக்குச்சாஸ்திரத்தில் உண்டாக்கியிருக்கவில்லை. அவர்களுக்கு அந்த அதிகாரம் எவ்வளவும் கூடாதென்று தடுத்திருக்கின்றது. அந்தநிஷேதம் தக்கதாகவேயிருக்கின்றது. முதலில் நம்மவர்கள் தருமசாஸ்திரத்தை நன்றாய் அ

றிந்துகொள்ளாமற் போனதனால் இவ்வாறு பிழைபட்டார்களானாலும் இப்பொழுதுகண் நன்றாய்த்தெரிந்தபிற்பாடும் நம்முடைய இங்கிலீஷ்துராபிமானத்தை விடாமல் இதுவரையிற் செய்திருக்கிற தீர்ப்புகளை அனுசரித்துப் பிரிடீஷ் நியாயாதிபதிகள்சாஸ்திரத்தைப்பிரத்தியக்ஷமாய் அதிக்கிரமித்துக்கொண்டிருத்தல் நியாயமல்ல.

தருமசாஸ்திரத்தின் அர்த்தம் தெரிவதற்குத் தக்கமூலஸ்தானங்களைவிட்டு இங்கிலீஷ்மதாசாரங்கள் பிரபலப்படுமிடத்திற்குப் போகுமவ்வளவும் பிரிடீஷ் தருமஸ்தானத்தாரால் சாஸ்திரவிரோதமாய்ச் செய்யப்பட்டதீர்ப்புகள் அனேகம் காணப்படுகின்றன. மதிராசு சுப்பிரீம்கோர்ட்டார் செய்ததீர்ப்புகளை நான் கண்டதில்லை. அவைவெளிப்படுத்தப்பட்டவைகளுமல்ல. ஆனாலும் அவர்கள் இந்துதருமசாஸ்திர விஷயத்தில் தப்பிப்போனார்கள் என்பது மிகவும்பிரசித்தம். அவ்விடத்து நியாயாதிபதிகளும் வக்கீல்களும் சாஸ்திரமறியாதவர்கள். அவர்களுக்கு உதவிசெய்யப் பண்டிதருமில்லாமையால் அவர்கள் பிழைபடுவது ஆச்சரியமன்று. ஹர்மேஜஸ்டீ ராணியவர்களுடைய பிரிவிகவுன்சிலினுடைய ஜூடிஷியல் கமிடியார்செய்த தீர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்டன. கனமான அந்தச்சபையார் தருமசாஸ்திரத்தைப்பற்றியிருக்கின்ற ஜனங்களுக்கு வெகுதூரத்தில் வாசஞ்செய்பவராய்த். தங்களுடைய வாசஸ்தானத்திலேயே தங்களுக்கு இயற்கையாய்த்தோன்றின அபிப்பிராயங்களை யனுசரித்து அங்கேயே இந்தச்சாஸ்திரத்தை விசாரிக்கப்புகுந்தார்களானதால் சாஸ்திரங்களுக்கு விபரீதார்த்தஞ் செய்யத்தலைப்பட்டார்களென்று எனக்குத்தோன்றுகின்றது. இப்படியவர்கள் மதிராசுவழக்குகள் சிலவற்றிற் செய்ததீர்ப்புகளை நான்விவரித்து உதாகரித்தேன். சாஸ்திரமித்தன்மையதென்று ஏற்படுத்தல் என்னெண்ணமானதால் அதைச்சொல்ல அஞ்சினேனல்லேன்.

ஆனாலும் இந்துதருமசாஸ்திரம் சூக்ஷ்மார்த்தங்களை யுடைத்தாய் எளிதிலறியக்கூடிய தாகாமலிருப்பதுமல்லாமல் மிகவுஞ்சிலருக்கே அதுபடிக்கவாய்த்திருப்பதும் ஒருகிரந்தத்தின் அர்த்தம் மற்றொருகிரந்தத்தைப்பாராதே தெரிந்துகொள்ளுதல் வருத்தமாயிருப்பதும் ஜீவிதர்களான பண்டிதர்களாலல்லாமல் சாஸ்திரம்போதப்படுவது கடினமாயிருப்பதையும் விசாரித்தால் சாஸ்திரம் அன்னியரால் விவகரிக்கப்பட்டிருந்தாலும் இத்தேசத்திலாவது இந்தராஜதானியின் கீழிருக்கிறதேசத்திலாவது வெகுவாய் சாஸ்திரம் நன்றாய் அறிந்துகொள்ளப்பட்டு யதார்த்தமாய்ச் சிலாவணிக்குக்கொண்டுவரப்படுதல் மிகவும் கொண்டாடத்தக்கது.

௧௮௯௯ ௵
சென்னபட்டணம்.

டி - எல் - ஸ்திரேஞ்.

அட்டவணை.

புடாக்ஷரங்கள்.

க - ௩௩௫...............	இப்படி எழுதிய இலக்கங்கள் - ஸர்தாமஸ் - ஸ்திரஞ்சுதுரையவர்களுடைய "எலிமெண்டுஸ்-ஆவ்-ஹிந்துலா" என்பதின் புஸ்தகஇலக்கம் பக்கத்திலிலக்கங்களுக்குக் குறிப்புகள்.
கோ........................	கோல்புருக்குத்துரை.
சத........................	சதர்லாண்டுதுரை.
எ........................	எல்லிஸ்துரை.
ப - ச - தி - அ..........	பங்காளம் - சதர் - திவானி - அதாலத்து.
ச - கோ..................	[மதிராஸ்] - சதர் - கோர்ட்டு.
உ - க - பு - கோ......	உத்தரகண்டம் - புரோவின்சையால் - கோர்ட்டு.
த - க - பு - கோ......	தக்ஷிணகண்டம் - புரோவின்சையால் - கோர்ட்டு.
ப - க - பு - கோ......	பச்சிமகண்டம் - புரோவின்சையால் - கோர்ட்டு.
ஸ - அ - ப..............	சதர் அதாலத்துப்பண்டிதர்கள்.
ஸ - கோ - ப..........	சதர்கோர்ட்டுப்பண்டிதர்கள்.
புரோ......................	புரோசீடிங்சு

ஹிந்து தர்மசாஸ்திர சங்கிரகம்.

I. அத்தியாயம்.

சாஸ்திரவரலாறு.

1. ஹிந்துக்கள் தங்களுடைய சாஸ்திரங்கள் ஈசுவரனால் சொல்லப்பட்டவை என்று சொல்வார்கள். அவைகளின் ஒரு பாகம் சுருதி எனப்படுகிறது, சுருதி என்றால் தருமத்தைக்கேட்பதற்குச் சாதனமென்பது பொருள்-இதுவே வேதம்-அதில் முக்கியமாய் மதசம்பந்தமான விஷயங்கள் சொல்லப்பட் டிருக்கின்றன. அவை பிரமாவினுடைய வாக்கிலிருந் துண்டானபிரகாரம் எழுதப்பட்டனவென நம்புகிறார்கள். மற்றொருபாகத்திற்கு ஸ்மிருதியென்று பெயர் - ஸ்மிருதியென்றால் நினைக்கப்பட்டதென்பது பொருள் - அதில் நியாயசபைக்கடுத்த விவகாரவிதிகள் சொல்லப்படுகின்றன. அவைகள் ரிஷிகளால் வெளியிடப்பட்டன என்று எண்ணுகிறார்கள். (ஒன்று - ௩௧௫ - கோ - மார்லெயின் - முதலாவது புஸ்தகம் - ௧௮௮ - வது வாக்கியம்.) சுருதி - ஸ்மிருதி.

2. விவகாரவிதிகளுக்கு ஸ்மிருதிகள் இவ்விதமாய் மூலங்களாக விருக்கின்றன. இவைகட்கு வியாக்கியானங்கள் உண்டாயிருக்கின்றன. தர்மசாஸ்திரத்தின் எல்லாவிஷயங்களை அல்லது சிலவிஷயங்களை விவரிக்கும் பிரகரணகிரந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விரண்டுவித கிரந்தங்கட்கும் நிபந்தனக்கிரந்தங்களென்று பெயர். (ஒன்று பதினோராவது அத்தியாயம் மார்லெயின் முதலாவது புஸ்தகம் - ௧௯௨ - வது வாக்கியம்.) மூலம் - வியாக்கியானம் நிபந்தன கிரந்தம்.

3. ஸ்மிருதிகள் இருபதெனவும் முப்பத்தாறெனவும் வ

லவிதமாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் மநுஸ்மிருதி முக்கியபிரமாணமாகவும் ஆதிகிரந்தமாகவு மிருக்கின்றது. இதை சர் உல்லியம் ஜோன்சு துரையவர்கள் இங்கிலீசில் செய்திருக்கிறார். மற்ற ஸ்மிருதிகள் ஏற்பாடுகளிலும் விதிகளிலும் மநுஸ்மிருதியைப்போ லிருக்கின்றன - ஆனாலும் மநுஸ்மிருதி தவிர மற்றொன்றும் இப்போது ஸமக்கிரமாக விருக்கவில்லை. மநுஸ்மிருதி கிருதயுகத்திற் குண்டானதாக விருக்கிறது. அந்தந்த யுகத்திற்கும் உரித்தான ஸ்மிருதியுண்டா யிருக்கிறது. லோகாசாரங்களினால் ஸ்மிருதி விதிகள் வேறுபட்டுக் காலாந்தரத்தில் அவைகளின் தாத்பரியங்கள் அப்பிரகாசத்தை யடைந்திருக்கின்றன. ஆகையால் அவைகளின் யதார்த்தபாவமின்னதென்றறிய வியாக்கியானங்களையும் நிபந்தனக்கிரந்தங்களையும் பார்க்கவேண்டியதாக விருக்கிறது. (ஒன்று, பன்னிரண்டு, பதின்மூன்றாவது அத்தியாயம். மார்லெயின் முதலாவது புஸ்தகம் - ௧௯௨ - ௧௯௪ - ௨௦௧ - வாக்கியங்கள்)

தர்ம சாஸ்திர சம்பிரதாயங்கள் ஐந்து.

4. காலக்கிரமத்தினால் தர்மசாஸ்திரத்திற்கு வெவ்வேறு சம்பிரதாயங்கள் ஏற்பட்டன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வியாக்கியாதாவை அநுசரித்துக்கொண்டு ஏற்பட்டது. பங்காள தேசத்தில் கௌடசம்பிரதாயமென்றும், நார்த்து பேஹாரில் மைதில சம்பிரதாய மென்றும், காசீதேசத்தில் காசிசம்பிரதாயமென்றும், மாராஷ்டரதேசத்தில் மாராஷ்டர சம்பிரதாயமென்றும், சென்னைப்பிரதேசத்தில் திரவிட சம்பிரதாயமென்றும் ஐந்து சம்பிரதாயங்களுண்டாயின. சித்தாந்தவிஷயத்தில் இந்தச்சம்பிரதாயங்களுக்கு ஒன்றுக்கொன்று அத்தனை பேதமில்லை ஆனாலும் பங்காள சம்பிரதாயமானது பலவிசேஷங்களால் வேறுபட் டிருக்கிறது. முக்கியமாய்த் தாயபாகவிஷயத்தில் பேதப்படுகிறது. (மார்லெயின் முதலாவது புஸ்தகத்தில் - ௧௮௯ - ௧௯௧ - வாக்கியங்கள்)

5. காசிசம்பிரதாயம் மற்றமூன்று சம்பிரதாயங்கட்கு மூ

லமாகவிருக்கிறது. ஆதலால் பங்காள சம்பிரதாயஸ்தர்களெனவும், காசிசம்பிரதாயஸ்தர்களெனவும், தர்ம சாஸ்திர வியாக்கியாதாக்கள் இரண்டு பெரியவகுப்பாக ஏற்பட்டிருக்கிறார்கள். பங்காளசம்பிரதாயத்தில் தர்மசாஸ்திரத்தின் அபிப்பிராயங்கள் ஹேதுவாதங்களால் திருத்துப்பாடாயிருக்கின்றன. காசிசம்பிரதாயதில் மூலாதாரத்தையே முக்கியமா யநுசரிக்கிறார்கள். (இரண்டு - ௲௧௬ - ௲௧௭ - கோ)

சாசிபங்காள சம்பிரதாயங்கள்.

6. அடியிற் கண்டகிரந்தங்கள் முக்கியமாய் திராவிடசம்பிரதாயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. அவைகளின் ஆசாரந்தான் இந்தக்கிரந்தத்தில் சொல்லப்படுகின்றது.

திராவிடசம்பிரதாயத்தில் பிரதான கிரந்தங்கள்.

முதலாவது—மிதாக்ஷரை - அதற்குக்கர்த்தா விஜ்ஞாநேசுவரயோகியாகையால் அதற்கு விஜ்ஞாநேசுவரீயமென்றும் பெயருண்டு. இது யாஜ்ஞவல்கியஸ்மிருதிக்கு வியாக்கியானம் - இதில் இதரஸ்மிருதி உதாஹரணமுண்டு. இது ஆசாரகாண்டமென்றும், விவஹார காண்டமென்றும், பிராயச்சித்த காண்டமென்றும் மூன்றாக வருக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாவது காண்டத்தில் தாயபாகத்தைப்பற்றிய ஒரு அத்தியாயத்தை மேஸ்தர் கோல்புருக்கவர்கள் இங்கிலீசில் செய்திருக்கிறார். மற்றுஞ்சில பாகத்தை மேஸ்தர் டப்பில்யூ எச்சு மக்கிநாடன் இங்கிலீசில் செய்திருக்கிறார். மிதாக்ஷரை அல்லது விஜ்ஞாநேசுவரீய மென்னப்பட்டது காசிசம்பிரதாயத்தில் பிரபல பிரமாணமாக விருக்கிறது அதனால் அது திரவிடசம்பிரதாயத்திலும் அப்படியே பிரமாணமாகக் கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்தக்கிரந்தத்தின் பெயர் தர்மசாஸ்திரத்திற்கு ஆதிகர்த்தாவான மநுவினுடைய கிரந்தத்தின்பெயரோடு சேர்க்கப்பட்டுச் சகலதருமங்களும்சொல்லப்பட் டிருக்கின்றனவென்று கொண்டு மநுவிஜ்ஞாநேசுவரீயமென்று சாதாரணமாய் சொல்லப்படுகிறது.

இரண்டாவது—ஸ்மிருதி சந்திரிகை - இது தேவநபட்டர்

செய்தது. இது சென்னைப்பிரதேசத்தில் உண்டாய் அங்கேயே விசேஷமாய் ஆசரிக்கப்படுகிறது. இது மிதாக்ஷரைக்கு இரண்டாவதாக மதிக்கப்பட்டிருக்கிறது. இது சிலவிஷயத்தில் மாத்திரம் மிதாக்ஷரையுடன் பேதப்படுகிறது.

மூன்றாவது—சரசுவதீ விலாசமென்பது - ஸ்மிருதிசந்திரிகை போன்றது. அதின்கர்த்தாவின் பெயர் பிரதாபருத்திரர்.

நான்காவது—விவஹார மயூகமென்பது- சிவில்கிரமைனல் கோர்ட்டு நடவடிக்கையைக் குறித்து நீலகண்டராற்சொல்லப்பட்டது. இந்தக்கிரந்தம் மாராஷ்டிர சம்பிரதாயத்தில் முக்கியமானது - இதைமேஸ்தர் போர்ராடையில் இங்கிலீசில் செய்திருக்கிறார்.

ஐந்தாவது—மாதவீயமென்பது இது மாதவாசாரியரால் செய்யப்பட்டது-பராசரஸ்மிருதிக்கு வியாக்கியானம். இவ்வைந்து கிரந்தங்களையும் முக்கிய கிரந்தங்களாக எண்ணிப் பஞ்சக்கிரந்தி யென்று உதாஹரிப்பார்கள்.

ஆறாவது—வரதராஜர் செய்தது வரதராஜீயம். இதுஸ்மிருதி சந்திரிகையோடொத்தது.

ஏழாவது—ஸ்மிருதி முக்தாபலம்- இதற்கு வைத்தியநாத தீக்ஷிதர் கர்த்தாவாகையால் வைத்தியநாத தீக்ஷிதீயமென்றும் பெயருண்டு. இது கர்மானுஷ்டான விதிகளையுணர்த்துவதாயிருக்கின்றது.

எட்டாவது—நிர்ணய ஸிந்து - கமலாகரபட்டராற்செய்யப்பட்டு வைதிக லவுகிக தர்மங்களைவிளக்குகிறது.

ஒன்பதாவது—மந்வர்த்த முக்தாவளியென்பது - குல்லூகபட்டராற் செய்யப்பட்டதால் அதற்குக்கூல்லூக பட்டீயமென்றும்பெயருண்டு. இந்தக்கிரந்தம் மநுஸ்மிருதிக்கு வியாக்கியானம். இது வெகு பிரசித்தியுள்ள கிரந்தம்.

பத்தாவது—நந்த பண்டிதர் செய்த தத்தமீமாம்சையும், தே

வாநந்தபட்டர்செய்த தத்தசந்திரிகையும்- தத்தைக்குறித்துச் சொல்லுகின்றன. இந்தக்கிரந்தங்கள் எல்லாச்சம்பிரதாயங்களிலும் அதுவிஷயத்தில் ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கின்றன. இவைகளை மேஸ்தர் சதர்லன்டு இங்கிலீசில் செய்திருக்கிறார். தத்தமீமாம்சையென்று இன்னுமிரண்டு கிரந்தங்களிருக்கின்றன. ஒன்று ஸ்ரீராமபண்டிதராலும் மற்றொன்று மாதவாசாரியராலும் செய்யப்பட்டன.

7. ஜீமூதவாகநனுற் செய்யப்பட்ட ஜீமூதவாகனம் என்கிற தாயபாககிரந்தம் பங்காளத்தில் தாயபாகத்தைக்குறித்து முக்கியபிரமாணமாக விருக்கிறது. மேஸ்தர் கோல்புருக்கு இதை இங்கிலீசில் செய்திருக்கிறார். பங்காள சம்பிரதாயத்தில் முக்கியகிரந்தம்.

8. ஜகந்நாதீயம் என்கிற இக்காலத்துப் பிரகரணகிரந்தமொன்று சர் உல்லியம் ஜோன்சு துரையவர்களால் ஜகந்நாதபண்டிதனைக்கொண்டு செய்விக்கப்பட்டது. அதை கோல்புருக்கு துரை இங்கிலீசில் செய்திருக்கிறார். இது சாஸ்திரங்களின் பெருந்திரட்டாக விருந்தும் சித்தாந்தங்க ளேற்படாததா யிருக்கிறது. ஏனென்றால் சங்கிரகிக்கப்பட்டிருக்கிற பரஸ்பர விரோதமான வசனங்களில் இன்னது சித்தாந்தவசனமென்று ஏற்படுத்தப்படாமலிருக்கிறது. மொழிபெயர்ப்புச் செய்தவர் தாமே அதன்மேல் மேற்கண்டபடி தோஷாரோபணம் செய்திருக்கிறார். இது பங்காள சம்பிரதாயத்தைப்பற்றியது. ஜகந்நாதீயத்தின் கிரந்தம்.

9. ஹிந்து தர்மசாஸ்திரங்களிலே பங்காளதேச சித்தாந்தங்கட்கும், காசிதேச சித்தாந்தங்கட்குமிருக்கிற வித்தியாசத்தைப் பகுத்தறிகிறதுமன்றித் தற்காலத்தில் லோகாசார மில்லாத சாஸ்திராம்ச மின்னதென்றும் லோகாசாரமுள்ள சாஸ்திராம்ச மின்னதென்றும் கண்டறிய வேண்டியதாக விருக்கின்றது. ஆசார மில்லாத சாஸ்திரம்.

10. ஆதிகாலத்தில் பிராமணர் தங்களுக்குத் தாழ்ந்தஜாதி ஸ்திரீயை விவாகஞ் செய்யலாமென்கிற விதியுண்டு-அதனால் கீழ்வர்ணஸ்திரியை விவாகஞ்செய்தல்.

தாயபாக விஷயத்தில் தாயின் வர்ணத்தின் தாழ்விற்குத்தக்கபடி சந்ததிகட்குப் பாகவித்தியாசம் ஏற்பட்டிருந்தது. இந்தக்கலியில் நிஷேதிக்கப்பட் டிருப்பதால் பிராமணன் தன்சாதிஸ்திரீயைமாத்திரம் விவாகஞ்செய்யலாமே யல்லது தாழ்ந்தஜாதிஸ்திரீயை விவாகஞ்செய்யக்கூடாது. (ஒன்று - ௬௯ - ௪0)

ஜ்யேஷ்டாம்சம்.

11. விபாகத்தில் ஜேஷ்டபுத்திரனுக்கு ஜேஷ்டாம்சமென்று அதிகபாக முண்டாயிருந்தது. இக்காலத்தில் அவ்வாசாரமில்லை. (ஒன்று - க௬௬ - க௯௨ - க௯௬)

துவாதசபுத்திரர்கள்.

12. மேலும் பன்னிரண்டுவித புத்திரர்களுண்டாயிருந்தார்கள். அவர்களில் ஆறுபெயர் ஜநநத்தாலும் மற்றுறுபெயர் பலவிதஸ்வீகாரத்தினாலும் புத்திரரானவர்-முதற்கண்ட ஆறுபெயர்களில் ஒருவன் நியமனம் பெற்ற ஞாதியினு லுண்டானவன்-அவனுக்கு த்வியாமுஷ்யாயண னென்றுபெயர். எனென்றால் இரண்டுபிதாக்களுக்குப் புத்திரனாகவிருக்கிறான். இப்போது ஔரஸனும் தத்தனுமான இரண்டுவிதபிள்ளைகள்மாத்திரம் ஒப்புக்கொள்ளப்படுகின்றார்கள். ஔரசனென்றால் பாரியை யிடத்தில் தனக்குப்பிறந்தவன்-தத்தனென்றால் தானத்தினற் கொள்ளப்பட்டவன். (ஒன்று - எச - எரு - இரண்டு - அ௨ - கோ)

சித்தாந்த விஷயம்.

13. ஆசாரமில்லாத சாஸ்திரங்களின்னு மிருக்கின்றனவானாலும் சொல்லவேண்டிய அவசியமுள்ளவையல்ல.

காசிபங்காள சம்பிரதாயங்கள்.

14. காசி சென்னபட்டண சம்பிரதாயங்களுக்கும் பங்காளதேச சம்பிரதாயத்துக்கு மிருக்கிற பிரசித்த பேதங்களைப்பிரத்யேகமாய் ஒருபிரகரணத்திற் பேசலாகும்.

சாஸ்திரத்தை அனுசரிப்பவர்.

15. இந்துமதத்தை யனுசரித்தவர்களே யல்லாமல் கிரஸ்தவர்களான இந்துக்களும் அவர்கள் வமிசஸ்தரான கிரஸ்தவர்களும் இந்த தருமசாஸ்திரங்களை யனுசரித்து நடந்தார்கள். கிரஸ்துமத கிரந்தங்களில் தாயபாகத்தைக்குறித்த நிபந்தனைகளாவது வேறொரு நிபந்தனையாவது இல்லாமற்போனதனால் கிரஸ்த

வர்களான இந்துக்கள் அனேகநூற்றாண்டு பிடித்துத் தங்கள் பூர் விகர்களுடைய சாஸ்திரத்தையே தேசாசாரத்தின்படி கூடினம ட்டும் வழங்கிக்கொண்டு வந்தார்கள். (ஸ - கோ - கஅ௫அ - அ - நம் - கஅஎ - ல் - தீர்ப்பு)

16. வடமலையாளத்தில் முன்பு இந்துஸ்திரீகளிடத்துப் பிறந்து மகமதீயமதத்தை யனுசரிக்குமாப்பிள்ளை யென்பவர்கள் அவ்விடத்து இந்துக்களைப்போலவே மருமக்கதாய விதியைப் ப லநூற்றாண்டுகளி னின்றும் ஆசரித்து வருகிறார்கள். (ஸ - கோ - கஅ௫௫ - ஸ்பெ - அ - நம் - கஉ௫ - ல் தீர்ப்பு)

17. துர்நீதியாலும் துஷ்டநடக்கைகளினாலும் உறுதியாய் ஜாதிபிரஷ்டரான நீசசாதிமனிதர் சிலர் தற்காலத்தில் இந்துசமு கத்தாரில் உட்பட்டவர்களாகக் கொள்ளத்தக்கினவர்களாய்த்தங் களுக்கு ஒத்தவரையிலும் இந்துதருமசாஸ்திரங்களை யனுசரித்து வருகிறார்கள். அவர்கள் ஆசாரத்திற்குக் கட்டுப்பட்டவர்களே யல்லது சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டவர்களல்லர்.

II. அத்தியாயம்.

விவாஹம்.

கந்நிகையின் விவாககாலம்.

18. கந்நிகை எட்டாவதுவயதில் சாஸ்திரப்பிரகாரம் விவாஹத்துக்குத் தகுதியுள்ளவளாகின்றாள் (ஒன்று ௬௪)

19. ஆயினும் கந்நிகைகள் இரண்டாம் வயதுமுதல் யௌவநம் வருகிறவரையில் விவாகஞ் செய்யப்படுகிறார்கள். (வைத்தியநாததீக்ஷிதீயத்தில் பிரஜாபதிவாக்கியம்)

20. பிராமண கந்நிகை விவாகமாகாமலிருக்க ரஜஸ் வலையாய் விட்டால் அவள் ஜாதிபிரஷ்டையாகிறாள். (வைத்தியநாததீக்ஷிதீயத்தில் பிரகஸ்பதிவாக்கியம்)

பர்த்தாவீட்டுக்குக்கூட்டிப் போகுதல்.

21. விவாகமான கந்நிகை ரஜஸ்வலையாகிறவரைக்கும் தாய்வீட்டிற்றானே யிருக்கலாம் - பின்பு அவளை அவள்பர்த்தா தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகிறான் (ஒன்று ௬௪ - ௬௭)

புருஷனை ஏற்படுத்தும்பாத்தியம்.

22. கந்நிகைக்குப் புருஷனைச்சம்பாதிக்கும்பாத்தியம்முதலில் தந்தையினுடையதாயும் அவனிறந்துபோயிருந்தால் பிதாமகனுடையதாயும் சோதரனுடையதாயும் தந்தையின் சோதரர்களுடையதாயும் தாயாதருடையதாயும் கடையில் தாயினுடையதாயும் வரிசைக்கிரமமாக விருக்கிறது. (இரண்டு ௨௮ - கோ)

23. கந்நிகைக்கு எட்டுவயதாய் அதுமுதல்மூன்றுவருஷம்வரையில் மேற்கண்டவர்கள் புருஷனைச்சம்பாதியாமற் போவார்களாயின் கந்நிகைதானே புருஷனைநியமித்துக் கொள்ளலாம். (ஒன்று - ௬௪)

புருஷர்களுக்குவிவாககாலம்.

24. பிரம, க்ஷத்திரிய, வைசியர்களாகிய இம்மூன்றுமேலானவர்ணத்தார் பிரமசரியவிரதத்தை நிறைவேற்றுகிறவரையில் விவாகஞ்செய்துகொள்ளக்கூடாது (மநு-மூன்றாவதுஅத்தியாயத்தில்-௪-வது சுலோகம்) பிரமசாரியாயிருக்கிறகாலம் உபநய

கமுதல் ஸமாவர்த்தனக் கிரியைமுடியுமளவு-தாழ்ந்த வர்ணத்தா ரான சூத்திரர்களுக்குப் பிரமாசாரியா யிருக்குங்கால மில்லை-ஆ கையால் அவர்கட்கு விவாககால நிஷ்கர்ஷை யில்லை.

25. விவாகம் எட்டுவிதம். பிராம்மம்,தைவம்,ஆரிஷம்,பி ராசாபத்தியம், இவைகள் பிராமணருக்கு அடுத்தவைகள்·இவை கட்கு லாபஉத்தேசமில்லை. காந்தர்வம், ராக்ஷஸம்இவ்விரண்டும் க்ஷத்திரியர்களுக்கு உரியவைகள். காந்தர்வம், பரஸ்பர இச்சை யாலுண்டாவது.ராக்ஷஸம், ஜயத்தாலுண்டாவது. வைசியர்களு ம் சூத்திரர்களும் அநுஷ்டிக்கத்தக்கது ஆசுரம்- அதுதிரவியமூல மாய்க் கந்நிகையைக் கொடுக்கிறவனுடைய சம்மதிபெறத்தக்க தாக விருக்கிறது. கந்நிகையை மோசத்தால் விவாகஞ்செய்வது பைசாசமென்னப்படும். அதுஎல்லாவர்ணத்தாருக்கும் நிஷேத மானது. (ஒன்று - சஉ - சரு - சின்னமக்கிநாட்டன் முதலாவது புஸ்தகம் - ருக - சுய - வது சைட்டு.) எட்டு விதவிவாகம்.

26. அந்தந்த வர்ணத்தாருக்கு உரிய விவாகமிருந்தாலும் உரித்தான விவாகத்தையே செய்யவேண்டுமென்கிற கடமையி ல்லை. ஒருபிராமணன் ஆசுரவிவாகஞ்செய்யலாம்-ஒரு சூத்திரன் பிராம்ம விவாகஞ்செய்யலாம். (குல்லூகபட்டீயம்-மநு-மூன்று வது அத்தியாயம் - உச - வது சுலோகம். ஸ - கோ - கஅருஅ - ஸ்பெ - அ - நம் - ககரு ல் - தீர்ப்பு.)

27. பிராம்மமும் ஆசுரமும் சர்வசாதியிலும் சாதாரணமா கநடந்துவருகின்றன. பிராம்மம் ஒப்புக்கொள்ளப்பட்டதாயும் ஆசுரம் தூஷிக்கப்பட்டதாயும் இருக்கின்றன (ஒன்று, சஉ,சரு, சின்ன மக்கிநாட்டன் முதலாவது புஸ்தகம் - சுய வது சை ட்டு.)

28. விவாகபூர்த்திக்குக் கந்நிகாதானமும் பரிக்கிரகமும் ஸப்த்தபதியும் முக்கியகிரியைகள் - ஸப்த்தபதிக்கிரியை புருஷ ன்செய்யவேண்டியது. ஒருதட்டில் அரிசியைநிரப்பி அதன்மே விவாகத் தை நிறைவேற்றுஞ் செய்கைகள்.

ல் எழுகோடுகீறி ஒவ்வொருகோட்டுக்கு ஒவ்வொரு ஆவர்த்தி யாகக்கந்நிகையின் பாதத்தை எழாவர்த்திபுருஷன் தூக்கிவைத்தல் ஸப்தபதியாம் - இதனுல் இருவர்சிநேக உடன்படிக்கைசெய்து கொள்ளுவதில் அவ்விருவரும் ஒன்ருகக்கூடி எழுஅடிநடக்கிற ஆசாரமுண்டாயிற்று. ஆகையால் ஸாப்த்தபதீனமென்கிறபதம் சிநேகமென்கிற பதத்திற்குப் பரியாய நாமமாய்விட்டது. மேற்கண்டகிரியை விவாகபூர்த்தியைக்காட்டுகின்றது. ஓமமுதலியமற்றைக்கிரியைகள் ஸாமான்னியங்கள். புருஷன் கன்னிகையின்கழுத்தில்மாங்கலியத்தைக்கட்டுதல் ஆசாரத்தினுலுண்டான தேயன்றிச்சாஸ்திரோக்த்தமல்ல. (கிருஹியசூத்ரம்.)

29. மேற்கண்டபடி செய்யும் விவாகத்தினுலேயே புருஷனும் பெண்சாதியும் ஒருவர்க்கொருவர் கட்டுப்பட்டவர்களாவார்களேயன்றி நிஷேகத்தாலன்று - ஸ்திரீ ரஜஸ்வலையானதின் மேல் அவளைப் புருஷன் தன்வீட்டுக்குக்கூட்டிக்கொண்டுபோகிறுன். இந்தவிவாகத்திற்குப்பின்புருஷன் இறந்துபோய்விட்டால்ஸ்திரிக்குவைதவ்யமும் அதையடுத்தகாரியங்களில்கர்த்துருத்வமும் தன்புருஷனுக்கு வரவேண்டியதைப் பற்றிக்கொள்ளுமதிகாரமும் உண்டாகின்றன. (ஒன்று ௩௭-இரண்டு-௩௨-௩௩-௭.)

நிச்சிதார்த்தவிரோதம்.

30. விவாகம் நிச்சிதார்த்தப்படிக்கு நடவாமல் பங்கப்பட்டால் அதனுல் விசேஷஹாநியொன்றுமில்லை.

31. தீராதவியாதிமுதலியகுறைவுகள், தப்புமுறை, கந்நிகையின்மரணம் இவ்விதநியாயமான தடைகளினுல் நிச்சயித்த விவாகம் நிறைவேருவிட்டால் விவாகநிமித்தம் கந்நிகைக்குப் புருஷன் கொடுத்திருக்கின்ற சொத்தை மறுபடி திருப்பிவிடவேண்டியது. நிச்சயிக்கப்பட்டிருந்த புருஷன் நேரிட்டசெலவைக் கொடுத்து விடவேண்டியது. (ஒன்று - ௩அ) நியாயமான தடையுண்டாகாமல் கந்நிகையின்பக்ஷத்தார் மாறுபடுவராகில் அவர்களே நேரிட்டசெலவைக் கொடுக்கக்கடவர்கள்.

32. தம்பதிகளில்யாராவது ஜாதிப்பிரஷ்டர்களாய்விட்டால் இருவர்க்கும் உண்டாயிருந்தசம் பந்தம்நீங்கிவிடும் - அப்படிப்பிரஷ்டையாய்ப்போனவள் ஸ்திரீயானால், அவள் இறந்தாளென்றெண்ணி அவளுக்கு மிருதகிரியை செய்யவேண்டியது. (ஸ்மிருதிசந்திரிகையில்வசிஷ்டவாக்கியம், யாஜ்ஞவல்கியவாக்கியம்.) அவளுக்குப் புத்திரனிருந்தால் அப்படியெண்ணக்கூடாது. அவன் அவளைச்சம்ரக்ஷிக்க வேண்டியவனாகவிருக்கின்றான். ஜாதிப் பிரஷ்டத்துவம்.

33. ஸ்திரீவிபசாரியானால்ஜாதியைஇழந்துவிடுகிறாள். அதனாலே கலியாண சம்பந்தமும் எடுபட்டுப்போகிறது. இந்தநிபந்தனை தாழ்ந்தஜாதிகளிற் சிலஜாதிகட்கில்லை. (ஸ்மிருதிசந்திரிகை) விபசாரஞ் செய்தவனிடத்திலிருந்து நஷ்டத்திற்கு ஈடுபெறப்புருஷனுக்கு அதிகாரம் கிடையாது- எந்தவிஷயத்திலும் நஷ்டத்திற்கு யுக்த்தமான ஈடுகொடுக்கும்படி ஹிந்துதர்ம சாஸ்திரத்தில் விதியில்லை. (இரண்டு - சழ - ௬௬ - உ௬௫ - கோ - ஏ.) ஸ்திரீ விபசாரம்.

34. நபும்ஸகத்வம் மலட்டுத்தனம் அஸஹ்யமான அல்லதுதீராதரோகம் இவைகள்ஸ்திரீபுருஷர்களைப் பிரிக்கத்தகுதியுள்ளவைகள். (ஒன்று-௬௭) ஆனாலும்விவாகநிபந்தனையைப் பேதிக்கமாட்டா. (மநுஒன்பதாவதுஅத்தியாயம்- எ௯-வது-சுலோகம்.) தம்பதிகள் பிரிதற்குக்காரணம்.

35. ஒருபுருஷன் இத்தனையென்கிற மட்டில்லாமல்வெகுஸ்திரீகளைக்கலியாணஞ்செய்யலாம்-ஆனாலும் தகுந்தநிமித்தமன்றிவேறொருபெண்சாதியைப்பெறக்கூடாது. நிமித்தங்களாவன, எப்போதும்எதிரியாயிருத்தல் பாதிவிரத்தியலோபம் துர்க்குணம் வியாதி மலட்டுத்தனம் பத்துவருஷகாலம்பெண்களையேபெறுதல் என்பவைகளாம்-ஸ்திரீயினிடத்தில் தகுந்ததோஷங்களில்லாதிருந்தும் அவளுடைய சம்மதி கிடைத்தால் வேறுவிவாகஞ்செய்துகொள்ளலாம். (ஒன்று - ௬௫ - ௬௯ - ௫உ-௫௯) ஆகிலும் மேற்கண்ட தகுதியுள்ள நிமித்தங்களில்லாதிருந்தும் நடந்தபோ வெகு பாரியைகள்.

ண விவாகம் செல்லாமற்போகாது. (ஸ்மிருதிசந்திரிகையில்தேவலவாக்கியம்)

இரண்டாவதுவிவாககாலத்தில்கொடுக்கும்ஸ்திரீதநம்.

36. இரண்டாவதுவிவாகத்திற்குக்காரணம் பத்தினியினுடையசம்மதியாயிருக்குமாயின் பத்தினிக்குப்பகுமதிகொடுத்துச் சம்மதிபெறவேண்டும். (மிதாக்ஷரா இரண்டாவதுபுஸ்தகத்தில்பதினோராவதுஅத்தியாயத்தில் - ௯௪ - வது-சுலோகம்) இந்தப் பகுமதிக்காகப்புருஷன்மேல் ஸ்திரீவியாச்சியம் செய்யலாம். அவளிடத்தில் துர்நடத்தையுண்டென்பதற்கு அத்தாட்சி உண்டானல் மேற்கண்டஸ்திரீயின் வியாச்சியம்செல்லாது (ஸ்மிருதிசந்திரிகையில் வசிஷ்டயாஜ்ஞவல்கியவாக்கியங்கள்.)

தள்ளப்பட்ட ஸ்திரீயின் வாஸஸ்தலம்.

37. நியாயமாயாவது நியாயமில்லாமலாவது இரண்டாவது விவாகத்தால் நிராகரிக்கப்பட்டுப்போன பாரியை புருஷனுடனிருக்கக்கடவள்-அவன் தன்னை அவள்விட்டுவிடும்படிசெய்தால் அவனுடைய அல்லது தன்னுடையபந்துக்களுடன் இருக்கவேண்டியது. (ஒன்று - ௫௪ - ௫௫) எங்கேஇருந்தாலும் புருஷன் அவளைச் சம்ரக்ஷிக்கவேண்டியவன். (ஸ்மிருதிசந்திரிகையில்-பிரகஸ்பதி வாக்கியம்.)

விதவையின் கலியாணம்.

38. சூத்திரர்களுள் சாஸ்திரக்கட்டுப்பாட்டுக்கு உட்படாமல் வழக்கத்தையனுசரித்துவரும் இழிந்தசாதிகளுக்குத்தவிர விதவைகளுக்கு விவாகவிதி இந்துதர்மசாஸ்திரத்திலில்லை. இந்தியாதேசத்துப் பிரடீவ்ஷியாயசபையார் இந்தச்சாஸ்திரத்தைத்தள்ளி எல்லாவர்ணங்களிலும் மறுகலியாணம் நடத்தலாமென்றும் அவர்களுக்குப் பிறந்தவர்கள் அக்குலவான்களென்றும் வெளிப்படுத்தினார்கள். (௧௮௫௬ - வது - ௧௫ - வது சாசனம்.)

39. விதவைக்கு விவாகமானவுடனே இறந்துபோனபுருஷன் ஆஸ்தியில் காப்பாற்றுமதிகாரமாவது தாயம்பெறுமதிகாரமாவதுபோய்விடும். (௧௮௫௬ - ௧௫ - வது சாசனம் - ௨ - வது-பிரகரணம்.)

வைப்பாட்டிவிவாகம்.

40. தாழ்ந்தஜாதி சூத்திரர்களில் வைப்பாட்டியாயிருந்தவளை விவாகஞ்செய்து கொள்ளலாம். (ஸ - அ - பண்டிதர்கள் - ௧௮௫௪ ௵ - ஜூன் ௴ - ௨௯ ௳.)

41. அப்படிப்பட்ட குறைந்த ஜாதிகளில்விவாகத்திற்குப் பூர்வம்பிறந்த குழந்தைகள் விவாகத்திற்குப் பின்னிட்டு ஜாதியாசாரமுண்டாயிருந்தால் கிரமமான சந்ததியாக ஒப்புக்கொள்ளப்படுகிறார்கள். (ஸ - அ - பண்டிதர்கள் ௧௮௫௪ ௵ ஜநவரி ௴ ௨௯ ௳.)

42. வேளாளசாதியில்வைப்பாட்டி தோஷத்தையடைந்தஸ்திரீயை விவாகஞ்செய்து கொள்ளக்கூடாது. (ஸ - அ - பண்டிதர்கள் - ௧௮௫௫ ௵ மே ௴ ௧௯ ௳.)

தம்பதிகள் ஒரு சாதியாராயிருத்தல்.

43. கலியாணம்செய்துகொள்ளும்தம்பதிகள் ஏகஜாதியாயிருக்கவேண்டும். (ஒன்று - ௪௰)

விவாகத்திற்குத் தகாத முறைகள்.

44. பிராமணர்கள் - ௧௫௫ - கோத்திரமுள்ளவர்களாக விருக்கிறார்கள். (தசநிர்ணயத்தில்ஆபஸ்தம்பசூத்திரம்) ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒவ்வொருரிஷிதலைவனாக விருக்கிறான்-சில க்ஷத்திரியவமிசங்கள் பிராமண ரிஷிகளிலிருந்தும் உண்டாயிருக்கின்றன- மற்றக்ஷத்திரியர்களும் வைசியர்களும் தங்களுடைய புரோகிதர்களுடைய கோத்திரத்தையே வைத்துக்கொள்வார்கள். இந்தகோத்திரங்கள் புருஷவழியாய்வருகின்றன. ஸ்திரீகள்விவாகத்திற்குப்பின் புருஷனுடைய கோத்திரஸ்தர்களாய்விடுவார்கள். (நிர்ணயஸிந்து) இம்மூன்றுவர்ணஸ்தர்களுக்கும் ஸகோத்திரத்தில் விவாகங்கூடாது.(மநுமூன்றுவது அத்தியாயம்-௫ வது சுலோகம்.)

45. இந்தமூன்று உயர்குலத்தாருக்கும் தகப்பன்பக்ஷத்தாரோடு சமானகோத்திரமான கன்னிகையைக்கல்யாணஞ்செய்யக்கூடாது - தாய்முதல்மூந்தினநான்குதலைமுறைவரையிலும் தா

யின்பக்ஷத்தாரோடும் கலியாணம் கூடாது. (நிர்ணயசிந்துவில் வசிஷ்டவசனம்.)

46. சூத்திரர்களுக்குக் கோத்திரமில்லாமையால் அவர்கள் தகப்பன்வமிசத்தில் அவனுக்குமுன் ஆறுதலைமுறையிலும் தாய்வமிசத்தில் அவளுக்குமுன் நாலுதலைமுறையிலும் விவாகஞ்செய்யக்கூடாது. (நிர்ணயஸிந்துவில் வசிஷ்டவாக்கியம்.)

47. இந்தஏற்பாடு உலகத்தில்மிகவும் தப்பிப்போயிருக்கிறது - சாதாரணமாய் எல்லாவர்ணத்திலும் தாய்தந்தைகளுடன் பிறந்தவர்களும் அவர்களுடையசந்ததிகளும் சோதரர்களும்சோதரிகளும் அவர்களுடையசந்ததிகளும் ஆகிய இவர்களோடுமாத்திரம் விவாகசம்பந்தம்தகாதென்கிற முறைபரிபாலனஞ் செய்யப்படுகின்றது. (நிர்ணயஸிந்துவில் காத்தியாயனபராசராதிகளுடைய வாக்கியங்கள். காலாமிர்தத்தில் - சூஉ - வது சுலோகம். தர்மப்பிரவர்த்தியில் வியாக்கிரபாதவாக்கியம்)

ஸ்வீகிருதனுக்குத் தகாதமுறை.

48. தத்துவந்தவன்தான்பிறந்த குடும்பத்திலும் ஸ்வீகாரமான குடும்பத்திலும் கலியாணவிஷயத்தில் முன்சொன்னபடி தகாதமுறையென்று ஏற்பட்டிருக்கிறதை அனுசரிக்கவேண்டும்-அவன்சந்ததிகளும் அப்படியே அனுசரிக்கவேண்டும். (நிர்ணயஸிந்து.)

III. அத்தியாயம்.

தத்து.

49. ஹிந்துக்கள், விவாகஞ்செய்து கொண்டவன் தன்மரணத்திற்குப் பின்பு புத்தென்கிற நரகத்திற்குப் போக வேண்டியவனாக இருக்கிறான் என்றுஎண்ணுகிறார்கள் - புத்திரனுள்ளவனுக்கு அந்நரகமில்லை. ஆகையால் புத்தென்கிறதினின்றும் விடுவிக்கிறவன்புத்திரனாகிறான். (மநு ஒன்பதாவது அத்தியாயம். கநஅ - வது - சுலோகம்.) நரகத்துக்குத்தகுதி.

50. விவாகம்பண்ணிக்கொண்ட ஒருஹிந்துவுக்கு ஒருபிள்ளைவேண்டுமென்றது இதனால் வெளிப்படுகிறது. ஸ்வபாவமாய்ப்பிள்ளையுண்டாகாவிட்டால் ஸ்வீகாரத்தால் ஒரு பிள்ளையைச் சம்பாதிக்க வேண்டுமென்று விதியிருக்கிறது. (ஒன்று. எசு.) பிள்ளையையடையவேண்டிய அகத்தியம்.

51. பிள்ளைபிறந்த மாத்திரத்தில் புத்தெனுநரக விமோசநமுண்டாகிறது. பிள்ளையிறந்தவன், உண்டாயிருந்தபுத்திரனாலேயேநரகத்திலிருந்து விடுபட்டவனாய்விட்டாலும் தனக்குஅபரக்கிரியைசெய்யவும் தன்வம்சத்தை விர்த்திசெய்யவும் ஒருபிள்ளையை ஸ்வீகரித்துக்கொள்ளலாம். (நந்தபண்டிதருடைய தத்தமீமாம்சைமுதலாவதுஅத்தியாயம் - ந - வது-ச-வது-சுலோகம்.) பிள்ளையைப்போக் கடித்துக்கொண்டவனுக்கு ஸ்வீகாரம்.

52. அபரக்கிரியை செய்தலாவது, மரணமடைந்தவனுடைய கோரிகைகள்திரும்படி அவன்பேர்சொல்லிப் பிதுர்தேவதைகளுக்கு அன்னபிண்டங்களையும் ஜலத்தையும் கொடுத்தலாம் - புருஷசந்ததி இல்லாவிடின் பத்தினி, சோதரர்கள் மற்றுமுள்ள பந்துக்கள் தங்கள் பாந்தவியத்துக்குத் தக்கபடி மேற்படிபிண்டோதகதானஞ் செய்கின்றார்கள். புத்திரன்செய்யும் அபரக்கிரியைமாத்திரம் பூர்ணபலமாய் நிறைவேறும் (நந்தபண்டித தத்தகமீமாம்சை - ௧ - ௰அ - ௰௧.) அபரக்கிரியைகள்.

புத்திர சந்ததியில்லாமை.

53. ஒருவனுக்குப் புத்திரனும் பௌத்திரனும் பிரபௌத்திரனு மில்லாமலிருந்தாற்றான் அவன் புத்திரனில்லாதவனுவானென்று சொல்லப்படுவோன்-அவனே தத்துசெய்து கொள்ளவேண்டும் - அவனுக்குப் புத்திரரில்லாத பக்ஷத்தில் அவர்களுடைய சந்ததியார் புத்திரனேடு சமமாகப் பாத்தியஸ்தர்களாவார்கள். (ஒன்று - எஅ - சதர்லாண்டு - உஉஉ.)

54. ஜாதிப்பிரஷ்டத்வத்தினுலாவது பயித்தியத்தினுலாவது தீராதரோகத்தினுலாவது இதரகாரணத்தினுலாவது புருஷசந்ததியார் பாகத்திற்குத் தகாதவர்களாய்விட்டால் அவர்களில்லையென்றே நினைத்துப் புத்திரனில்லாதவனைப்போலத் தத்துசெய்து கொள்ளலாம். (ஒன்று - எஎ.)

ஸ்வீகிருதனிருக்கும் போதுஇரண்டாந் தத்து கூடாது.

55. ஸ்வீகிருதன் ஜீவித்திருக்கும்போது ஸ்வீகாரம் செய்துகொண்டவன் புத்திர யீனனல்லாதவனுதலால் அவன் இரண்டாவது ஸ்வீகாரஞ் செய்துகொண்டால் அது செல்லமாட்டாது. (மூர் - நான்காவது புஸ்தகம் - க0உ - வது வாக்கியம்.)

பத்தினிகர்ப்பிணியாக விருக்கும் போதுஸ்வீகாரம்.

56. பத்தினி கர்ப்பிணியாக விருக்கும்போது தத்துகூடாது - ஏனென்றால் அப்போது புருஷசந்ததி உண்டாகலாமென்றதற்கு இடமிருக்கிறது. (ச - கோ - ஸ்பெ - அ - நம்-உஉ௲ல்-தீர்ப்பு) பின்பு பெண்பிறந்தாலும் அந்தத்தத்து செல்லாது. (ச - கோ - பண்டிதர்கள் - கஅ௲0 ௵ - ஆகஷ்டு௴ - அ௳.)

தத்தன் இறந்தபின்- இரண்டாவது தத்து.

57. ஸ்வீகிருதன் புத்திர ஈனனுய் இறந்துபோய்விட்டால் ஔரசன் இறந்துபோனதற்குச் சமம் ஆகையால் அவனுக்குப்பதிலாய் வேறு ஸ்வீகாரஞ்செய்து கொள்ளலாம் (ஒன்று-எஅ.)

தத்துசெய்துகொள்ளுகிறவன்வயது.

58. கலியாணமானவன் வயது முதிர்ந்தவனுகாமற் போனுலும் தனக்கு மரணகாலம் சமீபித்ததாய்த் தொன்றின பக்ஷத்தில் புத்திர ஸ்வீகாரஞ் செய்துகொள்ளலாம் (ச - கோ - பண். கஅ௲0 - செப்டம்பர்௴ - க௳.)

59. கலியாணமாகாதவன் ஸ்வீகாரஞ்செய்துகொள்ளக்கூடாது. (ச - அ - பண்டிதர்கள் கஅுகஞு ஞூலைமீ களஉ.) கலியாணமில்லாதவனால் ஸ்வீகாரம்.

60. விவாக மில்லாதவன் எவ்வளவுவயதுள்ளவனாக விருந்தாலும் ஸ்திரீ விவாகிதையாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்கட்குப் புத்தென்கிற நரகபயமில்லை ஆகையால் அவர்கட்கு ஸ்வீகாரம் வேண்டியதில்லை-செய்துகொண்டால் செல்லாது.

61. அபத்நீகன்செய்து கொள்ளும் ஸ்வீகாரம் செல்லாது. (சோமநாதருடைய தத்தகமீமாம்சை) ஆனால் இவன் மறுபடி விவாகஞ் செய்துகொண்டு அதன்மேல் புத்திரன் உண்டாகாவிட்டால் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம். விதுரனுடைய தத்து.

62. எந்தக்காரணத்தினாலாவது தாயம் பெறத்தகாதவன் அக்காரணமிருக்கு மளவும் ஸ்வீகாரஞ் செய்துகொள்ளக் கூடாது. (மிதாக்ஷரை - உ - க0 - உ.) பாகத்திற்கு அநர்ஹனால் தத்து.

63. குடும்பத்தில் மரணத்தினாலாவது மற்றெந்தக்காரணத்தினாலாவது ஆசவுச முண்டாயிருக்கும்போது புத்திர ஸ்வீகாரத்துக்கு உரிய வைதிகக்கிரியைகள் செய்யக்கூடாமையால் அப்படிப்பட்ட காலங்களில் புத்திர ஸ்வீகாரஞ் செய்யக்கூடாது. (ச - ப - கஅுஎஞு மார்ச்சிமீ - உகூஉ.) ஆசவுச முள்ளவன்செய்யுந் தத்து.

64. ஒரு ஸ்வீகிருதன் மற்றொருவனை ஸ்வீகரித்துக்கொள்ளலாம். இவ்விதமாக ஸ்வீகாரத்தினால் எதுவரையிலாவது ஒரு வம்சம் விர்த்தி அடையலாம். (ச-அ-பண்டிதர்கள் - கஅசஙுஞு டிசம்பர்மீ உஉஉ.) ஸ்வீகிருதனால் ஸ்வீகாரம்.

65. ஸ்திரீபுருஷர்களுக்குள் ஸ்வீகாரபாத்தியம் புருஷனுக்கே யிருக்கிறது. ஆயினும் ஸ்வீகிருதன், ஸ்வீகரித்துக்கொண்ட தந்தை தாயி ருவருக்கும் புத்திரனாய் அவர்களுக்கு அபரக்கிரியைசெய்து முடிக்கிறான். (ஒன்று - எஅ - எகூ.) புருஷனும் ஸ்ரீயும் செய்து கொள்ளும்ஸ்வீகாரம்.

66. சுமங்கலியாவது அமங்கலியாவது தன்புருஷனுடைய உத்தரவினால் ஸ்வீகாரஞ்செய்துகொள்ளலாம். ஆனாலும்இந்த சுமங்கலிஅமங்கலிகள்ஸ்வீகாரம்.

ஸ்வீகாரம் புருஷனுடையதேயன்றி ஸ்திரீயினுடையதன்று - (ஒன்று - எக.)

67. ஸ்வீகாரம் குடும்பத்தின் பொதுவான சொத்திற்கு விரோதமானதா யிருந்தாலும் ஸ்வீகாரஞ்செய்துகொள்ளும்படி ஸ்திரீக்கு அநுஜ்ஞை கொடுக்கும்போது அநுஜ்ஞை கொடுக்கிறவன் தன்தகப்பனுடைய அல்லது தாயாதர்களுடைய சம்மதி பெற்றுக்கொள்ள வேண்டுவதில்லை - (ச-அ - பண்டிதர்கள்-கஅசரு௵ ஜூலை மீ கூ ; கஅருO௵ ஜூன் மீ உஉ.)

68. ஸ்வீகாரஞ் செய்துகொள்ளும்படி புருஷன்ஸ்திரீக்கு எப்போதாவது அநுஜ்ஞை கொடுக்கலாம். (ம - க - பு - கோ-பண்டிதர்கள் - கஅஉரு௵ மார்ச்சிமீ அஉ)

69. ஸ்வீகாரஞ்செய்து கொள்ளும்படி புருஷன் தன்ஸ்திரீக்கு உத்தரவு கொடுக்கும்போது இன்னானை ஸ்வீகரிக்கவேண்டுமென்று காணவேண்டியதில்லை. (ஸ்திரஞ்சு ரிபோர்ட்டு முதலாவது புஸ்தகம் - கூக - வது சைட்டு.)

70. அந்த அநுஜ்ஞை லிகிதமூலமாக விருக்கவேண்டுமென்பது அகத்தியமில்லை - (ஒன்று - அ0.)

71. அநுஜ்ஞை பெற்றவிதவை அநுஜ்ஞைக்கு எவ்வளவு காலம் பின்னிட்டாவது அந்தப்பிரகாரம் நடக்கலாம். (ச - அ - பண்டிதர்கள் - கஅசரு௵ - அக்டோபர்மீ - ருஉ ; கஅருக௵ - ஜூலாய்மீ - கஎஉ.)

72. புருஷனுடைய அநுஜ்ஞை யில்லாத பெண்பிள்ளைக்கு அவனுடைய ஜ்ஞாதிகள் சுபாவமாய் சம்ரக்ஷகர்களாகையால் புத்திர ஸ்வீகாரத்திற்காக அவளுக்கு அநுஜ்ஞை கொடுக்கலாம். (ஒன்று - எக - அ0.) இவ்விதமான உத்தரவுகளில் யாதொன்று மில்லாமல் ஸ்திரீ தன்னிஷ்டப்படி செய்துகொள்ளும் ஸ்வீகாரஞ் செல்லாது. (ச - கோ - கஅ௩௯ - ரி - அ - நம் - கஅ - ல் தீர்ப்பு.)

73. ஸமாம்ச பாகிகளான ஞாதிகளெல்லாரும் சமானராகையால் புருஷனுடையஞாதி யொருவன்மாத்திரம் அநுஜ்ஞை கொடுப்பது போதுமானதல்ல. அவர்கள் யாவரும் சேர்ந்து செய்யவேண்டியதே முக்கியமாக இருக்கிறது. (ச - அ - பண்டிதர்கள் - கஅ௫ச ௵ - அக்டோபர்மீ - கூவ.)

74. விதவை புத்திரனை ஸ்வீகாரஞ்செய்துகொள்ளப்பொதுவாயதிகார மடைந்திருப்பாளாயின் முதல் ஸ்வீகாரபுத்திரன் இறந்தபின் இரண்டாம் ஸ்வீகாரங்கூடும் என்று சிலர்நினைப்பார்கள். (க - எஅ ; ச - பண் - கஅ௫௬ ௵ - ஜனவரி - கஎவ.) அந்த அதிகாரம் முதல் ஸ்வீகாரத்தோடே முடிவடைந்ததனல் மற்றொரு ஸ்வீகாரஞ் செய்துகொள்ள லாமென்பது அங்கீகரிக்கத்தக்கதன்று - இதுபிரமாண மில்லாத அபிப்பிராயம்.

ஸ்திரீ இரண்டாவது ஸ்வீகாரம்செய்துகொள்ளுதல்.

75. ஒருவிதந்து பாலையாக விருக்கையில் ஸ்வீகாரம் செய்துகொள்ளுகிறதற்குக் காலவியவஸ்தையில்லை - ஏனென்றால் புருஷனை புத்தெனப்படுநரகத்திலிருந்து விடுவிக்கவேண்டிய அகத்தியமுண்டாயிருக்கிறது, இந்தப்பாலையாகிய விதந்து ஸ்வீகாரம்செய்து கொள்ளும் விஷயத்தில் அவளுடைய சம்ரக்ஷகர்களுடைய சம்மதியென்னும் ஆதரவு அவளுக்குக் கிடைத்திருக்க வேண்டும்.

வயதில்லாத விதந்துவால் ஸ்வீகாரம்.

76. ஸ்வீகாரபரிபூர்த்திக்குப் பிள்ளையின்தானமும்பரிக்கிரகமும் முக்கியம்- தானமில்லாமல் பரிக்கிரகமாத்திரம்செல்லாது- (ஒன்று - கூடு - ச - அ - பண்டிதர்கள் - கஅசச ௵-ஜனவரிமீ- உகவ.)

ஸ்வீகாரத்திற்கு முக்கியக்கிரியை.

77. தாயின்சம்மதியன்றித் தகப்பன்பிள்ளையை ஸ்வீகாரம்கொடுக்கலாம். (ஒன்று - அக.)

தாயின் அனுமதி நிமித்தமில்லை.

78. ஸ்திரீயானவள் அகத்தியமானவிஷயத்தில் புருஷனுடைய அநுமதியுண்டானதாகப்பாவித்துத்தத்து கொடுக்கலாம்-புருஷனிறந்துபோயிருந்தாலும் தீர்க்ககாலமாய்த் தேசாந்தரம் போ

தாய்தத்து கொடுத்தல்.

ய் அல்லது சந்நியாசியாய் விட்டுஅல்லது ஜாதிபிரஷ்டனாய்விட்டு இவ்விதமாய் மரணமடைந்திருந்தாலுமே தாய்தத்துகொடுக்க அதிகாரமுள்ளவளாக விருக்கின்றாள். (ஒன்று - ௮௧ - ௮௨ - சதர்லாண்டு - ௨௨௫)

சோதரன் தத்து கொடுத்தல்.

79. ஒருசோதரன்மற்றொருசோதரனைத்தத்துகொடுக்கக்கூடாது. ஏனென்றால் சோதரர்கள்யாவரும் சமானமானவர்கள். (௪ - அ-பண்டிதர்கள் - ௧௮௪௪ ௵ - பிபர்வரி௴ - ௨௧௨ ; ௪- அ - ௧௮௫௧ ௵ - அப்பீல் - நம் - ௨௦ ல் - தீர்ப்பு.)

பித்ருவ்யனால் தத்து.

80. பித்ருவ்யன்தத்து கொடுக்கக்கூடாது. (சிற்றூர் - ஜி-கோ - பண்டிதர்கள் - ௧௮௨௯௵ - அக்டோபர் ௴ - ௨௯.)

தந்தைதாயால்தத்து.

81. தந்தைதாய் இவ்விருவர்களில்தந்தைமுதலிலும் அவனில்லாவிட்டால் தாயும் பிள்ளையைத் தத்துகொடுக்கத்தக்கவர்கள்.

ஸ்வீகிருதன் ஸ்வீகர்த்தாவோடு சமஜாதியாயிருக்கவேண்டும்.

82. ஸ்வீகிருதனாகப் போகிறபிள்ளை ஸ்வீகர்த்தாவினுடைய ஜாதியாகவிருக்கவேண்டும். அல்லாவிட்டால் ஸ்வீகர்த்தாவிற்கு அபரக்கிரியைசெய்யவும் அவன்சொத்தையடையவும் தகான். (ஒன்று-௮௨) புத்தென்னபடு நரகத்திலிருந்து விடுவிக்கவுமாட்டான்.

83. ஸ்வீகிருதன் ஸ்வீகர்த்தாவோடுசமகோத்திரனாகவிருக்கவேண்டும்-இதுதடுக்கக்கூடாதவிதியல்ல. (இரண்டு - ௯௮- ௯௯ - கோ - ௭ - சதர்லாண்டு - ௨௨௯ - ௨௨௪.)

தத்துக்குத் தகாத முறையுள்ளவர்கள்.

84. மூல ஸ்மிருதிபிரகாரம் ஸ்வீகிருதனாகப்போகிறபிள்ளை ஸ்வீகர்த்தாவிற்கு ஔரஸபிரதிபிம்பனாக விருக்கவேண்டும். எப்படியென்றால் ஸ்வீகிருதன் ஸ்வீகர்த்தாவுக்குப் பிறக்கத்தக்கவனாகவேண்டும். (நந்த பண்டிதருடைய தத்தகமீமாம்சையில்-௫-வது- அத்தியாயம்-௰௯-வதுசுலோகம்.) அப்படிசொன்னதினால் ஸ்வீகிருதனுடையதாயை ஸ்வீகர்த்தா நியாயமாய் விவாகஞ்செய்யத்தகுதியிருக்கவேண்டுமென்றது கருத்து. (ஒன்று-௮௯-சதர்லாண்டு - ௨௨௯.)

85. இந்தவிதியை யநுசரித்துச் சோதரனையும் பிதுருசோதரனையும் மாதுலனையும் தௌஹித்திரனையும் சோதரிகுமாரனையும் ஸ்வீகரிக்கத்தகாது. (ஒன்று - அகூ.)

86. புத்திரியினுடைய புத்திரனையும் சோதரியினுடைய புத்திரனையும் ஸ்வீகரிக்கச் சூத்திரர்கள் தகுந்தவர்களாகையால் மேற்கண்டவிதியிலிருந்தும் அவர்கள் விசேஷமாய் நீக்கப்பட்டிருக்கிறார்கள் - (ஒன்று - அகூ - அச.)

புத்திரிசோதரிகளுடைய பிள்ளைகளைத் தத்துப் பெறுதல்.

87. ஆவச்யகமானால் எல்லாஜாதியாரும் மேற்கண்டபடி ஸ்வீகாரஞ்செய்து கொள்ளலாம். (ச-அ - புரோ - கஅகூகூ௵-ஜூன்மீ' சவ, உ௫வ.)

88. ஆவச்யகமில்லாமலே மேற்கண்டபடி ஸ்வீகாரஞ்செய்துகொள்ளும் ஆசாரம் திராவிடதேசத்தில் உண்டாயிருக்கிறது. (ச - அ - புரோ - கஅகூகூ ௵ - ஜூன்மீ' - சவ - உ௫வ)

89. வியவகாரமயூகத்தில் இந்த ஆசாரம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. (ச - அ - பண்டிதர்கள் - கஅகூக௵ பிபர்வரிமீ' உ௫வ) வைத்தியநாத தீக்ஷிதீயத்திலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. (ச-அ-பெரியபண்டிதர்-கஅ௫௫௵ மேமீ'மிகூவ.)

90. சோதரனை ஸ்வீகரித்தல் செல்லாது.(ச-அ-கஅ௫க௵ ஸ்பெ - அப்பீல் நம்பர் - உ௰ ல் - தீர்ப்பு.)

சோதரனை ஸ்வீகரித்தல்.

91. பத்நியினுடைய சோதரனைஸ்வீகரிக்கிற ஆசாரமும் உண்டாயிருக்கிறது. (ஸ - கோ - கஅ௫சா - ஸ்பெ - அ - நம் - கூஎ ல் - தீர்ப்பு) ஸ்வீகாரமானது புருஷன் நிமித்தமே யல்லாது ஸ்திரீநிமித்த மல்லவென்கிற ஹேதுவினால் மேற்படி ஸ்வீகாரம் ஒப்பேறலாம். ஆகையால் ஸ்வீகாரத்திற்குத் தள்ளுபடியானமுறை புருஷனுடைய பந்துக்களிலென்றேற்படுகிறதேயன்றி ஸ்திரீயினுடைய பந்துக்களுக்குளல்ல.

பத்நிசோதரனை ஸ்வீகரித்தல்.

92. ஸ்வீகிருதன் ஸ்வீகர்த்தாவுக்கு நியாயமாய் ஔரஸனுக்கு கூடுமானவனாயிருக்க வேண்டுமென்று கருத்தாகிறது. திரா

தகாத முறைகளை எடு

த்துக்காட்டியது.

விடதேசத்தில்மாத்திரம் மேற்கண்டநிபந்தனைக்கு வழுவுதலான ஆசாரமுண்டாயிருக்கிறது- எப்படியென்றால் அவ்விடத்தில் புத்திரியின் குமாரனையும் சோதரியின் குமாரனையும் ஸ்வீகரிக்கிறார்கள். சூத்திரர்களில் எவ்விடத்திலும் புத்திரியின் குமாரனையும் சோதரியின் குமாரனையும் ஸ்வீகரிக்கலாம். இதரவர்ணத்தார் எவ்விடத்திலும்ஆவசியகமுண்டானால்அப்படிசெய்துகொள்ளலாம்.

ஜேஷ்ட புத்திரன் அல்லது ஏக புத்திரன் ஸ்வீகாரம்.

93. ஜேஷ்டபுத்திரனை அல்லது ஏகபுத்திரனைஸ்வீகரித்தல்கூடாது. (ஒன்று - ௮௫)

94. இந்த நிஷேதம்விதியென்றுமாத்திரம் யோசிக்கப்படுகிறது. ஏகபுத்திரனை அல்லது ஜேஷ்டபுத்திரனைக்கொடுத்துவிடுகிறதினால்கொடுக்கிறவனுக்கு எவ்வளவுதோஷமுண்டானாலும் இப்படிப்பட்ட ஸ்வீகாரம் நடந்தால் ஒப்புககொள்ளப்படும். (ஒன்று—௮௭-௪-௮-புரோ-௧௮௨௪ ௵ ஜூலைமீ ௩௧௳; ௧௮௨௫ ௵ ஜூலைமீ ௨௮௳)

மேற்கண்ட நிஷேதம் சோதரனுடைய ஏகபுத்திரஸ்வீகாரத்தையும் ஜேஷ்ட புத்திரஸ்வீகாரத்தையும் அநுசரிக்கவில்லையென்று புரோசிடிங்சில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறியபடி புத்திரன் துவியாமுஷியாயணனாகவிருக்கிறான். அதாவது ஜநகபிதாவும் ஸ்வீகார பிதாவுமாகிய இரண்டு பிதாக்களுக்கும் புத்திரனாக விருக்கிறான். (ஒன்று - ௮௬.)

இப்போது பிரஸ்தாவத்திலிருக்கிற நிஷேதத்தின் ஏற்பாட்டுக்கு பலமான ஆக்ஷேபமிருக்கிறது. எப்படி என்றால் பிள்ளையின் ஜநநமே புத்தென்கிற நரகத்திலிருந்து தகப்பனை விடுவிக்கிறதென்கிறதினால் ஜேஷ்டபுத்திரன் அல்லது ஏகபுத்திரன் பிறந்த உடனே அவன் தகப்பனுக்கு விமோசனத்தை யுண்டாக்கிறான். ஆகையால் மேற்படி புத்திரன் மறுபடியும் விமோசனத்தை யுண்டாக்கமாட்டான். புத்திரனுடைய ஜநநத்துக்கிருக்கிற வலிமை அவனுடைய ஜநகபிதாவிஷயத்தில் விநியோகமாய் விட்ட

து வேறொருவனுக்கு விநியோகப்படமாட்டாது - மற்றொருவனுக்குப் புத்தென்கிறநரகத்திலிருந்து இரண்டாந்தரம் விமோசனத்தை யுண்டாக்கமாட்டாது. பூர்வமே நிர்த்தாரணமாய் விட்டபிரயோஜனமானது ஜநகபிதாவிடத்திலிருந்துநீக்கப்பட்டு மற்றொருவனுக்குக் கொடுக்கப்படமாட்டாது. ஆகையால் ஏகபுத்திரனுடைய அல்லது ஜேஷ்டபுத்திரனுடைய ஸ்வீகாரமானது ஸ்வீகாரபிதாவைப்புத்தென்கிறநரகத்திலிருந்து மீட்கப்பிரயோஜநப்படமாட்டாது. இந்தத்தத்து நிஷ்பலமாகையால் செல்லமாட்டாது. துவியாமுஷியாயணனென்கிற ஆதரவினால் சோதரனுடைய ஏகபுத்திரனை அல்லது ஜேஷ்டபுத்திரனை ஸ்வீகரிப்பது கூடுமென்று விசேஷவிதி ஏற்பட்டிருக்கிறதென்றால் துவியாமுஷியாயண னென்கிற ஏற்பாடு எப்படிப்பட்ட தானாலும் ஒப்புக்கொண்ட ஆசாரமென்று ஸ்தாபிக்கத் தக்கவளவு பிரபலமாய் நடந்துவரவில்லை. இந்த ஆசாரம் அரிதாயிருக்கிறது - மெய்யை நூறுபிரமாணமானாலு மாற்றமாட்டா என்கிற வசனத்தைக்கொண்டு ஷை ஸ்வீகாரத்தையாவது சித்தாந்தத்தையாவது போஷிக்க எத்தனப்படுகிறார்கள். (ஜீமூதவாகனம் - உ - ருO) இவ்வசனம் பங்காளதேசத்தாருக்கேயல்லாமல் காசீசம்பிரதாயஸ்தருக்குக் கிஞ்சித்தும் சம்மதமன்று-இதனால் ஜ்யேஷ்டபுத்திரனாவது ஏகபுத்திரனாவது ஸ்வீகாரத்துக்குத் தக்கவனல்லவென்பது திரண்டகருத்து - ஆதலால் முடிவுக்கு இந்தஸ்வீகார நிஷேதம் தள்ளத்தக்கதன்று - இந்தஸ்வீகாரம் எப்படிநடந்தாலும் செல்லமாட்டாது.

95. மேல் நிஷேதப்பட்டவர்களல்லாத புருஷசம்பந்தமான சமீபபந்து ஸ்வீகாரத்திற்கு மிகவும் தகுந்தவன். அவன் சோதரனுடைய புத்திரனாக விருக்கலாம் - இந்தநிரூபணம் உசிதமெனக்காட்டியதே யன்றிப்பலமான விதியல்ல. (ஒன்று - அ௯ - அ௫.) ஸ்வீகாரத்திற்கு உசிதமானவன்.

வைப்பாட்டி புத்திரனை ஸ்வீகரித்தல்.

96. வைப்பாட்டிக்குப் பிறந்தபுத்திரன் ஜாதிவரம்பிற்கு அப்புறப்பட்டவனுகையால் அவனை ஸ்வீகரிக்கக்கூடாது. (ச-அ - பண்டிதர்கள் - கஅருரு௵ - ஜூலைமீ - கஅவ.)

புத்திரிகா ஸ்வீகாரம்.

97. புத்திரிகாஸ்வீகாரம் ஒத்துக்கொள்ளப்படவில்லை. (ச அ - புரோ - கஅசஎ ௵ - நவம்பர் மீ - உகூவ) ஏனென்றால் புத்திரி புத்தென்கிற நரகத்திலிருந்து மீட்கமாட்டாள் (குல்லூக பட்டர் - மநு - கூ - வது அத்தியாயம் - கநூ - வது - சுலோகம்.)

வேசியின் ஸ்வீகாரம்.

98. வேசி, தான் சேவிக்குங்கோயில் அதிகாரிகளின் கட்டளைபெற்று ஒரு பெண்ணை ஸ்வீகரிக்கலாம், பிள்ளையை ஸ்வீகரிக்கக்கூடாது. (ச - அ - பண்டிதர்கள் - கஅருரு௵ - செப்டம்பர் மீ - கஉவ)

99. வேசிகள் ஹிந்துக்களுடைய ஜாதிநிபந்தனைக்கு உட்பட்டவர்களல்லர் - அவர்கட்கு விவாஹமில்லை. வேசித்தொழிலால் ஜீவனம்--இழிகுலத்தாரோடு சம்பந்தப்படுவதுதவிர வேசைத்தனத்தால் ஜாதியவமானமில்லை- இவர்கட்குப் புருஷனில்லாமையால் புருஷவர்க்கத்தில்ஸ்வீகாரங்கூடாது. அவர்கள்தங்களுடைய சொத்தைக்கொடுக்கும் பொருட்டுத்தாங்களே ஸ்வீகரித்துக் கொள்ளலாம். இவர்களுக்கு ஸ்திரீபரம்பரைபிரதானமானதால் புத்திரிகா ஸ்வீகாரமேசெய்யத்தக்கது-வேசை புத்திரியில்லாதவளாகவிருந்தாலே ஸ்விகாரஞ் செய்துகொள்ளலாம் அவளுக்குப்புத்திரனுண்டு இல்லையென்பது நிமித்தமில்லை.

ஸ்வீகாரத்திற்குக் காலம்.

100. ஒரு விதர்து புருஷன் நிமித்தம் ஸ்விகரித்துக்கொள்ளும் விஷயத்தில் ஸ்விகிருதனுகப் போகிறபிள்ளை புருஷன்ஜீவித்திருக்கிறகாலத்தில் பிறந்தாகிலும் கர்ப்பத்திலிருப்பவனுகவாகிலும் இருக்க வேண்டுமென்றது ஆவசியகமன்று (ச - அ - பண்டிதர்கள் - கஅசக௵ - அக்டோபர்மீ - அவ ; கஅருக௵- ஜூலைமீ க0வ)

101. பிரம்மக்ஷத்திரியவைசிய வர்ணங்களில் உபநயந

மான பிள்ளையை ஸ்வீகரிக்கக்கூடாது. (ஸ - கோ - கஅகசஹு ரி - அ - நம் - சஅ ல் - தீர்ப்பு.)

உபநயநத் திற்குப் பூர்வம்.

102. இந்த உபநயந கர்மமானது சிறுவன் பிரமசரிய ஆச்சிரமத்தில் பிரவேசித்தான் என்பதைக் காட்டுகிறது. உபநயநமென்றால் ஸமீபித்தல் என்று அர்த்தம். வேதாத்திய யனத்துக்காக ஆசாரியனைக்கிட்டுகிறு னென்பது கருத்து - சவுள முதலிய கர்மங்கள் இதற்குமுன் நடக்கின்றவை - இவை நடந்துவிட்டதால் தத்துக்கு ஆடங்கமில்லை. ஸ்வீகாரம் செய்து கொள்ளுகிறவனுடைய குடும்பத்தில் மறுபடி இந்தக்கிரியைகளைச் செய்துகொள்ளலாம் - உபநயநத்தைத் தள்ளி மறு உபநயநம் நடக்கக்கூடாது. உபநயநம் நடந்திருந்தால் ஸ்வீகாரத்திற்கு அது பலமானதடையாக விருக்கும்.

103. பிராமணர்களில் - அ - வயதுக்குள்ளும் க்ஷத்திரியர்களில் - கக - வயதுக்குள்ளும் வைசியர்களில் - கஉ - வயதுக்குள்ளும் உபநயநம் நடக்கவேண்டும். (ச - கோ - கஅகசஹு அப்பீல் - நம் - கஅ ல் - தீர்ப்பு.)

விவாஹத் திற்குப் பூர்வம்.

104. உபநயநம் சூத்திரர்களுக்கில்லாததினுல் அவர்களில் விவாகத்திற்குமுன் எப்போதாவது ஸ்வீகாரம் நடக்கலாம். விவாகத்திற்குப் பின்னிட்டு ஸ்வீகரிக்கக்கூடாது. (ஒன்று-கூக.)

105. விவாகிதஸ்திதி வித்தியார்த்திஸ்திதிக்குப் பின்னிட்டதாகையால் விவாகிதன் எந்தவர்ணத்திலும் ஸ்வீகரிக்கப்படமாட்டானென்பது திருடம். (ஒன்று - கூரு - நோட்டு - கக.)

ஸ்வீகார நடவடிக்கை.

106. ஸ்வீகாரத்திற்கு லிகிதம் வேண்டுவதில்லை - பந்துக்கள் வந்திருக்கவேண்டும் - தேச அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும் - ஓமம் மந்திரபடநம் நடத்தவேண்டும். இந்தச்சடங்குகள் செய்யாமல் தப்பிப்போனுலும் ஸ்வீகாரத்திற்கு விரோதமில்லை - தத்தஓமம் மாத்திரம் தப்பக்கூடாது - தத்த ஓமமும் தானமும் பரிக்கிரகமும் வெளிப்படச்செய்தலே தத்துக்கு அதியா

வசியக லக்ஷணமாக விருக்கின்றன. (ஒன்று - கூரு - கூஎ - இர ண்டு - ககஅ - எ.)

107. தத்த ஓமம் தப்பினால் முதல் மூன்றுவர்ணத்தார்செ ய்யும் தத்து செல்லாமற்போய்விடும். சூத்திரருடைய தத்து இ ந்த நிபந்தனைக்குட்பட்டதல்ல.

108. இந்தயுகத்தில் நிராடங்கமாய்த் தானஞ்செய்தலைவிட வேறு எந்தச்சடங்கும் தத்தை உறுதிப்படுத்தமாட்டாது-கிரய பூர் வகமாகச்சிறுவனை ஸ்வீகரித்தல் அசாஸ்த்ரீயமென்பது திருடம்- அப்படிசெய்த ஸ்வீகாரம் நிலைக்கமாட்டாது. (ஒன்று - எரு - இ ரண்டு - கரூ - கஅஅ - ககூ.)

பத்தினியி ன் சன்னிதா னம்.

109. தத்துக்குக் கொடுத்தவனும் வாங்கினவனும் முக்கி யர்களாகையால் அவர்களுடைய பத்தினிகளிருக்கவேண்டியது முக்கியமல்ல. (ஸ - அ - கஅரூக ஹு - அப்பீல் - நம் - அல்- தீர்ப்பு) தத்த ஓமத்திற்குப் பத்தினிக ளிருக்கவேண்டியது அகத் தியமாகையால் புருஷனோடு பத்தினிகள் கூடவிருக்கவேண்டிய து ஆவசியகம். (மிதாக்ஷரை இரண்டாவது காண்டம் முதலா வது அத்தியாயம் - ரு வது - சுலோகம்.).

நிஷேதிக்க க்கூடாத கா லம்.

110. புத்திரஸ்வீகாரத்துக்குச் சம்மதிப்பட்டவன் பின்பு அதைத்தடுக்கக்கூடாது. (ஸ - கோ - கஅடுக - ஸ்பெ - அ - நம் - உஅல் - தீர்ப்பு.)

111. ஸ்வீகாரம் செல்லாதென்று விவாதங் கொண்டுவரு கிறவர்கள் காலவரையறைச்சட்டத்தை அனுசரித்துத் தகுந்தகா லத்தில் வழக்குக்கொண்டுவரவேண்டும். (ஸ - கோ - கஅடுரூ - ரி - அ - நம் - சகூ லே - தீர்ப்பு.)

ஸ்வீகிருத னுடைய பா த்தியம்.

112. ஸ்வீகாரமானது ஸ்வீகிருதனை அவன் ஜநகபிதாவி ன் சம்பந்தத்திலிருந்து அப்புறப்படுத்தி ஸ்வீகர்த்தாவுக்குச் சுபா வத்திற்பிறந்தபிள்ளை எப்படியோ அப்படி எல்லாவிதத்திலும் பி ள்ளையாகச்செய்விக்கிறது. (ஒன்று - சக - கூச.)

113. ஸ்வீகார பிதாவினுடைய குடும்பத்தில்தாயபாக பாத்தியம் அப்பிரதிபந்தமாயும் சப்பிரதிபந்தமாயும் ஸ்வீகிருதனை யடைகிறது. (ஒன்று - கஎ) அப்போது ஸ்வீகிருதன் தன் ஜநகபிதாவின் யாவத்து சொத்தின்பாத்தியத்தை இழந்துபோகின்றான். (மநு - ஒன்பதாவது - அத்தியாயம்- கசஉ- வது - சுலோகம்.)

114. ஜநகபிதாவின் புருஷசந்ததிநசித்தால் உடனே அவனுடைய ஆஸ்தியைத்தத்தபுத்திரன் அடைவான் என்றுசதர்க்கோர்ட்டுப்பண்டிதர்கள் சொல்வார்கள் (கஅ௫எ - ஆகஷ்டு - உஎ.) அந்தவழக்கம் அந்தக்கோர்ட்டாரால் தள்ளப்பட்டிருக்கிறது. (ஸ - கோ - கஅ௫௫ - ஸ்பெ - அ - நம் - ககஉ ல் - தீர்ப்பு.)

115. ஒருவிதந்து புத்திரஸ்வீகாரஞ் செய்துகொண்டவுடனே இறந்துபோன புருஷனுடைய சொத்து அவளிடத்திலிருந்து ஸ்வீகிருத புத்திரனைப்போய்ச் சேருகிறது. (ஒன்று - க0க.)

116. வேசியினால் தத்துசெய்து கொள்ளப்பட்ட பெண் தன்னைத் தத்துசெய்துகொண்ட தாயின் ஜீவிதகாலத்தில் தாயத்தைப் பெறத்தக்கவளல்லள். (ஸ - கோ - பண் - கஅ௫எ ஞ - செப்டம்பர் - க0உ.)

117. ஒருஸ்வீகிருதபுத்திரன் தன்னுடைய ஸ்வீகாரத்தகப்பனுடைய குடும்பத்தில் தகாதமுறையாளை விவாகஞ்செய்யக்கூடாது. (ஒன்று - உக) அப்படியேதான்பிறந்த குடும்பத்திலும் செய்யக்கூடாது. (நிர்ணயசிந்து.) ஸ்வீகிருதனுடையவிவாஹத்திற்கு முறை யில்லாதவர்கள்.

118. தத்துபுகுந்தமாத்திரத்தில் ஸகோதரத்தன்மை விடாதாகையால் அவன்தன் ஸகோதரனைத் தத்துசெய்துகொள்ளக்கூடாது. (ஸ - கோ - கஅ௫அ ஞ - ஸ்பெ - அ - நம் - உஎ ல் - தீர்ப்பு.) தான் ஜநகபிதா குடும்பத்திற்றனே யிருந்துவிட்டால் அந்தக்குடும்பத்தில் தான் ஸ்வீகாரஞ்செய்ய யார் தனக்குத் தகாதமுறையாரோ அவர்களைத்தான் ஸ்வீகிருதனுன பிற்பாடும் ஸ்வீகாரஞ்செய்து கொள்ளக்கூடாது. ஸ்வீகிருதனுடையஸ்வீகாரத்துக்கு முறையில்லாமை.

செல்லமாட்டாத ஸ்வீகிருதனுடையவிபத்தி.

119. ஸ்வீகாரத்திற்காகத் தான் தாநமாகப்போய்ப் பிறந்த குடும்பத்தைவிட்டுச் சித்தமாய் அப்புறப்பட்டதினுல் ஸ்வீகாரஞ் செய்துகொண்ட குடும்பத்தில் இவனுடைய ஸ்வீகாரம் சாஸ்திரப்பிரகாரம் செல்லாவிட்டாலும் தான்பிறந்த குடும்பத்திற்கு மறுபடிபோய்ச் சேரமாட்டான்-அந்தக் குடும்பதாயபாகத்திற்கும் உரியவனுகமாட்டான். இரண்டுகுடும்பத்திலும் தாயபாகத்தை இழந்து தன் ஸ்வீகாரத்தகப்பனுல் போஷிக்கப்படுவதற்கு மாத்திரம் உரியவனுயிருக்கிறுன். (ஒன்று - அஉ.)

ஸ்வீகாரம் மாறமாட்டாது.

120. ஒருதரஞ்செய்யப்பட்ட நியாயமான ஸ்வீகாரம் தள்ளுண்டுபோகமாட்டாது. இரண்டு - ககக - கோ.)

ஸ்வீகாரத்திற்குப் பின்பிறந்தபிள்ளை.

121. ஒரு பிள்ளையை ஸ்வீகரித்துக்கொண்ட பிற்பாடு ஔரஸன் உண்டானுல் ஸ்விகிருதனுக்கு நாலிலொருபாகந்தான் கிடைக்கும். (எல்பர்லிங்-எக. மிதாக்ஷரை முதலாவது புஸ்தகம் - கக வது - அத்தியாயம் - உ௪ வது - சுலோகம்.) நாலிலொன்றென்பதற்கு அர்த்தம் ஔரசனுக்குக்கிடைக்கும் சொத்தில்நாலிலொன்று. சொத்தை ஐந்துபாகமாகப்பாகித்து அதில் ஸ்வீகிருதன் ஒன்று பெறவேண்டியது - பிறந்தவன் நாலுபெறவேண்டியது. (ஹைகோ - க௮௫க௯ - ரி - அ - நம் - ௲கல் - தீர்ப்பு.

122. பின்பு எத்தனை பிள்ளைகள்பிறந்தாலும் மேற்கண்டபடிதான் பாகஞ்செய்யவேண்டியது. (ஸ - கோ - பெரியபண்டிதர் - க௮௫௯ - செப்டெம்பர்மீ - கஉ.)

IV. அத்தியாயம்.

கார்டெயன்ஷிப்.

பாலகத்வ காலப்ரமாணம்.

123. பால அவஸ்தை - கசு வது - வயதில் நீங்கிவிடுகிறது. (இரண்டு - எசு - கோ.)

124. அது புருஷனுக்கு எப்படியோ அப்படியே ஸ்திரீக்குமாம். (ஸ - அ - பண்டிதர்கள் - கஅருரு ஹூ-சூன்மீ ககவ.)

125. கோர்ட்டாப்வார்டிசாருடைய காரியங்களுக்காக-கஅ - வயதுவரையில் பாலியமுண்டென்று சட்டம் விதிக்கப்பட்டிருக்கிறது. (கஅ0ச ஹூ - ருவது - சட்டம் - சவது- பிரிவு.)

சம்ரக்ஷகர்கள்.

126. பாலர்களுக்குச் சுபாவத்தில் சம்ரக்ஷணை கர்த்தர்கள், முதல் தந்தை பின்பு தாய் ஜேஷ்டசோதரன் பிதுருசம்பந்திகள் மாதுருசம்பந்திகள் - சம்ரக்ஷகனை ஏற்படுத்த வேண்டுமென்றால் துரைத்தனத்தார் ஏற்படுத்தவேண்டியதா யிருக்கிறது. சுபாவத்தில் ஏற்பட்டிருக்கிற எந்தச் சம்ரக்ஷகனையாவது தள்ளிப்போடத்துரைத்தனத்தாருக்குத்தகும். (சின்னமக்கிநாட்டன் முதலாவது புஸ்தகம் - க0ரு - க0ச வது - சைட்டு.)

127. சம்ரக்ஷிக்குங்கடமை, தந்தையைச் சேர்ந்தவர்களுக்கு முன்பு தாயைச்சேர்ந்தவர்களது என்று சதர்க்கோர்ட்டுப்பண்டிதர்கள் சொன்னார்கள். (கஅருக - மார்ச்சி - கசு) இக்கருத்துக்குச்சரியான சாஸ்திரபிரமாணமில்லை - பாலனுக்குப்பிரியமான பந்துக்கள் சம்ரக்ஷகர்களா யிருக்கவேண்டுமென்னு மொருவசனத்தைப்பிடித்துத் தாயைச்சேர்ந்தவர்கள் தந்தையைச்சேர்ந்தவர்களினும் பிரியமானவர்களென்று சம்பாவித்துக்கொண்டு பாலனுடைய நன்மை தீமைகளைத் தாயைச் சேர்ந்தவர்களுடைய அதீனத்தில் வைக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இவ்வபிப்பிராயம் இருக்கக்கூடுமானதேயன்றிப் பிரபலமான ஹேது

க்களை யுடைத்தானதன்று-ஆதலின் தந்தையைச்சேர்ந்தவர்க்கு உள்ள சுபாவமான சுதந்திரம் போகமாட்டாது.

128. தகப்பன் சம்ரக்ஷகனாக விருக்கப் பயித்தியமுதலியவைகளால்அசக்தனாகவிருந்தால் அந்தக்கடமை தாயினுடையதாய்விடும். (ச-கோ- புரோ - ௧௮௬௯-செப்டெம்பர்மீ ௧௮௨.)

129. உயிலால் சம்ரக்ஷகனை நியமிக்கத் தர்மசாஸ்திரத்தில் ஆதரவில்லை. (இரண்டு - எ௬ - கோ.)

பாலனுடைய செய்கை.

130. தன்சொத்தைக்குறித்துப் பாலியன்செய்யும் எந்தச் செய்கையும் செல்லமாட்டாது. (மிதாக்ஷரா விவகாரகாண்டம்.)

மயினருக்கனுகூலச் செய்கை

131. பாலியனுடைய ஆஸ்திக்குக் கேடுவரத்தக்ககாரியமாவது அவன் கொடுக்கவேண்டியதற்காகச் செய்யும் காரியமாவது செல்லத்தக்கதல்ல, அகத்தியமானதாயும் அவனுடைய லாபத்தைக்குறித்ததாயு மிருக்கிறதானால் செல்லும். (குல்லூகபட்டர் - மநு - எட்டாவது அத்தியாயம் - உஎ வது - சுலோகம்.)

மயினருடைய உத்தரவாதம்.

132. தகுந்தவயது வருமளவும் புத்திரன் தகப்பன்கடனுக்கு உத்தரவாதியல்லன். (இரண்டு - உஎ௬ - கோ) கார்டெயன்மூலமாய் மயினர்கள் வியாச்சியம் செய்யவும் அவர்கள்மேல் வியாச்சியம் கொண்டுவரவும் தகுமென்று கோர்ட்டார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். (இரண்டு - அ0 - கோ.)

சமுதாய சொத்தில் மயினருடைய பங்கு.

133. குடும்பசொத்தில் பாகங்கிடைக்க வேண்டுமென்று மயினருக்காகக் கார்டெயன் வியாச்சியம் கொண்டுவரலாம் - மயினருடைய லாபத்திற்கு விரோதமாய்ச்சொத்திற்குக்கெடுதி நேரிடுவதா யிருக்கவேண்டும். இல்லாவிடிற் கூடாது. (ஸ - கோ- ௧௮௫0ஞ - ரி - அப்பில் - நம் - ௭௬ ல் - தீர்ப்பு.)

ஸ்திரீபராதீநை.

134. ஸ்திரீ ஸ்வாதீநையாயிருக்கத் தகுந்தவளல்லள்-எப்போதும் பராதீநையாகவே யிருக்கவேண்டியவள். (ஒன்று - உ௪௯ - சின்னமக்கிநாட்டன் முதலாவது புஸ்தகம். ௧0௪ வது - சைட்டு.)

சில ஜாதிகள் தவிர.

135. வண்ணார் இடையர் சாணார் நட்டுவர் வாணியர் இவர்கள் முதலான வேலைசெய்துசீவனஞ்செய்கிற ஜாதிகளில் குடும்பசம்ரக்ஷணைக்கு அநுகூலர்களான ஸ்திரீகள் உடன்படிக்கைசெய்து கொடுக்கலாம் - அதுகுடும்ப நிமித்தமாக விருக்கவேண்டும் - அந்த உடன்படிக்கைக்குப் புருஷன் உட்படத்தக்கவன். (ஸ்மிருதிசந்திரிகையில் யாஜ்ஞவல்கிய நாரதவசநங்கள்.)

விவாஹமில்லாதஸ்திரீ.

136. விவாகமாகாத ஸ்திரீ எவ்வளவு வயதுள்ளவளாயினும் தகப்பனுடைய சம்ரக்ஷணைக்குட்பட்டவள் - தகப்பனில்லாவிடின் அவனுடைய ஞாதிகளுடைய சம்ரக்ஷணைக்குட்பட்டவள். (சின்ன மக்கிநாட்டன் - முதலாவது புஸ்தகம் - ௧௦௬ - வது சைட்டு.)

விவாஹமானஸ்திரீ.

137. விவாகமான ஸ்திரீ புருஷனுடைய சம்ரக்ஷணைக்குட்பட்டவள் - அவனில்லாவிடின் புத்திரன் பௌத்திரன் பிரபௌத்திரன் புருஷனுடைய ஞாதிகள் தன்பிதுருசம்பந்திகள் மாதுருசம்பந்திகள் இவர்களுடையசம்ரக்ஷணைக்குட்பட்டவள். (சின்னமக்கிநாட்டன் முதலாவது புஸ்தகம் - ௪௦௭ வது - சைட்டு.)

மயினருடைய சொத்துக்கு ஸ்திரீ மானேஜர்.

138. பாலியனுடையசொத்திற்கு ஏற்பட்டிருக்கிற மானேஜரெனப்படுங்காரியநிர்வாஹகையானவள் தன்னுடைய சம்ரக்ஷணைகர்த்தாக்களுடைய சட்டங்களுக்கு உட்பட்டவளாகவிருக்கவேண்டும். (சின்னமக்கிநாட்டன் - முதலாவது புஸ்தகம்-௧௦௫-வது - சைட்டு) தகுந்தவயதுள்ளவளுடைய செய்கைக்கு அவளுடைய சம்ரக்ஷகனது சம்மதியசம்மதிகளைக் கோர்ட்டார் ஒத்துக்கொள்ளும் நடக்கையில்லை.

V. அத்தியாயம்.

சொத்து.

ஸ்தாவரஜங்கமசொத்துக்களின்னவை யென்பது.

139. சொத்தானது ஸ்தாவரமென்றும் ஜங்கமமென்றும் இருவகைப்படும் - பூமி வீடுகள் குளங்கள் நதிகள் முதலான எவை சுருபத்தால் அப்புறப்படுத்தப் படாதவைகளோ அவை ஸ்தாவரங்களென்று சொல்லப்படும் - மற்றையசொத்துக்கள்யாவும் ஜங்கமங்களென்னப்படும் - கிரயத்தால் அல்லதுதானத்தால் அல்லதுசாசுவதகுத்தகையால் சம்பாதிக்கப்பட்ட சாசுவதபோக்கியமானபூமிகள் ஸ்தாவரங்கள் அல்லது அசையாப்பொருள்கள் என்னப்படும். சாசுவத பர்வானாப்பிரகாரம் கிடைத்தருசுமுகளும் வருமானங்களும் அசையாப் பொருளென்றேற்பட்டிருக்கின்றன - அவைகளுக்கே நிபந்தங்களென்றுபெயர் - ஒற்றிகளும் காலநிஷ்கர்ஷையுள்ள குத்தகைகளும் ஜங்கமங்கள் அல்லதுஅசையும் பொருள்களென்றேற் பட்டிருக்கின்றன - பயிர்கள் காட்டுமிருகங்கள் பக்ஷிகள் மீன்கள் இவைகள் சாசுவதபோக்கியமாக அநுபவிக்கப்படுகிற சொத்திற்கலந்தவை யானபோதிலும் அவை அசையும்பொருள்களென்றே சொல்லப்படும்.

பிதுரார்ஜித சுவார்ஜிதங்கள்.

140. சொத்தானது பிதுரார்ஜிதம் என்றும் ஸ்வார்ச்சிதமென்றும் பின்னும் இருவகையாய் வகுக்கப்பட்டிருக்கிறது. அசையும்பொருளானாலும் அசையாப்பொருளானாலும் எந்தச்சொத்து பித்ரியமாக அடையப்பட்டதோ அல்லதுபிதுர்திரவிய மூலமாய்ச் சம்பாதிக்கப்பட்டிருக்கிறதோ அது பிதுரார்ஜித மென்னப்படும் - பிதுர்த்திரவிய சகாயமில்லாமல் தன்சொந்த பிரயாசையினாலே எந்தச்சொத்து சம்பாதிக்கப்பட்டதோ அது ஸ்வார்ஜிதமென்று சொல்லப்படும்.

141. பிதுர்திரவியத்தி லிருந்து கொடுத்திருந்ததற்குப்பதி லாகக் கிடையாமல் சும்மாக் கிடைத்தசொத்து ஸ்வார்ஜிதம். (எல்பர்லிங் - கூஉ.)

142. தன் பூர்விகர்களால் போக்கடிக்கப்பட்டுப்போய்ப் பிதுர்திரவியசகாயமில்லாமல் எந்தச்சொத்து தன்சொந்தப்பிரயா சையால் மறுபடி ஆர்ச்சிக்கப்படுகிறதோ அது ஸ்வார்ஜிதம்-இந் தமறுசம்பாத்தியம் தாயாதர்களுடைய உத்தரவுபெற்றுவது ஷெ சொத்துக்களில் அவர்கட்குண்டாயிருந்தசம்பந்தத்தை அவர்கள் விட்டுவிட்டார்களென்கிற சங்கதிதெரிந்துகொண்டாவது செய் திருக்கவேண்டும். இந்தச்சொத்தைமறுபடிஅடைகிறதற்குத்தாயா தர்கள் சிரத்தையுள்ளவர்களாக விருக்கிறார்களென்று தெரிந்தும் மேற்படிசொத்தை முன்னடி சம்பாதித்திருந்தால் அவர்களுடை ய பாத்தியத்தைமோசம் பண்ணுவதற்காக என்று எண்ணவேண் டும். மேற்கண்டபடி சம்பாதித்தசொத்து தாயாதர்களுக்கும்பொ துசொத்தென்று யோசிக்கப்படுமே யல்லது ஸ்வார்ச்சிதமாகமா ட்டாது. (ஒன்று - கூகூ - உகள.)

143. பிதாக்களால் போதிக்கப்பட்டிருந்த கல்வியினலே சம்பாதிக்கப்பட்டசொத்து பித்ரியத்தினலே சம்பாதிக்கப்பட் டதென்று யோசிக்கப்படும் - ஆகையினலே சொந்தப்பிரயாசை யினலே சம்பாதித்தபோதிலும் அதுபிதுரார்ஜிதமே. (திருநெல் வேலி - கோ - பண்டிதர் - கஅஉக௵ - ஆகஷ்டுமீ களஉ) இந் தச்சாஸ்திரத்தினுடைய அபிப்பிராயம் நேரானதன்று - நீதிக்கும் யுக்தத்திற்கும் விரோதமானது ஆதலால் இது ஆசாரத்துக்கு உத வாது.

144. பிது ரார்ஜிதசொத்து, பிரிக்கப்பட்டதென்றும் பிரி க்கப்படாததென்றும் இருவகைப்படும். அவிபக்த விபக்தசொத் துகள்.

145. மேலும் விவாகமான அல்லது விவாகமாகாத ஒரு ஸ்திரீக்குச் சொத்துகிடைத்தால் அந்தச்சொத்தைக்குறித்துப்பிர ஸ்திரீதநம்.

த்தியேக சாஸ்திரநிபந்தனை உண்டாயிருக்கிறது. அந்தச்சொத்துக்கு ஸ்திரீதநமென்றுபெயர். ஸ்திரீதநமென்பது பரிபாஷையல்ல. அந்தப்பதத்தினாலேயே அது இன்னதென்றுதெரிகிறது. புருஷனாலேயாவது தன்னுடைய அல்லது புருஷனுடைய பந்துக்களினாலே யாவது தாநமாய்க்கொடுக்கப்பட்டு அல்லது பித்ரியமாய்க்கிடைத்து அல்லது கண்டெடுக்கப்பட்டு ஸ்திரீகளுக்குக்கிடைத்த யாவத்துசொத்துக்கும் ஸ்திரீதநமென்றுபெயர். (மிதாக்ஷரை இரண்டாவது புஸ்தகம்–கக-வது அத்தியாயம்-க—ரு-வது வாக்கியங்கள்.)

146. அவளுடைய சொந்தப்பிரயாசையினாலே யாவது அவளுடைய பந்துக்களல்லாத இதரர்களாலே யாவது அவளுக்கு எந்தச்சொத்துகிடைக்கிறதோ அதுவெல்லாம் அவளுடையதல்ல - அது அவன்புருஷனது. (ஸ்மிருதிசந்திரிகை.)

147. வழக்கப்படி ஐந்துநாளையகலியாண நடந்தபோது பொன்முடிப்புமுதலாகக்கணவன்மனைக்குப் போமளவும் தகப்பன்தாய் சோதரர் என்னுமிவர்களாலே கொடுக்கப்பட்டிருக்கிற அசையும்பொருள் அசையாப்பொருள்களுக்குச் சௌதாயிகமென்றுபெயர். அந்தச் சொத்தினிடத்தில் புருஷனுக்காவது சந்ததியார்களுக்காவது சம்பந்தமில்லாமல் அவளுக்குச் சர்வசுவாதந்திரிய முண்டாயிருக்கிறது. (மிதாக்ஷரை இரண்டாவது புஸ்தகம் - கக - வது அத்தியாயம் - ௬ - வது வாக்கியம்; சரஸ்வதீவிலாசம்; விவஹாரமயூகம் - ௪ - ௭ - க; ௪ -க0-அ.)

காலாவதி நிபந்தனை.

148. சம்பந்தமில்லாமல் முழுகிப்போயிருந்த சொத்தை மறுபடி அடைகிறதற்கு இவ்வளவுகாலத்துக்குள் வியாச்சியங்கொண்டு வரவேண்டுமென்று ஹிந்துசாஸ்திரத்தில் விதித்தகால அவதியானது இங்கிலீஷ் சட்டங்களினால் தள்ளுண்டுபோய்விட்டது. (கஅ௫௯-௵ - க௪ - வது ஆக்ட்டு.)

VI. அத்தியாயம்.

விநியோகம்.

அசையாப் பொருளில் பிதாவின் பாத்தியம்.

149. புத்திரர்களோடு விபாகம்செய்துகொள்ளாத பிதா அசையாப்பொருள் பிதுரார்ஜிதமானாலும் சுவார்ஜிதமானாலும் அதைத்தன் புத்திரர்களுடைய அநுமதியில்லாமல் விநியோகஞ் செய்யக்கூடாது. (இரண்டு - கூ - கக - கோ) புத்திரர்களில்லாவிட்டால் அவர்களுடைய புத்திர பௌத்திரர்களுடைய சம்மதிவேண்டும் - இவர்களும் தகப்பனோடு சமமான அதிகாரமுள்ளவர்களாக விருக்கின்றார்கள். (மிதாக்ஷரை முதலாவதுபுஸ்தகம்- க வது - அத்தியாயம் - உஎ வது - வாக்கியம்.)

150. இவர்கள் பாலர்களாயிருக்க. தள்ளக்கூடாத நிமித்தம் உண்டாயிருந்தால் அவர்கள் சம்மதிகொடுத்ததாக எண்ணவேண்டியது. (ஒன்று - உ0.)

151. சூத்திரனாகிய தகப்பன், வைப்பாட்டியின் மக்கள் சந்ததியிற் சேர்ந்தவர்களானாலும் அவன்ஜீவிதகாலத்தில் அவர்களுக்குப் பங்குகிடைப்பது அவனிஷ்டத்தின்மே லிருக்கிறபடியினால் அவர்கள் சம்மதியில்லாமலே விநியோகப் படுத்தலாம். (ஸ - கோ - ப - கஅகூஉ ௵ — மார்ச்சிமீ - அ௳.)

152. புத்திரசந்ததியில்லாத ஒருவன்தன்னுடைய ஸ்தாவரசொத்தை அது பிதுரார்ஜிதமானாலும் ஸ்வார்ஜிதமானாலும் மற்றை இதரபாத்தியஸ்தர்களுக்கு விரோதமாகவிருந்தாலும் தன் இஷ்டப்படிக்கு விநியோகப்படுத்தலாம். (இரண்டு - சகூச-கோ.)

ஜங்கமசொத்தைக் குறித்து.

153. ஜங்கமசொத்து பிதுரார்ஜிதமானாலும் சுவார்ஜிதமானாலும் தனக்குப்புத்திர சந்ததியிருந்தாலும் இல்லாவிட்டாலும் அதில்தான் சர்வசுவதந்திரன். (மிதாக்ஷரை - முதலாவது புஸ்தகம் முதலாவது அத்தியாயம் - உச – வது - வாக்கியம்.)

குடும்பசம்ரக்ஷணைக்குப் போதுமானதை வைத்துக்கொள்ள வேண்டும்.

154. சம்ரக்ஷிக்கவேண்டியவர்களைச் சமரக்ஷிக்கிறதற்காகவும் புத்திரிகளுடைய விவாகத்திற்காகவும் போதுமானதை வைத்துக்கொள்ளாமல் ஸ்தாவரசொத்தையாவது ஜங்கமசொத்தையாவது கொடுத்துவிட்டால் அதுசெல்லமாட்டாது. (ஒன்று-கஅ, சகூ; ஸ-அ-பண்டிதர்-கஅருஉவரு-எப்பிரல்மீ க0உ, உகூஉ.—ஸ-கோ-கஅக0-ஸ்பெ-அ-நம்-ககஎ ல்தீர்ப்பு.)

தாயாதர்களால்விநியோகம்.

155. பிதாவும் புத்திரனுந்தவிர மற்றைத்தாயாதர்கள் யாவரும் பரஸ்பர ஸம்மதியினால் கொடுத்தாற் செல்லுமேயல்லாமல் பரஸ்பரசம்மதியில்லாமல் ஸ்தாவர ஜங்கமசொத்தைக் கொடுத்துவிட்டாற்செல்லாது. (ஒன்று-ககூ.)

156. தாயாதன் தனக்கு மிகவும் ஆபத்துநேர்ந்தபோது பொதுசொத்தில் சிறிது விக்கிரயஞ்செய்யலாமேயல்லாமல் இன்னதென்றுகுறித்து விக்கிரயிக்கக்கூடாது. (ஸ-கோ-சஅருகூ-ஸ்பெ-அ-நம்-கஉங-கஅங ல்தீர்ப்புகள்.) வாங்கினவன் விற்றவனுடைய பங்கோடேதிர்ப்த்தியடையவேண்டும்-அவ்வளவுக்கு வழக்குக்கொண்டுவரலாம்.

157. தாயாதர்கள் பாலர்களாயிருந்தபோது தங்களுக்கு அகத்தியமாய் நடக்கவேண்டிய செய்கைக்கும் பிரத்தியக்ஷமாய்த் தங்களுடைய பிரயோஜநத்திற்காகச் செய்யப்பட்ட செய்கைக்கும் அங்கீகாரப்படவேண்டியது. (ஒன்று-உ0ங.)

விபக்த்தர்களால் விநியோகம்

158. பாகத்துக்குப்பின்பு தாயாதர்கள் எப்படிப்பட்டவர்களானாலும் தம்தம்பாகத்தை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தாமலே கொடுத்துவிடலாம். (ஸ-அ-பண்டிதர்கள்-கஅஙகூவரு நவம்பர்மீ கூஉ.) ஆனால்-கசகூ-கருசா-பிரகரணங்களிற் சொன்னநிபந்தனைகளைக் கடக்கக்கூடாது.

விதந்துவினால்.

159. தன்புருஷனிடத்திலிருந்து கிடைத்தசொத்தை விதந்துவானவள் பிழைத்திருக்கிறவரைக்கும் தான் அனுபவிக்கலாம். பின்பு அதுபிந்நினபாத்தியஸ்தரையடையும். (ஒன்று-உசாகூ.)

160. விதவை புருஷனுடையகடனைத்தீர்க்கிறதற்காகவும் அவளுடைய ஜீவநத்திற்காகவும் புத்திரிகளுடைய விவாகத்திற்காகவும் புருஷனுடைய ஆத்துமா கடைத்தேறுதற்காகவும் வேண்டியசெலவு ஆஸ்தியைக்கொண்டே நடத்தவேண்டியதானதால் அகத்தியமானபோது ஸ்தாவரத்தை உபயோகப்படுத்தலாம். மற்றவிஷயங்களில் முக்கியதாயாத ரனுமதியில்லாமற் செய்த விநியோகம் செல்லமாட்டாது. (க - உசசு - உசஎ - எல்பர்லிங்கு - எச.)

161. இவற்றிற்கு உதாரணம். புத்திரிகளும் தௌஹித்திரர்களும் இருக்க ஒருவிதந்து புத்திரிகளுடைய அனுமதியின்மேல்மாத்திரம் விநியோகஞ் செய்யக்கூடாது - தௌஹித்திரர்களுடைய அநுமதியும் வேண்டும். (ச - அ - கோ - பண்டிதர்கள் - கஅ௱கஞ - எப்பிரல்மீ ௲உ)

162. ஜங்கமசொத்து விஷயத்தில் அவளுக்கு அதிகஸ்வாதந்தரியமிருக்கிறது. (ஒன்று - உசஎ - உசஅ) தான்ஸ்வதந்தையாய் ஜங்கமசொத்தைக்கொடுத்து விடலாம். (ஸ - அ - கோ - கஅசகூ௵ ஸ்பெ அப்பீல் ந-கு-ல்-தீர்ப்பு.)

163. தாரபரம்பரைவரையிலும் தாயாதர்களில்லாவிட்டால் எப்படிகிடைத்த சொத்தானாலும் அதுஎவ்வித சொத்தானாலும் அதை விநியோகிக்கிற விஷயத்தில் விதந்துவுக்குயாதொரு ஆடங்கமுமில்லை.

164. பண்டிதர்கள் சொன்னபடியே சந்தேகமின்றிச் சாஸ்திரமுமிருக்கிறது. அதை ஒப்புக்கொண்டு சதர்க்கோர்ட்டார் - கஅ௱எ௵ - க0௲ - க௲கூ - நம்பர்களுடைய அப்பீல்களில் தீர்ப்புசொல்லி யிருககிறார்கள். அந்தத்தீர்ப்புகள் சீமையப்பீலிலேராணியவர்கள் பிரிவிகவுன்சலோடுசேர்ந்த ஜுடிசியல் கமிட்டியார் - கஅசுக௵ - டிசம்பர்மீ - உகஉ - செய்ததீர்ப்பினால் தள்ளப்பட்டன. (காவலி வெங்கடநாராயணப்பாமேல் பந்தர்கல

சட்டர் கொண்டுவந்த விவாதம்.) விதந்து குறையான அதிகாரமுள்ளவள் - துறவிபோலே பிழைத்திருக்கவேண்டியவள் - தன்போகத்துக்காக இச்சைவந்தபடி தன்பொருளைச் செலவுசெய்யக்கூடாது - மற்றை ஹிந்துப்பெண்களைப்போல் பரதந்திரையாயிருக்கவேண்டியவ ளல்லது சுதந்திரையாயிருக்கக்கூடாது. பந்துக்கள் இல்லாதபோது அரசனுடைய சம்ரக்ஷணையிலிருக்கவேண்டியது - எப்போதும் நிர்ப்பந்திக்கப்பட்ட ஆஸ்தியுள்ளவளா யிருக்கவேண்டும். அவளைநிர்ப்பந்திக்கும்படியானசந்ததியார் இல்லாதபோது அவ்வதிகாரம் அரசனது ஆகையால் உடையவனில்லாதபொருளில் அரசனுக்குள்ள சுதந்திரத்திற்கு விரோதமாய் சந்ததியில்லாத விதவை விநியோகிக்கக்கூடாதென்று சொல்லியிருக்கிறார்கள்.

அரசன் தாயாதரில்லாத பொருளில் தனக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு உடையவனில்லாத பொருளைச்சுவாதீனப்படுத்திக்கொள்ளலாமேயல்லாமல் அதற்குமேலான காரியங்களைச் செய்யுமதிகாரத்தை வஹித்துத் தானொருதாயாதனாகத் திரவியத்தை விநியோகிக்கக் கூடாதென்று திரவியாதிகாரியோடேயே விவாதப்படலாமென்பதுபுதுமதமாயிருக்கின்றது. உடையவனில்லாத பொருளை ஆக்ஷேபிக்கும் அதிகாரந்தவிர ஒருபக்ஷமான வாதமாயும் சாஸ்திர அபிப்பிராயத்துக்கு விரோதமாயு மிருக்கின்ற பிரிவிகவுன்சலர்களுடைய தீர்ப்பு சாஸ்திரத்தைக்கொண்டு ஆராயுமளவில் நிற்கமாட்டாது.

தாயமாவது பந்துத்துவத்தைப்பற்றி வந்ததிரவியம் - அதாயிகதிரவியம் என்றால் தாயாதர் இல்லாததிரவியம் - அது அரசனைச் சேருமென்று மிதாக்ஷராயிற் சொல்லப்பட்டிருக்கிறது. (மிதாக்ஷரா - க - க - உ ; உ - க - உஎ.) மேலும் விதவை தாயாதருடைய சம்மதியில்லாமல் தானவிக்கிரயாதிகளினாலே ஸ்தாவரதிரவியத்தைக் கொடுக்கக்கூடாதென்று மாதவீயத்தில் பிருகஸ்

பதி வசனமிருக்கின்றது - அவ்வர்த்தமே மயூகம் ஸ்மிருதிசந்திரி கையிவைகளில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் விதவை கொடுக்கக்கூடாதென்று நிஷேதித்தது தாயாதர்பொருட்டேயன்றி அரசன்பொருட்டன்று - என்றால் முதல் திரவியாதிகாரிக்குப்பந்துக்களாய் அவனுஸ்தியில் சொத்துவமடையத்தக்கவர்கள் நிமித்தமேயல்லது அன்னியனாய்வந்து அதாயிக திரவியத்தைமாத்திரமே அடையும் அதிகாரியின் நிமித்தமல்ல என்று வெளிப்படையா யேற்படுகின்றது.

165. புருஷன் ஜீவித்திருக்கிறபோது. ஸ்திரீயினுடைய சொத்துபுருஷனுடைய அதிகாரத்துக்குட்பட்டிருக்கிறது. சௌதாயிகமென்கிற சொத்தைமாத்திரம் அவள்தன்னிஷ்டப்படிக்குச்செலவழிக்கலாம். (ஸ்மிருதிசந்திரிகை.) ஸ்திரீயினுடைய சொத்து.

166. சௌதாயிகசொத்தினால் செய்யப்படுங்கடன்கோடன்முதலிய செய்கைபுருஷனுடைய வழியாய்நடக்கவேண்டும்-புருஷன் அவளிஷ்டத்தைநிறைவேற்றக் கடமைப்பட்டவனாயிருக்கிறான். (சரஸ்வதீ விலாசம்.)

167. அவிவாஹிதையான ஸ்திரீ தனக்குக்கிடைத்த ஸ்தாவரத்தையானாலும் ஜங்கமத்தையானாலும் சம்ரக்ஷகனுடைய அநுமதியின்றிச் செலவழிக்கக்கூடாது. அவிவாஹிதையால் விநியோகம்.

168. புத்திமாந்தியத்தினாலாவது உன்மாதத்தினாலாவது பால்லியத்தினாலாவது மூப்பு வியாதிகளினாலுண்டாகும் புத்திக்குறைவினாலாவது நிர்ப்பந்தத்தினாலாவது காமத்தினாலாவது துவேஷத்தினாலாவது சித்தசுவாதீனமில்லாத ஒருவன் செய்யும் விநியோகம் செல்லமாட்டாது. (ஒன்று—உரு -) புத்தி சுவாதீன மற்றவன் விநியோகம்.

VII. அத்தியாயம்.

உயில்கள்.

உயில் தரும சாஸ்திரத்தியில்லே.

169. உயிலால் பொருளை உபயோகப்படுத்து மதிகாரம் தருமசாஸ்திரத்திற் காணப்படவில்லே. உயிலென்கிறசாதனத்துக்குத் தருமசாஸ்திரத்திற் பெயரில்லே. இந்தவிஷயம் பிரமாணிகர்களான ஸர்உல்லியம்ஜோன்சு, மேஸ்தர் கோல்புருக், மேஸ்தர் எல்லீஸ், ஸர் தாமஸ் ஸ்திரஞ்சு, இவர்கள் ஓரே அபிப்பிராயமாய்ச் சொல்லுகிறார்கள். (க - உருச, உருரு ; உ - சகக, சஉஅ, சஈக.)

உயில் ஆவசியகமன்று.

170. தருமசாஸ்திரத்திலேயே பொருளை உபயோகப்படுத்துவதற்காக வேண்டிய ஏற்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன ஆதலின் உயிலெழுத இடமில்லே. ஆஸ்தி முறையாய் தூரபந்துவைக்கும் சேரவேண்டியதென்றும் கடைசியில் துரைத்தனத்தாரைச்சேரவேண்டியதென்றும் போஷிக்கத்தக்கவர்களுடைய ஜீவனத்துக்கு ஏற்படவேண்டியதென்றும் தருமசாஸ்திரம் உறுதியாக நிர்ணயிக்கின்றது. (க - உருச, உருரு.)

171. தருமசாஸ்திரவிரோதமான உயில் செல்லாது. விரோதமில்லாதது ஆவசியகமன்று. (உ - சஉக - எ.)

உயில்சாஸ்திரசித்தாந்த விரோதம்.

172. இந்துக்களுடைய ஆசாரத்தை அனுசரித்து வழங்கப்படுகிற தருமசாஸ்திரத்திற்குவிரோதமாய் உயிலினல் இந்துவானவன் தாயாத பாத்தியதையினின்றும் நீக்கப்படமாட்டான். (க - கஈ0.)

துரைத்தனத்தார்.

173. இங்கிலீஷ்துரைத்தனத்தார் இவ்விஷயம் பார்க்கிறவர்களுக்குச் சந்தேகமுண்டாகும்படி செய்துவைத்தார்கள். உயில்விஷயம் தருமசாஸ்திரத்திலில்லேயென்று தெரியாமற் செய்த பூர்விகசட்டத்தைத் திருத்திக்கொண்டு இப்போது தருமசாஸ்

திரத்தில் உயில்சொல்லப்படடதல்லவென்று ஒத்துக்கொண்டார்கள் ஆனாலும் எவ்வளவுதூரம் தருமசாஸ்திரத்தை அனுசரித்திருக்குமோ அவ்வளவு தூரந்தவிர மற்றது செல்லாதென்றுசொன்னார்கள். (கஅஉகூ - ரு, ரிக்குலேஷன்.)

174. பிரிவிகவுன்சலவர்கள், சுப்பிரிம்கோர்ட்டார், சதர்கோர்ட்டார், இந்தமுக்கியகோர்ட்டார் இந்துக்களுடைய உயில்களை அங்கீகரிக்கின்றனர். (க-உ-கூஅ-மார்லு-க-சுகஉ-சுகஅ.)

175. எவனாவது தன்ஜீவிதகாலத்தில் சுதந்திரனாய் கொடுக்கத்தக்கதை உயிலெழுதி ஏன்கொடுக்கக்கூடாதென்கிற யுக்தியால் இந்துக்களுடைய உயில்கள் அந்தவிதத்திற்குமாத்திரம் செல்லுமென்று ஒத்துக்கொள்ளப்பட்டன. (உ - சாகூசு, சசரு - கோ - சதர்லாண்டு.)

176. இந்துக்கள் உயிலெழுதி தங்கள்பொருளை உபயோகப்படுத்தும் விஷயத்தில் மதிராசு சதர்கோர்ட்டார் பலவிதமாய்த்தீர்ப்புசெய்திருக்கிறார்கள்.

உயில்களை ஒத்துக்கொண்டுசெய்ததீர்ப்புகள் இரண்டுண்டு. முதலாவது - கஅகூச௵-கூ வது - நம்பருள்ள ஸ்பெசல் அப்பீலில் சொல்லப்பட்டது. அப்போது விவாதத்திலிருந்த திரவியம் சுவார்ச்சிதமா யிருந்ததுபற்றி உயிலெழுதியவன் தன்ஜீவிதகாலத்தில் உபயோகப்படுத்தக்கூடினதாகையால் கோர்ட்டார் உறுதிப்படுத்தினார்கள். இரண்டாவது-கஅசக௵-சகூ வது -நம்பருள்ள ரிக்குயுலர் அப்பீலிலே சொல்லப்பட்டது. இதுசம்சயமில்லாமல் சாஸ்திரஞானமில்லாத ஒருஜட்ஜி செய்ததீர்ப்பு. அவர்பிரமாணங்களைக்கொண்டு நடத்தப்பார்த்தார் ; ஆயினும் அவை ஒன்றோடொன்று விரோதமுள்ளவையாய்க்காணப்பட்டனவாதலால் பண்டிதர்களுடைய அபிப்பிராயத்தைப் பிரிவிகவுன்சலர்கள் அங்கீகரித்த கலகத்தா சுப்பிரிம்கோர்ட்டாருடைய தீர்ப்பைப்பிடித்து மனைவிக்குவிரோதமாய் தருமகர்த்தர்களை நிய

மிக்கப்பெற்றதும் விவாதத்துக்கு உட்பட்டதுமான உயிலை ஆதரித்தார். அந்தப்பண்டிதர்களே பின்பு உயிலில் எழுதியபடிஜீவிதகாலத்தில் பொருளை உபயோகப்படுத்தும் அதிகாரம் அவருக்கு உண்டாவென்று கேட்டதாய்ப்பாவித்துக்கொண்டு நாங்கள் அபிப்பிராயஞ்சொன்னோமென்று சமாதானஞ்சொல்லி உயிலெழுதும் அதிகாரம் இந்துக்களுக்கு இல்லையென்று சொன்னார்கள்.

இந்துக்கள் தங்கள்ஜீவிதகாலத்தில் திரவியத்தை உபயோகப்படுத்துவதற்குத் தங்களுக்குள்ள அதிகாரத்துக்கு அதிகமான அதிகாரத்தைவகித்து உயில்களை எழுதாதவிடத்து அவர்களுடைய உயில்கள் சம்மதிக்கப்படும் என்று சதர்க்கோர்ட்டார் செய்த தீர்ப்பு மூன்றுண்டு. அவை - கஅகூ0 (வரு) - கசு வது - நம் - அப்பீலிலும் - கஅசா (வரு) - கூரு வது - நம் - விசேஷ அப்பீலிலும் - கஅகூ0 (வரு) - கூருஉ வது - நம்பர்விசேஷ அப்பீலிலும் செய்யப்பட்டவை.

உயில்களின் விஷயமாய் மதிராசு சதர்க்கோர்ட்டார் செய்ததீர்ப்புகளின்மேல் பிரிவிகவுன்சலர்கள் செய்ததீர்ப்புகள் இரண்டுண்டு - முதல்தீர்ப்பில் சதர்க்கோர்ட்டார் - கஅஉச (வரு) - கூ - வது நம்பர் விசேஷ அப்பீலிலே ஒத்துக்கொண்டவுயில் தடுக்கப்பட்டது - ஆனாலும் அந்தத்தீர்ப்பின் மேற்செய்த அப்பீல் அன்று - சதர்கோர்ட்டார் தீர்ப்புசெய்தபின்பு உயிலெழுதினவனுக்குத் தன்ஜீவிதகாலத்தில் பெண்சாதிசம்மதியில்லாமற் சிறிது திரவியத்தை யுபயோகப்படுத்தும் அதிகாரம் உண்டா இல்லையாவென்று புதிதாய் வழக்குக்கொண்டுவந்த அளவில் முன்சொன்னபடி உயில் அடித்துப்போடப்பட்டது. (மூர் - உ - ருச) கஅசக (வரு) - சங வது - நம்பர் அப்பீலிலெ மதிராசு சதர்க்கோர்ட்டார்செய்த தீர்ப்பை அங்கீகரித்துச் செய்தது இரண்டாவது தீர்ப்பு. இந்தத்தீர்ப்பில் பிரிவிகவுன்சலர்கள் இங்கிலாண்டு தேசத்திற்சொல்லப்பட்ட வுயிலுக்கு இந்துக்களில் சொல்லி

ல்லையென்று ஸர் தாமஸ் ஸ்திரஞ்சுதுரை சொன்னவாக்கியத்தை உதாகரித்து, சொல் இல்லாமையாலேயே தன்மரணத்துக்குப் பின் திரவியத்தை உபயோகப்படுத்தும்வகை இப்படிப்பட்டதென்று ஒருவன் ஏற்படுத்தும் சாசனங்கள்கூட சுத்தமாயில்லையென்று எண்ணுவது சரியல்லவென்று வாதித்துப்பின்பு பங்காளத்தில் உயில்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற ஆசாரத்தை உதாகரித்து மதிராசிலும் பிதுரார்ச்சிதமல்லாதபொருளை உயிலினால் உபயோகப்படுத்தலாமென்று ஏற்பட்டிருப்பதாய் பாவித்துக்கொண்டு அந்த ஏற்பாடு பிரகிருதவிவாதத்தில் தூஷிக்கப்படாததாதலால் இந்துக்களுடைய உயில் செல்லுமென்று தீர்ப்புசெய்தார்கள். (மூ-சு - கூ௪டு.)

ஆராயுமிடத்து இந்தத்தீர்ப்பு நிசமாய்நிற்கமாட்டாது-பிரிவீகவுன்ஸலவர்கள் நினைத்தசாதனங்கள் இருந்தபக்ஷத்தில் இந்துக்களுக்குள்ள அனேகஸ்மிருதிகளில் அவற்றின் குறிப்புகாணப்பட்டிருக்கும் - அப்படிப்பட்ட சாதனத்திற்குப் பேரில்லாமற் போகாது. மேலும், மதராசிலெங்கும் உயில்களை எழுதும் ஆசாரம் உண்டாயிருக்கிறதென்று பிரிவீகவுன்ஸலவர்கள் சொன்னபேச்சு பிரமாணம் உள்ளதன்று - முந்தியசூப்ரீம்கோர்ட்டார் அதிகாரத்துக்குள்ளாயிருக்கிற - உஎ - சதுரமைலான இடத்தில் உள்ள நடக்கையைக்குறித்து அவர்கள் அப்படி எழுதியிருக்கலாமேயல்லாமல் இராஜதானிக்குக் கீழ்ப்பட்ட-க,கடு,000- சதுரமைலான இடத்திலுள்ள நடக்கையைப்பற்றிச் சொல்லியிருக்கமாட்டார்கள்.

ஆனாலும் இந்துதர்மசாஸ்திரத்தை அநுசரித்த ஒருசாதனம் உண்டு அதுவிசாரிக்கத்தக்கது.

பிராணபத்துக்காலத்தில் செய்ததானம் தானமல்லவென்று நாரதவசனம் இருக்கிறதாயினும், அது தர்மகாரியங்களுக்காகத் தானத்தைப்பற்றிச் சொல்லியதன்று - பிராணபத்திலாவ

து சுகமான நிலையில்லாவது இருக்கும்போது தர்மார்த்தமாய்ச்செய்ததானமும் வாக்குதத்தமும் நிறைவேருமல் முன்புகொடுத்தவன் இறந்தபக்ஷத்தில் அவன்மகன் அவற்றை நிறைவேற்றவேண்டுமென்று காத்தியாயனவசனம் இருக்கின்றது. (மிதாக்ஷரையில் தத்தாபிரதானிகம்.)

இவ்விதமாக இந்துதர்மசாஸ்திரத்தில் மரணத்துக்குப் பின்பு உபயோகிக்கத்தக்க தானம் இப்படிப்பட்டதென்றும், வியவஸ்தை இப்படிப்பட்டதென்றும் ஏற்பட்டிருப்பதுமல்லாமல் அந்தவியவஸ்தையைக் கடந்ததானம் செய்யக்கூடாதென்று நன்ருய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. தர்மகாரியங்களுக்காக அப்படிப்பட்ட தானம்செய்யலாமே அல்லாமல் இதரகாரியங்களுக்கன்று - அந்தத்தானத்தை நிறைவேற்றுவதும் மறுமைப்பயனைப்பற்றியதேயன்றி இம்மைப்பயனைப்பற்றியதன்று. இந்தத்தர்ம சம்பந்தமானதானம் தவிர மரணத்துக்குப்பின் நிறைவேற்றவேண்டுமென்று கட்டளையிட்டுச் செய்யும்தானம் தானமல்ல.

இவ்விதமாக சாஸ்திரம் இருக்கிறதென்று ஆராயாமலோ தெரியாமலோ மேல்சொன்னதீர்ப்புகளை பிரிவீகவுன்ஸலவர்கள் செய்திருக்கிருர்கள். உயிரோடிருக்கும்போது செய்யத்தக்ககாரியம் மரணமடைந்தபின் செய்யும்படி என்கட்டளை இடக்கூடாதென்கிற ஊகிப்பிஞலே அவர்கள் அப்படித்தீர்ப்புசெய்திருக்கிருர்கள். அந்த ஊகிப்பும் காரணமில்லாதது - அதுசகலஸ்மிருதிகளுக்கும் நேரோ விரோதமானது. அதற்கு அநுகூலமாக ஒருவசனமும் காணும் - சீவனுேடு இருக்குமளவில் கொஞ்சம் அதிகாரம் இந்துவுக்குண்டு. அவன் இறந்தபின்பு அவனுஸ்தியை அனுபவிக்கவேண்டியது இப்படிப்பட்டதென்று சாஸ்திரம் கட்டளையிடுகின்றது. சாஸ்திரத்தில் சொல்லப்பட்டவர்களைக்காட்டிலும் வேருனவர்களைச்சேருமென்று எங்கும் சொல்லியிருக்கவில்லை - இங்கிலாண்டு தேசத்தில் மூத்தபிள்ளைக்குச் செய்

திருக்கிற சட்டத்திலேபோலத்தாயத்தினதிகாரம் விவரமாய் நிர்ணயிக்கப்படுகின்றது. அந்தநிர்ணயத்தைக்கடப்பது சாஸ்திரத்தைக்கடப்பதற்குச் சமானம்.

இந்தக்காரணங்களைப்பற்றி ஒருசமயத்தில் மதிராஸ் சதர் கோர்ட்டார் இந்துக்களுக்கு உயில் எழுதிக்கொடுக்கும் அதிகாரம் இல்லையென்று தீர்ப்புசெய்திருக்கிறார்கள்.

உயில்களை அங்கீகரிக்கக் கூடாதென்பதற்குத் தீர்ப்புகள்.

177. உயில் சாஸ்திரத்துக்கு ஒத்ததன்று - எவனுகிலும் தான் உயிரோடிருக்கும்போதுதானஞ்செய்யலாமேயன்றிப் பிரதிக்கிரகமில்லாதபக்ஷத்தில் அந்தத்தானம் தானமன்று-மரணகாலத்திலிருந்தபொருளெல்லாம் இறந்தவனுடைய பின்னிட்ட பாத்தியஸ்தரைச் சேரவேண்டியது ஆகையால் இந்துக்களுடைய உயில்கள் செல்லமாட்டா. (ஸ - அ - புரோ - ௧௮௫௫ஆ ஜூலாய் - ௩0) உயில்களை யங்கீகரிக்கக்கூடாது என்பதற்குத்தீர்ப்புகள். (ஸ - கோ - ௧௮௫௮ - ஸ்பெ - அ - நம் - ௧௬௩ ல், ௧௮௫௩ - ஸ்பெ - அ - நம் - ௧0௭ ல் தீர்ப்புகள்.)

178. புருஷன் தன்சொத்தில் பாரியைக்கு ஜீவனும்சம் வைத்து மற்ற அம்சங்களில் அவள்சம்பந்தத்தை நீக்கி இஷ்டப்படி வினியோகப்படுத்தலாம். தன்மரணத்தினுலேயே தன்சொத்தில் அதிகாரம் பாரியையினுடையதாகையால் தானில்லாதபோது இதையிப்படி வினியோகப்படுத்தென்று கட்டளையிடக்கூடாது. (ஸ - அ - பண் - ௧௮௫௨ஆ ஜூலாய்மீ ௧௩௨.)

179. சகோதரனுடைய மகனுக்குப் பிரதிகூலமாய் மருமகனுக்கு எழுதிக்கொடுத்த உயில் செல்லாது. (ஸம் - கோ - ஸ்பெ - ௧௮௬௧ - அ - ௬௫௩ - நம்பரில் தீர்ப்பு.)

180. பாலியனுன குமாரனுக்குத் தகப்பன் சம்ரக்ஷகனை ஏற்படுத்துவது செல்லாது. அவனுடைய திரவியாதிகாரம் அவனுடைய மரணத்தோடேயே பின்னிட்டபாத்தியஸ்தரைச் சேர்கின்றது. (ஸ - கோ - பண் - ௧௮௫௭ஆ -மார்ச்சிமீ - ௧௨௨.)

VIII. அத்தியாயம்.

சொத்தில் செய்யவேண்டிய செலவுகள்.

ஆஸ்திகளிற் செய்யவேண்டியசெலவு.

181. நியாயமானகடன்களுக்கும் மாசிகஷாண் மாசிக ஆப்திகசிராத்தங்களுக்கும் உபநயனம்வரையிலுள்ள கிரியைகளுக்கும் விவாகத்துக்கும் ஜீவனத்துக்கும் செய்யவேண்டிய செலவுகள் ஆஸ்தியிலிருந்து ஆகவேண்டியவைகள். (க - கசுசு, களக.)

தகப்பன்கடனை மகன்தீர்க்க வேண்டியது.

182. பிதாவின்சொத்தை யடைந்தாலும் அடையாமலாகிலும் புத்திரன் பிதாவின்கடனை அவசியம் தீர்ப்பது சாஸ்திரத்தினுல் விதிக்கப்பட்டது. (க - கசுஎ) இவ்விதி பாரமார்த்திகமேயல்லது விவகாரயோக்கியமன்று பிதுர்சம்பந்தமான சொத்தைப் பெருதவன் தகப்பன்கடனைத் தீர்க்காமலிருக்கலாம். (உ-உஎரு, உஎசு - கோ.)

183. இங்கிலீஷ்துரைத்தனத்தார் ஏற்படுத்தினகோர்ட்டார் மேலுரைத்த நியமத்துக்குக் கட்டுப்பட்டவர்களல்லோமென்று தெரிந்து அப்படிநடத்துவது தருமத்துக்கு ஒத்ததல்லவென்று நினைத்து பிதுர்திரவியமிருக்குமளவேகடனைப் புத்திரன் தீர்க்கவேண்டியதென்று விதித்தார்கள். (ஸ - கோ - கஅருக - ஸ்பெ-அ-கஉ - நம்பரில் தீர்ப்பு.)

ஆஸ்தியின் மேல்வழக்கிடுதல்.

184. கடன்கொடுத்தவன் கடன்வாங்கினவனுடையபொருள் எவன்வசத்திலிருந்தாலும் அதன்மேல் வழக்காடலாம். (உ-உஅஉ - கோ.)

விதவையின் உத்தரவாதம்.

185. விதவை புருஷனுடைய பொருளை யடையாமல் அவன் கடனைத்தீர்க்கவேண்டியவளல்லள். (உ - உஅ0, உஅக, கோ - எ) இவ்விதி அவனுக்குப்பின் ஜீவித்திருக்கிறபந்துக்களுக்கெல்லாம் பொதுவானது.

186. பொதுவானசொத்தைவசப்படுத்திக்கொண்டு குடும்பத்தைப்போஷிக்கின்றகுடும்பி அக்குடும்பத்தின்மேல்வரும்வழக்குகளுக்கெல்லாம்உத்தரவாதியாயிருக்கவேண்டும்.(உ-ரு.ருச-எ) குடும்ப நிர்வாஹகனுடைய.

187. குடும்பத்திலொருவன் தனக்காகப்பட்டகடனுக்குப்பொதுவானசொத்து ஈடாகமாட்டாது. (ஸ-அ-பண்-கஅ௫ச-நவம்பர் - கரு.) குடும்பத்திரவியத்தினுடைய.

188. ஆயினும் அவன்கடனுக்கு அவன்பாகம் ஈடாகும். (ஸ - கோ - கஅ௫௫ - ஸ்பெ - அ - நம் - ககரு - ககச ல் - தீர்ப்பு.) கடன்வாங்கினவனுடைய பங்கு இவ்வளவென்று ஏற்படும்படி கடன்கொடுத்தவன் மூர்த்திவழக்குக்கொண்டுவரலாம் -அந்தப்பங்கில் கடன்வாங்கினவனுடைய புத்திரர்களின் பாகங்களை மூந்நீக்கி மிகுந்ததைக்கடன்கொடுத்தவன் அடையலாம். (மிதாக்ஷரையில் தத்தாபிரதானிகம்.)

189. பங்குபிரிந்தவளான விதவைபட்டகடன் அவளுடைய திரவியத்தில் செலுத்தத்தக்கபக்ஷத்தில் அந்தக்கடனுக்கு அவளுக்குப்பிற்பட்ட பாத்தியஸ்தர் உத்தரவாதிகளாவார்களேயன்றி மற்றக்கடனுக்கு ஆகமாட்டார்கள். (பங் - ஸ - தி - அ - எ - ககச ; பங் - ஸ - தி - அ - கஅசரு - அ - நம் - கஎ௬ ல் - தீர்ப்பு.) விதவையின்பின் பாத்தியஸ்தருடைய.

190. சகோதரருடைய உபநயனவித்தியாரம்பங்களுக்குப்பொதுப்பொருளிலிருந்து செலவுசெய்யவேண்டியது. உபநயநாதிகளுக்குச் செலவு விவரம்.

191. உடன்பிறந்தாள் உடன்பிறந்தவன் இவர்களுக்குக் கலியாணம் அப்படியேசெய்யவேண்டியது. (மிதாக்ஷரை - க - எ - ச - ரு.) கலியாணங்களுக்கு.

192. ஸ்வார்ஜிததிரவியமாத்திரமுள்ளவன் தன்சகோதரருடைய உபநயனவித்தியாபியாசங்களை நடத்தவேண்டியது.விவாகம்செய்யவேண்டிய அகத்தியமில்லை - தங்கைமாருக்கு விவாகம் நடத்தவேண்டியது. (ஸ்மிருதிசந்திரிகை.)

193. புத்திர பவுத்திர பிரபவுத்திரர்களுடைய உபநய நவித்தியாப்பியாச விவாகங்களுக்கும் பெண்களுடைய விவாகங்களுக்கும் பிதாவின் பாகமானபொருளிலேயே செலவு ஏற்பட்டிருக்கவேண்டியது.

194. தகப்பனோடு பங்குதீர்த்துக்கொண்ட பிள்ளைகள் தம்தம் சந்ததியாருக்குத்தக்க வியயாம்சங்களைத் தம்தம்பங்குகளிலிருந்தே நடத்தவேண்டியது. கலியாணமாகாத புத்திரிகளிருந்தபக்ஷத்தில் ஒவ்வொருகலியாணத்திற்கும் புத்திரருடைய பங்குகளில் நாலாம்பங்கு விழுக்காடு எடுத்துத்தகப்பன் கையிற்கொடுக்கவேண்டும். (மிதாக்ஷரா - க - எ - சு.)

ஜீவனத்திற்கு. 195. குடும்பத்தைப் போஷிப்பதென்பது வெகுஜனங்களைப்பற்றியதாயிருக்கும். குடும்பத்தில் மூத்தவனானவன் சகல குடும்பத்தையும் போஷிக்கவேண்டும். (க - சுஎ.)

196. போஷிக்கவேண்டியது தன்பெண்சாதிபிள்ளைகளை மாத்திரமல்ல - தகப்பனை தாய்களை தகப்பனுடைய தாய்தந்தைகளை கலியாணமாகாத தங்கைமார்களை விதவைகளாய் வேறுகதியில்லாத சகோதரிகளை தன்வைப்பாட்டிகளை அவர்கள்மக்களை தோஷத்தால் தாயம்பெறுந்தன்மையில்லாதவர்களை அவர்களுடைய மனைவி மக்களையும் போஷிக்கவேண்டும். (க - சுஎ, கஎக, கஎரு.)

197. ஸ்வீகாரத்துக்குப்பின் அதற்குத்தகாதவனென்று அறியப்பட்ட. (க - அஉ.) தத்தன் அடிமையைப்போலெண்ணி (க - ககஉ.) போஷிக்கத்தக்கவனாகிறான்.

198. நியாயமானகாரணமில்லாமல் விடப்பட்ட பெண்சாதியைப் போஷிக்கவேண்டும். (க - சசு) ஆனாலும் சுவல்ப காரணத்தால் தன்னைவிட்டு நீங்கினபெண்சாதியைப் போஷிக்கவேண்டியதில்லை. (ஸ - அ - சஅகூஉ - அ - நம் - உ ல் தீர்ப்பு.)

199. பாலியமுதற்கொண்டு தாய்தந்தைகளோடு வசித்துக்கொண்டிருந்த பாரியையையும் பர்த்தாபோஷிக்கவேண்டியது. (ஸ - கோ - கஅருஅ - ஸ்டெ - அ - நம் - சுஉ ல் - தீர்ப்பு.)

200. புத்திரன் மரணமடைந்தபின்பு அவனுடைய மனைவிபுத்திரிகளைக் காப்பாற்றவேண்டியது. (ஸ-அ-பண் - கஅசஇ-ஏப்பிரல் - க0.)

201. பிராதாவின் திரவியத்தையடைந்தவன் பிராதாவின் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டும். (ஸ - அ - பண் - கஅருசா - நவம்பர் - கரு.)

202. வேசியின்மகள் நேரோ தாயம்பெறத்தக்கவளானாலும் விதவையான உடன்பிறந்தான்பெண்சாதியைக் காப்பாற்ற வேண்டியது கட்டாயமன்று. (ஸ - கோ - கஅருஅ - ஸ்டெ - அ - நம் - அஅ ல் - தீர்ப்பு.)

203. விதவையானமருமகள் மாமனாரைக்காப்பாற்றவேண்டும். (ஸ - அ - பண் - கஅருரு - டிசம்பர் - க.)

204. பாகம் பிரியாதபிராதாவின் புத்திரர்கள், புத்திரனில்லாமல் இறந்துபோன பிதுர்வியனுடைய பெண்சாதியைப் போஷிக்கவேண்டும். (ஸ - அ - பண் - கஅசஇ - ஆகஷ்டு-ரு0.)

205. விபசாரமுண்டானால் விதவை தன்ஜீவனாம்சத்தில் சுதந்திரத்தை இழந்துவிடுவாள். (க - கஎஉ.)

206. ஆயினும் அவளுக்குச்சீவனாம்சம் கொடுக்கவேண்டும். அப்படியேவிபசாரியான பெண்சாதிக்கும் கொடுக்கவேண்டும். (க - ருஅ ; உருக). அது எழமைத்தனத்திற்குத் தக்கது போதும். தங்கள்துர்நடத்தையை விட்டாலே அவர்களுக்கு அந்தஜீவனாம்சம்கொடுக்கவேண்டியது. (ஸ - அ - பண் - கஅரு0 - ஆகஷ்டு-கரு ; கஅருசா - ஜனவரி - உஎ.)

207. விதவைக்குச் சொந்தசொத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஜீவனாம்சம்கொடுக்கவேண்டியது. பர்த்தா ஜீவித்

திருக்கையில் அவனுக்குப் பாரியை இப்படியே போஷிக்கத்தக் கவ[illegible]ன்கிறநிமித்தத்தினுல் அப்படிசொல்லப்பட்டது. (ஸ - அ - பண் - கஅடுரு - பிபர்வரி - உஅ.) அப்படிப்பட்ட சகாய த்தைக்கோரவேண்டிய அகத்தியமில்லாத பசுமையுள்ளவிதவை தன்ஜீவனும்சத்தை அபேக்ஷித்தல் பிறருக்கு நிர்ப்பந்தமாயும் பரி க்கக்கூடாததாயு மிருக்கிறபக்ஷத்தில் அதைக்குறித்துத் தருமஞா க்ஷ—மம் விசாரித்துத்தடுக்கக்கூடும்.

208. இறந்தவனுடைய ஆஸ்தியை அடைகிறவன் அவ னுல் ரக்ஷிக்கப்படவேண்டியவர்களை ரக்ஷிக்கவேண்டும். (க - கருஎ.)

209. சுவார்ஜிதசொத்துதவிர மற்றொன்றுமில்லாதவன் கி ழவரானதாய்தந்தைகளையும் பெண்சாதியையும் இளமையான மக்களையும் அவசியம் ரக்ஷிக்கவேண்டியது. (மிதாக்ஷரையில் த த்தாப்பிரதானிகம்.)

210. பிதுரார்ஜித திரவியம் இல்லாதபக்ஷத்தில் விதவை யான சகோதரன்பெண்சாதியைக் காப்பாற்றவேண்டிய நியம மில்லை. (ஸ - கோ - கஅடுக - ஸ்பெ - அ - நம் - கசஉ ல் - தீ ர்ப்பு.)

பரிப்பவ ரோடு வாசம் கட்டாயமன் று.

211. ஜீவனும்சம் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் கொடுக்கி றவர்களோடுகூட வாசஞ்செய்யவேண்டிய கட்டாயமில்லை.

212. இதற்கு உதாரணம். விதவை தன்மாமனுேடாவ து புருஷனுடைய சகோதரனோடாவது வாசஞ்செய்யவேண்டி ய அகத்தியமில்லை. (ஸ - அ - பண் - கஅருக - பிபர்வரி - கக ; கஅடுடு - பிபர்வரி - உசு.) மகனோடாகிலும் சக்களத்திமகனே டாகிலும் சாதாரணமாய் தன்புருஷனுடைய பந்துக்களோடா கிலும் வசிக்கவேண்டிய அக்கறையில்லை. (ஸ - அ - கஅகஎ - ரி - அ-நம் - கரு ல் ; கஅசரு - ஸ்பெ - அ - நம் - கஎ ல் - தீர்ப் புகள் ; ஸ - அ - புரோ - கஅடுக - செப்டம்பர் - கஅ.)

213. புத்திரர், சொற்படிநடவாமற்போவது அவர்களுக்குள்ள தாயம்பெறுந்தன்மையைப் போக்கமாட்டாது ஆகையால் அவர்கள் பத்தினிக்குப்பிறந்தவர்களானாலும் வைப்பாட்டிக்குப்பிறந்தவர்களானாலும் தகப்பனோடுகூட இருக்கவேண்டிய நிர்ப்பந்தமில்லை. (ஸ - அ - ௧௮௨௧ - ஸ்பெ - அ - நம் - ௨ல் - தீர்ப்பு.)

214. வேறுவேறாய் ஜீவனாம்சம் கொடுப்பதற்குத்திரவியம் போதுமானதாயிராமற்போனால் அவ்விதமாய் ரக்ஷிக்கவேண்டியகடமை குடும்பத்தாருடையதன்று. (ஸ - கோ - ௧௮௫௩ - ஸ்பெ - அ - நம் - ௧௬ல் - தீர்ப்பு.) ஏழைக்குடித்தனத்தில் தனித்த ஜீவனாம்சம்.

215. அன்னவஸ்திரங்களுக்கும் குடியிருக்குமிடத்திற்கும் வேண்டியது பரித்தல் என்னப்படும். அதுகொடுக்கிறவர்களுடையவும் பெறுகிறவர்களுடையவும் நிலைமைக்குத் தக்கதாயிருக்கவேண்டியது. பரித்தலாவதென்ன.

216. ஜீவனாம்சத்திற்காகக் கொண்டுவரவேண்டிய வழக்கு திரவியாதிகாரி இறந்துபோனநாள் முதலாகவாவது ஜீவனாம்சம் கொடுத்துக்கொண்டிருந்து நிறுத்திப்போட்டநாள் முதலாகவாவது பன்னிரண்டு வருஷங்களுக்குள்ளாகக் கொண்டுவராமற்போனால் செல்லாதென்று துரைத்தனத்தார் விதித்தார்கள். (௧௮௫௯ - சாசனம் - ௧௪ - பிரகரணம் - ௧௩.) காலவரையறை.

217. அப்படிப்பட்டவழக்கில் பரித்தலில் மிகுதிவரவேண்டுமென்று வாதிக்கக்கூடாது. (ஸ - கோ - ௧௮௫௮ - ரி - அ - நம் - ௨௯ல் - தீர்ப்பு.) பரித்தலில் மிகுதி.

IX. அத்தியாயம்.

தாயத்திற்குத்தகாமை.

தாயத்துக் குத்தகாதவரி லக்கணம்.

218. ஜடன், பயித்தியக்காரன், பிறவிச்செவிடன், பிறவிக்குருடன், ஊமை, நடக்கமாட்டாதமுடவன், கையில்லாதவன், தீர்க்கரோகி, க்ஷயரோகி, குஷ்டரோகி, நபும்ஸகன் இவர்கள் தாயம்பெறத்தக்கவர்களல்லர். (க - கருஉ—சருசு ; மிதாக்ஷரை - உ - க0 - ௩.)

219. ரோகம் பூர்வஞ்செய்தபாவத்திற்கு அடையாளமாய்ப்பயனுயிருக்கிறதென்கிற கருத்தினால் வியாதியும் தாயம்பெறாமைக்கு ஒருகாரணமென்று சொல்லுவர். (க - கருரு, சருசு.) வியாதி நீங்க, தாயத்துக்குத் தகாமையுநீங்கும்.

220. துர்ஜனனுயிருத்தல் கர்மயீனனுயிருத்தல் வீண்செலவு இவையும் தாயம்பெறாமைக்கு நிமித்தங்கள் - வீண்செலவுசெய்கிறவனுக்கு அவ்வளவே அவன்பாகத்தில் நஷ்டமாகும். ஆயினும் இவ்விஷயங்கள் செல்வது சந்தேகம். (க - கருஎ—கசு0.)

குற்றத்தின் தண்டனை.

221. குற்றஞ்செய்தவன் பெரும்பாலும் தாயத்திற்குத்தகாதவனுகமாட்டான். இங்கிலீஷ் துரைத்தனத்தார் இந்துதண்டனவியவகார நிபந்தனைகளைத்தள்ளிக் குற்றஞ் செய்தவனைத்தண்டிப்பதற்குத் தக்கதண்டனைவிதிக்குஞ் சட்டத்தை யேற்படுத்தியிருக்கிறார்கள் ஆதலால் குற்றஞ்செய்தவனுக்கு இந்துசாஸ்திரத்தின்படி தாயத்துக்குத் தகாதவனென்பதை யுண்டாக்கல் அதிகதண்டனை யாதலால் இந்த இந்துசாஸ்திரத்தின்கிறன் தற்காலத்திற் செல்லாது. (ஸ - கோ - கஅருஅ - ஸ்பெ - அ - நம் - ச0ல் - தீர்ப்பு)

222. பொதுவான பொருளில் சிறிது அபகரித்தவன் தாயம்பெறத் தகுந்தவனல்லன். (ஸ - கோ - கஅருஅ - ஸ்பெ - அ - நம் - ச0 ல் - தீர்ப்பு.)

தாயத்துக்குத் தகாமையின் நிமித்தங்கள்.

223. தாயம்பெற்றபின்பு ஊமை, குருடு, முடம், குஷ்டரோகி இப்படியான பக்ஷத்தில் தாயத்துக்குத்தக்கவனல்லன். (மிதாக்ஷரை - ௨ - ௧௦ - ௬.) பயித்தியக்காரன் வியவகாரத்திற்குத்தக்கவனல்லன் ஆதலால் பயித்தியம் எப்போது உண்டானாலும் தாயம் பெறுமதிகாரம் அப்போதேபோய்விடும். அவனுடையபொருள் அவனுடையபின் பாத்தியஸ்தருடையவசத்திலாகும்.

தாயத்திற்குத்தகுதி.

224. மேற்சொல்லிய வியாதிகள் தீர்ந்தால் தாயத்தில் சுதந்திரம் மறுபடியுண்டாம். (மிதாக்ஷரை - ௨ - ௧௦ - ௭.)

தாயத்திற்குத் தகுதியின்மை ஆண் பெண்களுக்குப் பொது.

225. தாயம் பெறாமைக்கு நிமித்தங்களான தோஷங்கள்புருஷர்களுக்குக் குறிப்பதுபோலே ஸ்திரீகளுக்கும் குறிக்கப்படும். (௧-௧௬௪) மலட்டுத்தனம் தாயம்பெறாமைக்குக் காரணமன்று.

பங்குக்குத் தகாதவருடைய சந்ததியார்.

226. தாயத்துக்குத் தகாதவர்களுடைய சந்ததியாருக்கு இக்குற்றங்களில்லாதபக்ஷத்தில் தாயத்துக்குத் தகுதிபோகமாட்டாது. (௧ - ௧௬௬.)

227. சன்னியாசிக்குத்தாயம்பெறத்தகுதியில்லை. (௧-௧௬௭)

வைப்பாட்டியின் மக்கள்.

228. சூத்திரர்களிலேதவிர மற்றவர்களில் வைப்பாட்டியின் மக்களுக்குத்தாயம்பெறத் தகுதியில்லை. (௧ - ௧௬௫.)

சாதிகெட்டவர்.

229. சாதிகெட்டவன் தாயம்பெறத்தகான் - இவ்விதி இங்கிலீஷ்துரைத்தனத்தாராலே தடுக்கப்பட்டது. (௧௮௫௦ - ௨௧-ஆக்ட்டு.)

சோரம்போகிற பெண்கள்.

230. அப்படி சோரம் போகிறவள்விஷயத்தில் தடுக்கப்படமாட்டாது. இங்கிலீஷ் சாஸ்திரத்தின்படி விவாஹக்கட்டை நீக்கும்பொருட்டுக் கொண்டுவந்த விவகாரத்துக்கு உட்பட்டுத் தன்புருஷனுக்குப்பின்பு வரத்தக்க சுதந்திரத்தை விபசாரிபோக்கடித்துக்கொள்ளுவாள். இந்துசாஸ்திரத்தின்படி விவாதத்தின் ஜோலியில்லாமல் உடனே விவாஹக்கட்டைப்போக்கடித்துக் கொள்வாள் ஆகையால் விவகாரம்வரையில் அவகாசமில்லாமலே சோரம்போகிறவளுக்குச் சுதந்திரம் நீங்கிப்போம்.

X. அத்தியாயம்.

தாயபாகம்.

சமானரான பின்பாத்தியவிபகருடைய பொதுச்சுதந்திரம்.

231. இந்துக்களுக்குள் திரவியமானது சரியானசுதந்திரமுள்ள தாயாதர்களுக்கு அந்தஸ்தின்முறையாய் சமுதாயமாய்ச் சேரும். சிலதாயாதருடைய சுதந்திரம் சிலதலைமுறைவரையில் அவர்கள்சந்ததியாரைச் சேரும்படி பிழைத்திருக்கும்.

பிதாவும் புத்திரரும்.

232. பாட்டன்முதலானவர்களுடைய பொருளில் தகப்பனோடு புத்திரர் சமமானசுதந்திரமுள்ளவர்கள். புத்திரரில்லாதபக்ஷத்தில் பவுத்திரர் பிரபவுத்திரர்சமமானசுதந்தரமுடையுவர்கள்.

காணப்படாதவருடைய சுதந்திரம்.

233. நெடுநாள் தேசாந்தரம் போனவனாவது அவன்சந்தியாவது இருக்குமிடம் இன்னதென்றுதெரியாதபக்ஷத்தில் அவனுடைய பங்குபாத்தியதை அவனுடைய புத்திரபரம்பரையில் ஆறுந்தலைமுறைவரைக்கும்பிழைத்திருக்கும். (க-கஅஎ, கஅஅ.)

சரியந்தஸ்துள்ளசமுதாயபாகிகள்.

234. பிதா புத்திரன் பவுத்திரன் பிரபவுத்திரன் இவர்கள் சமமான அந்தஸ்தின் முறையுள்ளவர்கள்; அப்படியேபிராதா அவன் புத்திர பவுத்திர பிரபவுத்திரர்கள்; அவ்விதமாகவே பிதாவோடு பிறந்தவனுடைய புத்திரபரம்பரையார்; அவ்வாறு அவர்களுடைய கைம்பெண்கள்; அங்ஙனமேகுமார்த்திகள்; அந்தப் பிரகாரமே புத்திரிகாபுத்திரர்; அப்படிதாயம்பெறத்தக்க புத்திரிகாபுத்திரிகைகளும்தங்களில் தாங்கள் சஹஜமாய்ப்பங்காளிகள்.

அம்சபாகிகள்-அம்சாம்சபாகிகள்.

235. இவர்களில் புத்திரர் ஸஹோதரர் (மிதாக்ஷரா - க - உ - ரு) விதந்துக்கள் (ஸ்மிருதிசந்திரிகை) தகப்பனிடத்தினின்றும் பொருளை யடையும் புத்திரிகைகளும் (மிதாக்ஷரா. உ - உ - க) சரிப்பங்குக்காரர். மேலும் புத்திரருடைய புத்திரர், புத்திரருடையபேரன்மார், சகோதரருடைய புத்திரர், அவர்கள் மக்களுடைய மக்கள், மகன்பேரன்மார், சிற்றப்பன்பெரியப்பன்மக்கள் (மிதாக்ஷரா - க-ரு- க) புத்திரியின்புத்திரர், தாயின்சொத்

தை யடையும்படியான புத்திரிகைகள், (மிதாக்ஷரா-உ-கக-கரு) புத்திரிகளின்போர்த்திமாரும் பங்கிற் பங்குபெறத்தக்கவர்கள்.

236. பெண்களுக்குள் விவாஹமானவளைக்காட்டிலும் முன் விவாஹமில்லாதவளுக்கும் புத்திரனில்லாதவளைக் காட்டிலும் முன் புத்திரனுள்ளவளுக்கும் சீதனமுள்ளவளைக்காட்டிலு முன் சீதன மில்லாதவளுக்கும் தாயம்சேரும். (க - கருஅ ; மிதாக்ஷரா - உ - கக - கரு) புத்திரிகள்.

237. மகன், பேரன், மகனுடைய பேரன், இவர்களில்லாதவனுடையபங்கு அவனுடைய சகோதரனைச்சேரும். இவ்விதமாகவே மகள் புத்திரனில்லாதவளானபோது அவள்பங்கு மற்றைப்பெண்களைச்சேரும். மற்றைச்சரிப்பங்குக்காரருடையவர்க்கங்களில் ஒருசரிப்பங்குக்காரனுடைய சுதந்திரம் அவன்சந்தியார்களைச்சேர்வதற்குமுன்பு பிழைத்திருக்கின்ற தன் சரிவரம்புள்ளவரைச்சேரும். சரிப்பங்குக்கார ருடைய பரம்பரையின் சுதந்திரம்.

238. ஒருசரிப்பங்குக்காரனுடைய சுவார்ச்சிதம் மற்றச்சரிப்பங்குக்காரருக்குச் சேராது. அவன்சந்ததியாருக்குச்சேரும். (க - கஉ0.) சுவார்ஜிதம்.

239. சோதரர்கள் தங்களுடைய சம்பாத்தியங்களைக்குறித்து ஒருவரோடொருவர் நிர்ணயஞ்செய்துகொள்ளலாம். (கோயம்புத்தூர் சிவில்கோர்ட்டு - கஅருஉ - அ - நம் - கஉகூ ல் தீர்ப்பு.)

240. தன்னோடுகூடிக் குடித்தனஞ்செய்துகொண்டிருக்கிற மக்களுடையசம்பாத்தியத்தில் தகப்பனுக்குச்சரிப்பங்கு உண்டு. ஆனாலும் அதுதகப்பனுடைய சம்பந்தமாவது திரவியசகாயமாவது இல்லாமல் சம்பாதித்தசொத்தில் இல்லை. (க- சுரு,சுச.)

241. சிறிதுபொருள் தேடினபின்பு சகோதரனைச்சேர்த்துக்கொண்டு அந்தப்பொருளை விருத்தியாக்கினபக்ஷத்தில் எல்லாப்பொருளிலும் பாதிப்பங்கு சகோதரனுக்குக் கிடைக்கும். (ஸ - கோ - கஅருஅ - ரி - அ - நம் - கஅஎ ல் - தீர்ப்பு.)

பொதுசொத்தில் நிர்வாஹகன்.

242. தகப்பனுக்குப்பின்பு கூடியிருக்குங் குடும்பத்தாரில் மூத்தவன், மற்றவர்களால் யோக்கியனல்லவென்றும் நிர்வாகம்பண்ணமாட்டாதவனென்றும் பெயர்பெறாதபக்ஷத்தில் பொதுவானதிரவியத்தைவைத்துக்கொண்டு குடும்பகாரியங்களை நடத்தலாம். (௧ - ௧௯௯.)

நிர்வாஹகனுடைய அதிகாரம்.

243. அப்படிப்பட்ட மூத்தவன், குடும்பத்தின்மேன்மைக்காகச்செய்யுங் காரியங்கள் செல்லுமானாலும் பொருளை விநியோகப்படுத்துவதில்மாத்திரம் சரிப்பங்குக்காரருடைய அனுமதியைப்பேச்சினாலாவது எழுத்தினாலாவது வேறுகாரணத்தினாலாவது அடையவேண்டும். (௧ - ௧௯௯, ௨00.)

விபாகத்துக்கு அனுமதி.

244. பொதுசொத்தை தாயாதர்கள் தங்கள்தங்கள்பங்கின்படி பிரித்துக்கொள்ளலாம். அதினாலேயே அவிபக்த்தராயிருக்குந்தன்மை நீங்கும். பிரிக்கப்பட்டசொத்து அந்தந்தப்பங்குக்காரனுக்கே சேர்ந்து பின்பு அவன் சந்ததியாருக்குச்சேர்வது விபாகத்துக்குப்பயனாம்.

புத்திரர் பங்குபிரிக்கும்படி தகப்பனைக் கேட்கும் அதிகாரம்.

245. புத்திரர் பாட்டன்மாருடைய பொருளைத்தங்களோடு பிரித்துக்கொள்ளச்சொல்லி தகப்பனை அவனுடைய நிலையை நோக்காமலே தங்களிச்சையால் பலாத்காரஞ் செய்யலாம். (மிதாக்ஷரை - ௧ - ௫ - ௮.)

246. புத்திரர்கள் இறந்துபோனபின் அவர்கட்குப்பாத்தியஸ்தர்களாக அவர்களுடைய புத்திரர்கள் அல்லது பௌத்திரர்களிருந்தால் அவர்கள் மேற்கண்டபடி பாகித்துக்கொள்ளும்படி கேட்கலாம். (மிதாக்ஷரை முதலாவது புஸ்தகம் - ௧ வது - அத்தியாயம் - ௫, ௨௫ - வது - வாக்கியங்கள்.)

247. தகப்பன் சந்நியாசியாய்விட்டால் அவன் நியாயமாக இறந்தவன்போலாகின்றான் அப்போது தகப்பனையன்றிப் புத்திரர்கள் பாகித்துக்கொள்ளலாம். (ஒன்று - ௧௭௧.)

248. அவன்சாதிப்பிரஷ்டனாய்விட்டால் ஹிந்துசாஸ்தி

ரபிரசாரம் அவனிறந்தவனுய் விடுகின்ருன். இங்கிலீஷ்நியாய விதாயகசபையார் சொத்தைக்குறித்து ஒருவனுக்கிருக்கிறபாத்தியதையை மேற்கண்ட சாதிப்பிரஷ்டத்துவம் விரோதிக்கமாட்டாதென்று தீர்மானித்திருக்கிருர்கள். (கஅடுO௵ - ஆக்ட் ரு - நம் - உக.)

249. பிதுர்சம்பந்தமானதைப் பாகித்துக்கொள்ளும் விஷயத்தில் பிதாவும் புத்திரர்களும் சமமாகப்பாகித்துக்கொள்ளவேண்டியது. (மிதாக்ஷரை முதலாவது புஸ்தகம் - ரு வது அத்தியாயம்-ரு-வது-வாக்கியம்.) பிதாவின்சொந்த ஆர்ச்சிதத்தை அவன் சொந்தத்திற்கு வைத்துக்கொள்ளலாம். (ஒன்று - ககரு.) பிதாவும் புத்திரர்களும் சமமாகப் பாகித்துக் கொள்ளுதல்.

250. புத்திரர்கள்யாவரும் சமமாகப் பாகித்துக்கொள்ள வேண்டியது. அவர்களைப் பெற்றதாய்களுடைய சங்கியையினுல் வித்தியாசம் ஏற்படமாட்டாது. (ஒன்று - ககரு - உOரு.)

251. சூத்திரர்களுடைய புத்திரர்கள் அவர்களின் தாய்களுடைய சங்கியையை யனுசரித்துப் பாகித்துக்கொள்ளலாமென்று எண்ணப்பட்டிருக்கிறது -அது தப்பான அபிப்பிராயம்-புத்திரர்கள்யாவருக்கும் சமபாகவிதி எல்லாவர்ணத்தாரிலும் ஒன்ருகவேயிருக்கிறது. (ஸ - அ - கஅசரு௵ - ரி - அ - நம் - உO ல் - தீர்ப்பு.)

252. தத்தபுத்திரன் ஒருவனிருக்கத் தத்துக்குப் பின்னிட்டு ஔரசபுத்திரர்கள் உண்டானுல் அப்படியுண்டானவர்களில் ஒருவனுடைய பங்கில் நாலிலொன்றுக்குச்சரியானபாகம் தத்தனுக்குக் கிடைக்கவேண்டியது. (எல்பர்லிங் - எக.) ஸ்வீகாரத்திற்குப்பின்னிட்டுப் பிறந்த புத்திரர்கள்.

253. சூத்திரர்களில் ஸ்வபத்திநியினுடையபுத்திரனுக்காவது புத்திரிக்காவது தவுகித்திரனுக்காவது கிடைக்கும் பாகத்திற்பாதிக்குச் சரிப்பங்கு வைப்பாட்டிபிள்ளைகட்குக் கிடைக்கவேண்டியது. (மிதாக்ஷரை - க - கஉ - உ.) சூத்திரர்களுடையவைப் பாட்டிபிள்ளைகள்.

254. சூத்திரர்களில் புத்திரன் புத்திரி தவுஹித்திரன் இல்

லாதபக்ஷத்தில் வைப்பாட்டியின்மக்கள் சமபாகத்தை யடைவார்கள். தகப்பன் பிழைத்திருந்தால் அவன்சம்மதியில்லாமற் பங்குகிடையாது. (மிதாக்ஷரை — க - கஉ - உ.)

சுவார்ஜிதத்தைமறுபடி பெறுதல்.

255. புத்திரர்களுக்குப் பாகித்துக்கொடுத்துவிட்ட ஸ்வார்ஜிதசொத்தைத்தரித்திரம் நேரிட்டபோது பிதா மறுபடிவாங்கிக்கொள்ளலாம். (ஒன்று - ககசு.)

ஒருபுத்திரன் பாகித்துக்கொள்ளலாம்.

256. எல்லாப்பிள்ளைகளும் அவிபக்தர்களாயிருக்கையில் அவர்களில் ஒருவனுக்குமாத்திரம் விபாகஞ்செய்துகொடுக்கலாம். (ஒன்று - ககரு - ககசு.) புத்திரர்களில் ஒவ்வொருவனும் தனித்தனியே தன்தன்பாகத்தைக் கொடுக்கும்படி தகப்பனைக் கேட்கலாம். எல்லாருங்கூடி அவன்மேல் வழக்குக்கொண்டுவரலாம்.

பாகத்தை விட்டுவிடுதல்.

257. விபாகம் செய்யப்படும்போது புத்திரனாவது மற்றொருசமாம்சகனாவது மற்றவருடைய திர்ப்திக்காக எதுவோகிஞ்சித்துபெற்றுக்கொண்டு தன்பாகத்தை விட்டுவிடலாம். அந்தச்செய்கைக்கு உட்பட்டு அவனுடைய வார்சுதாரர்கள் நடக்கக்கடமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். (ஒன்று - ககடு, உ0எ.) தன்னுடைய ஜீவனோபாயத்தைச் சம்பாதித்துக்கொள்ளச்சக்தனா யிருந்தாலன்றி அவன் மேற்கண்டபடி விட்டுவிடக்கூடாது. (மிதாக்ஷரை முதலாவது புஸ்தகம் - உ - வது அத்தியாயம் - கக - கஉ - வது - வாக்கியங்கள்.)

விபாகாநந்தரம் பிறந்தபிள்ளைகள்.

258. பிதாவோடுபாகஞ் செய்துகொண்ட பிற்பாடு வேறுபுத்திரர்கள் பிறந்தால் அவர்களுக்குப்பங்கு தகப்பனுடைய பங்கினின்றும் வரவேண்டியது. (மிதாக்ஷரை முதலாவது புஸ்தகத்தில் - சு வது - அத்தியாயம் - உ வது - வாக்கியம்.)

259. பாகாநந்தரம் பிறந்தபிள்ளை பிதாவினுடையபங்கையடையலாமேயன்றிக் கூடப்பிறந்தவர்களுடையசொத்தில் பங்கையடையக்கூடாது. விபக்தர்களில் யாராவது பிதாவோடு

சேர்ந்திருப்பார்களானல் அவர்கள் அவனேடு சமமாய்ப்பாகஸ்தர்களாகக் கடவர்கள். (ஒன்று - கஅஉ.)

260. பின்பு புத்திரர்கள் பிறவாவிட்டால் விபக்ஷபுத்திரர்கள் பிதாவினுடையபங்கை யடைவார்கள். (க - கஅரு.) விபக்ஷபுத்திரர்கள்.

261. பிதாவினுடைய மரணாநந்தரம் புத்திரர்கள் பிதாவின் ஸ்வார்ஜிதத்தைப் பாகித்துக்கொள்ள நேர்ந்தபோது பிதாமகார்ஜிதத்தைப்போலே அவர்கள்யாவரும் சமமாகப்பாகித்துக்கொள்ளவேண்டியது. (ஒன்று - உ0அ.) பிதாவினுடைய ஸ்வார்ஜிதம்.

262. தகப்பனும் தாயும் இறந்தபிற்பாடு தாய்தந்தைகளுடைய ஆஸ்தியைப்புத்திரர்கள் பாகித்துக்கொள்ள வேண்டுமென்று (மனுவில் - கூ - வது அத்தியாயம்-க0ச வது வாக்கியத்தில்) சொல்லப்பட்டிருக்கிறது. இதனல் புத்திரர்கள் பாகம்செய்துகொள்ளுகிறதற்குமுன் தாய்தந்தை இருவர்களும் இறந்துபோயிருக்கவேண்டுமென்பது தாத்பரியம் அல்ல - புத்திரர்களிருக்கிறவிஷயத்திலே தாய்தகப்பன்மார்களில் ஒருவருடையசொத்தில் மற்றொருவருக்கு ஸ்வத்துவமில்லை யாகையால் அவர்களில் யார் இறந்துபோகிறார்களோ அவர்களுடையசொத்தைப் பாகித்துக்கொள்ளலாமென்பது தாற்பரியமென்று ஸ்மிருதிசந்திரிகையில் விவரிக்கப்பட்டிருக்கிறது. (ஒன்று - உ0ச.) தாயினுடையசொத்தைப் புத்திரர்கள் பாகித்துக்கொள்ளுகிற விஷயத்தில் ஷெ சொத்தை முதலில் அடையத்தக்க புத்திரிகள் இல்லாதிருக்கவேண்டும். இருந்தால் புத்திரிகளே பாத்தியஸ்தர்கள். (மிதாக்ஷரா முதலாவது புஸ்தகம் மூன்ருவது அத்தியாயம் — கரு வது - வாக்கியம்.) தாயாவது தகப்பனுவது இறந்த பிற்பாடுவிபாகம்.

263. ஒரு அம்சகன் மற்ற அம்சகர்களெல்லாம் கூடியிருக்க, தன் அம்சத்தைக்கொடுத்துவிடும்படி அவர்களைக்கேட்கலாம். (ஒன்று - உ0சு.) ஒருஅம்சகன் தன் அம்சம்வேண்டுமென்றுகேட்கத்தகும்.

264. ஒருபாலன் தன்னுடையபங்கு துர்வியயத்தினல் ந

பாலனுக்காகப் பாகம் கேட்கத்தகும்.

ஷ்டப்பட்டுப் போவதாயிருந்தாலொழிய வியாச்சியம் செய்யக்கூடாது. நஷ்டப்படும் விஷயத்தில் அவனுடைய கார்டெயன் அதற்காக வியாச்சியம் கொண்டுவரலாம். (ஒன்று – ௨0௬.)

பின்னிட்டுப்பிறந்த பிள்ளை.

265. அபுத்திரவந்தனாய் இறந்துபோன சோதரனுடைய பாரியை கர்ப்பிணியாயிருப்பாளானால் நேரிட்டிருக்கிற விபாகத்தில், உண்டாகும் புத்திரனுககென்று ஒருபாகம் எடுத்துவைக்க வேண்டியது. (ஒன்று - ௨0௭ - மிதாக்ஷரா முதலாவது புஸ்தகம் - ௬ வது அத்தியாயம் - ௧௧ வது சுலோகம்.)

பாகவிஷயத்தில் விருக்கிற வித்தியாசங்கள்.

266. சோதரர்களுக்குள் பாகவிஷயத்தில் நேரிடுகிற ஏற்றக்குறைச்சல்களுக்கு உதாரணங்கள் அடியில் எழுதப்படும்.

(1.) ஏயும் பீயும் சீயும் சோதரர்கள் – ஏ என்கிறவன் டீ – ஈ - எப் - என்கிற மூன்று புத்திரர்களைப்பெற்று இறந்துபோய் விட்டான்-இவர்களில் ஒருவனை-டீ என்கிறவன், ஜீ - எச்சு - ஐ - என்கிறமூன்று பிள்ளைகளைப்பெற்று இறந்துபோனான் - ஷ சோதரர்களில் - பீ - என்பவன் - ஜே - என்கிறபுத்திரனையும் - சீ - என்பவன் - கே - என்றபுத்திரனையும் ஸ்வீகரித்துக்கொண்டு இறந்துபோனார்கள் - இப்படியிருக்கக் குடும்பத்தார் பாகத்துக்கு ஆரம்பித்தார்கள் - அப்போது ஆஸ்தியானது மூன்றுபாகமாகப் பாகிக்கப்படவேண்டியது. அவைகளில், ஜே - கே - என்பவர்களில் ஒவ்வொருவனும் ஒவ்வொருபாகத்தை அடையவேண்டும். மற்ற மிகுதியானபாகத்தை மூன்றாகப்பாகித்து அவைகளில் ஈ-ஒன்றும்-எப்-ஒன்றும்-பெறவேண்டும். மற்றொருபாகத்தை மூன்றாகப்பாகித்து-ஜீ-ஒன்றும்- எச்சு - ஒன்றும் - ஐ - ஒன்றுமாகப் பெறவேண்டும். இதனால் - ஜே - கே - என்பவர்களில் ஒவ்வொருவரும் ஆஸ்தியில் மூன்றிலொன்றை அடைகின்றார்கள் - ஈ - எப் -என்பவர்களில் ஒவ்வொருவரும் ஒன்பதில்ஒன்றை அடைகின்றார்கள்-ஜீ-எச்சு-ஐ என்பவர்களில் ஒவ்வொருவரும் இருபத்தேழில் ஒன்றை அடைகின்றார்கள். (இரண்டு - ௯௧௨ - ௯௧௫)

(2.) ஏ - பீ - சீ - சோதரர்கள். ஏ - என்பவன் - டீ - என்கிற புத்திரனைப்பெற்று இறந்துபோனான். அவன் தன்பிதாவிற்குரிய மூன்றிலொருபாகத்தைக் கேட்டுப்பெற்றுக்கொண்டான். பீ - புத்திரனில்லாமல் இறந்துபோனான் - அவனுடையபாகம் ஜீவித்திருக்கிற அவிபக்தசோதரனான சீ யைப்போ யடைகின்றது. விபக்தனான - டீ - என்பவனுக்கு ஷை சொத்தில் பாத்தியமில்லை. (கெஞ்சம் - ஜி - கோ - பண்டிதர் - க0அகூ ௵ பிபர்வரி௴ - அஉ) பீ - இறந்துபோகிறதற்கு முன்னமே - டீ - பாகித்துக்கொண்டிரானானால் - சீ யோடு பாகித்துக்கொள்ளும்போது தன்தகப்பனுடையபாகமும் சந்ததியற்றபங்கிற் பாதியும்-டீ-க்குக்கிடைக்கும்.

267. சமாம்சமுள்ள புத்திரிகைகளும் தங்கட்குக்கிடைத்தசொத்தை ப்புத்திரர்களைப்போலே சமமாய்ப் பாகித்துக்கொள்ளக்கடவர்கள். (த - க - பு - கோ - பண்டிதர் - கஅகஎ ௵ - செப்டம்பர்௴ - க0௨.) புத்திரிகள்.

268. சோதரர்களுக்குவந்த பங்குப்பொருள் தங்கள்வமிச பரம்பரையினின்று தப்பிப்போமேயல்லது புத்திரிகளுக்கு அப்படி தப்பாது. (பெரியமக்கிநாட்டன் - ருரு) எப்படியென்றால் விபக்தனாய்விட்ட ஒருசோதரனுக்குப் புத்திரசந்ததியில்லாமற் போகுமானால் பத்நிக்காவது புத்திரிகைகளுக்காவது அவன் சொத்து சேருகிறது-புத்திரிகளுக்குள்பாகம் அப்படியன்று -ஒரு சமாம்சகை இறந்துபோய்விட்டவள் விவாஹிதையாயிருந்தால் அவளுடையபாகமானது அவளுடையசந்ததிக் கிரமத்தைத் தானேபோயடைகின்றது. அவிவாஹிதையானால் சோதரர்கள் முதலியவர்களைப்போய்ச்சேருகின்றது. (மிதாக்ஷரை இரண்டாவது புஸ்தகம் - கக வது அத்தியாயம் - க௨ - ௩0 வது வாக்கியங்கள்.) பாகித்த சொத்து பரம்பரைக் கிரமத்தினின்றும் மாறுவது.

269. பஞ்சாயத்தார் மூலமாயாவது உள்ளுடம்படிக்கையினாலேயாவது சீட்டுப்போட்டாவது பாகம் செய்துகொள்ளலா பாகத்தைப் பெறும் விதம்.

ம். (ஒன்று - ௧௯௦) பரஸ்பரசம்மதமான அப்படிப்பட்ட ஏற்பாடு இல்லாவிடின் பாகத்தை யடையவேண்டியதற்கு வியாச்சியஞ் செய்வதுதான் மார்க்கமாகவிருக்கிறது.

காலவரையறை.

270. திரவியமுள்ளவன் இறந்தது முதலாகவாவது பங்குக்காகச்சிறிது பொருள் பெற்றுக்கொண்ட தின முதலாகவாவது பன்னிரண்டுவருஷம்வரையில் பங்குக்காகவழக்குக்கொண்டுவரலாம் - பின்புகூடாது. (௧௮௫௯ - சாஸனம் - ௧௬ - பிரகரணம் - ௧௫.) தகப்பன், மக்கள், பவுத்திரர், பிரபவுத்திரர், சகோதரர் அவர்களுடைய புருஷசந்ததியாரும் திரவியத்தில் சமானுதிகாரிகளாகையால் அவர்களெல்லாம் புருஷசந்ததியில்லாமல்நசித்துப் போனபக்ஷத்திலேதான் மேற்கூறியசாஸனத்தில் முதல்வாக்கியம் செலாவணியாகும்.

ஆஸ்தியின்மேல் செலவுகளுக்கு ஏற்பாடு.

271. விபாகம்செய்து கொள்ளும்போது ஆஸ்தியைப்பற்றியகடன்செலவுகளுக்கு ஒரு ஏற்பாடுண்டாகவேண்டியது. (ஒன்று - ௧௯௧, ௧௯௨) சமாம்சகர்கள் மேற்படிகடன் முதலியவைகளைப் பாகித்துக்கொள்ள வேண்டியது. (இரண்டு - ௨௮௫ - கோ.) அல்லது ஜீவிதத்துக்காக ஒருஏற்பாடுசெய்யவேண்டியதாயிருந்தால் அதுஎப்படிசெய்யப்படுகிறதோ அப்படியே கடன்முதலியவைகளைக் கொடுப்பதற்கும் ஆஸ்தியில் ஒருபாகத்தை எடுத்துவைக்கவேண்டியது. கடன்கொடுத்தவர்கள் இந்த ஏற்பாட்டை எதிர்பாராமலே எல்லாப்பொருளிலும் விவாதங்கொண்டுவரலாம்.

சமாம்சகருலே நஷ்டம் நேரிட்டவிஷயத்தில் அதற்குப்பரிகாரம்.

272. ஒருசமாம்சகன் துர்வியமாய்செலவழித்துப் போட்டிருந்தாலும் அல்லது தகாத விநியோகம்செய்து சொத்தை நஷ்டப்படுத்தியிருந்தாலும் அவனுல் நேரிட்டநஷ்டத்துக்குத் தக்கபடியும் அல்லது அவனுல்நேரிட்ட விநியோகத்துக்குத் தக்கபடியும் அவனுடைய பாகம்குறைவுபட வேண்டியது- நஷ்டமும் விநியோகமும் அவனுடைய அம்சத்தைக்கடந்திருந்தால் அந்த

மிருதியைக்குறித்து அவன்மேல்வழக்கு தொடரக்கூடாது. (ஒன்று-உ௪௪, உ௨௫.) ஆனாலும் அவன்சுவார்ஜிதத்தின்மேல் தொடரலாம்.

273. ஒருசமாம்சகன் மற்றவர்களை மோசஞ்செய்யவேண்டுமென்று சமுதாயசொத்தில் எவ்வளவாவது ஒளித்து வைத்திருந்தால் பாககாலத்தில் அவ்வளவுக்கு அவனுடையபாத்தியத்தை இழந்துபோகக்கடவன். (மிதாக்ஷரா முதலாவது புஸ்தகத்தில்-ஒன்பதாவது அத்தியாயம் - ௪ - க௨ வதுவாக்கியங்கள்.) சமாம்சகனால்சொத்து ஒளிக்கப்பட்ட விஷயத்தில்.

274. ஓராவர்த்தி விபாகம் நடந்தால் அதுசாதாரணமாய் அழியமாட்டாது. ஆனால் விபாகத்துக்குட்படாத இதரசொத்துக்கள் வெளிப்படுமோயின் அவைகளும் பின்பு விபாகப்படத்தக்கவைகள். (ஒன்று - உ௫0 - உ௫க.) வெளிப்பட்ட சொத்தின் விபாகம்.

275. விபாககாலத்தில் அறியக்கூடாமலிருந்த எந்த ஹேதுவைப் பற்றியாவது பாகங்கள் ஏற்றக்குறைச்சலாய் நேரிட்டிருந்தால் மறுபடியும் அவை விபாகிக்கப்படலாம். (ஒன்று-உ௫உ) இந்தக்காரியம் சமாம்சகர்களுடைய சம்மதியின்மேல் நடக்கவேண்டியதாகவிருக்கிறது. மோசம்நடந்ததாய்த் தெரிந்தால் துரைத்தனத்தார் அதற்குப்பரிகாரஞ் செய்வார்கள். மறுபடி விபாகம்.

276. ஒருசமாம்சகன் சமுதாயசொத்தை அபிவிர்த்திசெய்ததனால் அவனுக்கு விசேஷபாகம் கிடையாது. (ஒன்று-உக௫) ஆனால் சமுதாயசொத்தின் சகாயத்தைக் கொண்டு பிரத்தியேக ஆர்ஜிதம்செய்திருந்தால் அப்படி ஆர்ஜிக்கப்பட்டசொத்தில் அவனுக்கு இரண்டுபாகம் கிடைக்கும். (ஒன்று - உ௨0 ; ஸ-அ-க௮க௪ஹு - ரி - அ - கம் - எல் - தீர்ப்பு.) இந்தபாத்தியம் அவனுடைய புத்திரசந்ததிக்கும் கிடைக்கும். சமுதாய அபிவிருத்தி நவீன ஆர்ஜிதம்.

277. குடும்ப பூஸ்திதி நஷ்டமாய்ப் போயிருந்து குடும்ப திரவிய சகாயமில்லாமலே ஒருசமாம்சகன் அந்தச்சொத்தை மீட்டுக்குடும்பத்துக்கு உபயோகமாக்கியிருந்தால் அதைமீட்டவனு குடும்பநஷ்டதிரவிய ஆர்ஜிதம்.

க்கு விசேஷலாபமாக அந்தச்சொத்தில் நாலிலொன்று கிடைக்கவேண்டியது. மிகுதியை அவனும் மற்றைச்சமாம்சகர்களும் பாகித்துக்கொள்ளவேண்டியது (மிதாக்ஷரா - முதலாவது புஸ்தகம் - ௪ வது - அத்தியாயம் - ௩ வது - வாக்கியம்.)

ஏகதேசவிபாகம்.

278. சொத்தில்சிலவற்றை விபாகம்செய்துகொண்டு மிகுதியைப் பின்னிட்டு விபாகத்துக்கு வைத்துவைக்கலாம். (ஒன்று - ௧௬௫.)

விபாகத்துக்குப்பின்னிட்டுச் சம்சிருஷ்டி.

279. விபாகத்துக்குப் பின்னிட்டுப்பாகஸ்தர்கள் சம்சிருஷ்டராய்க் கூடியிருக்கலாம். பின்பு முழுவதையும் நூதனமாய் விபாகஞ் செய்துகொள்ளலாம். (ஒன்று – ௨௩௩) இப்படிப்பட்ட சம்சிருஷ்டியானது பிதாபுத்திரர்களுக்குள்ளும் சோதரர்களுக்குள்ளும் பிதுர்வியப்ராதரு புத்திரர்களுக்குள்ளுமே நடக்கலாமென்று அனுஜ்ஞை பண்ணப்பட்டிருக்கிறது. (மிதாக்ஷரா இரண்டாவது புஸ்தகம் - ௧௧ வது அத்தியாயம் - ௩ வதுவாக்கியம்.

பாகத்துக்குட்படாத சொத்து.

280. அடியிற்கண்டசொத்துக்கள் பாகத்துக்குட்படாதவைகள்.

(1.) தர்மவிஷயமாய்க் கொடுத்துவிட்ட பூமிகளும் தர்மத்துக்காக ஏற்படுத்தின எல்லாச்சொத்துகளும். (ஒன்று – ௨0அ - ௨௧0.)

(2.) ஜேஷ்டபுத்திரனுக்குக் கிடைத்தராச்சியமும் பூர்விகமான ஜமீன்களும். (ஒன்று-௧௬அ, ௨0அ ; ஸ-அ- ௧அ௪௬ஷூரி - அப்பீல் - நம் - ௨0 ல் தீர்ப்பு.)

(3.) ஒருகுடும்பத்தின் அந்தஸ்தையும் பெருமையையும் காப்பாற்றும்பொருட்டாக க்கொடுத்தநிலம். (ஸ-அ-௧அ௫0ஷூரி - அப்பீல் - நம் – ௫ல் – தீர்ப்பு.)

(4.) கெவரன்மெண்டார்பரவானுவினால்கிடைத்துப் புதிதாய் ஜேஷ்டகுமாரன் பெயரிலேசெய்த ஜமீன்கள். (ஸ - அ - ௧அ௧௬ஷூ - ரி - அப்பீல் - நம் - ௧௧ ல் - தீர்ப்பு.)

(5.) சமுதாயசொத்திற் சேர்ந்ததானாலும் தன்பத்நியோடுகூடக் கிரகித்தயவுதக திரவியம். (ஒன்று - உகரு, உககூ.)

(6.) வழக்கமாய்த் தரித்துக்கொள்ளுகிற தம்முடைய வஸ்திராபரணங்கள். (ஒன்று - உகக.)

விபாகயோக்கியமானசில விஷயங்கள்.

281. ஜேஷ்டபுத்திரனுக்குக் கிடைத்தராச்சியமும் பூர்விகஜமீன்களும் விபாகயோக்கியமல்லாவிட்டாலும் ராஜனுக்கும்ஜமீன்தாரனுக்கும் உரியவையான ஜங்கமசொத்துக்கள் பாகிக்கப்படவேண்டும். (இரண்டு- ருஉகூ-ருரு0-எ ; ஸ-அ-கஅகசு ஹைரி - அப்பீல் நம்பர் - கக ல் ; கஅசஅ ஹை - ரி- அப்பீல் - நம் - சுசு ல் · தீர்ப்புகள்.)

282. ஜாகீர் சுரோத்திரியம் புரோகிதத்தொழில் கோயிலூழியமுதலானவை விபாகிக்கத்தக்கவை. (ஒன்று - உக0.)

283. பிதாவின்வருஷாசநம் புத்திரர்களுக்குப் பாகார்ஹத்தையுள்ளது. (ஒன்று - உ0கூ.)

லிகிதபூர்வஸ்ரமானபாகம் யுக்தம்.

284. விபாகஞ்செய்துகொள்ளுகிறவர்கள் விவாதத்தைத் தடுக்கும்பொருட்டும் பாகஸ்தர்களுடையலாபத்தைச் சம்ரக்ஷிக்கும் பொருட்டும் தங்களுக்குள்ளே பாகபத்திரிகைகள் பிறப்பித்து அவனவன் பெற்றுக்கொள்ளவேண்டியது.

285. ஷை பாக பத்திரிகைகளில் ஒவ்வொருவனுடைய பாகமின்னின்னதென்று கண்டிருக்கவேண்டியது- ஞாதிகள் அல்லது அன்னியர்கள் சாட்சியம் போட்டிருக்கவேண்டியது. (ஒன்று - உஉஉ - உஉரு.)

286. மேற்படிபத்திரிகைகள் அபேக்ஷிககத்தக்கவைகளாயிருந்தபோதிலும் பெறவேண்டுமென்பது அநிவார்யமல்ல. (ஒன்று - உஉஉ.)

பாக நிரூபணம்.

287. விபாகபத்திரிகை பிறந்ததினாலேயே குடும்பம் விபாகமானதென் றெண்ணக்கூடாது. குடும்பம் விபாகமானதென் றெண்ணுவதற்கு அந்தந்தப்பாகஸ்தனும் அவனவன்பாகத்

தைக் கைப்பற்றி யிருக்கவேண்டும். (ஸ - அ - கஅசஅஞ - ரி- அப்பீல் — நம் - சு - அ ல் - தீர்ப்புகள்.)

288. நிலத்தின் பாகமன்றியில் உத்பத்தியைமாத்திரம் பாகித்துக்கொள்ளுகிறதினுலே விபக்த குடும்பமென்று சொல்லக் கூடாது. (நெல்லூர் - ஜி - கோ - பண் - கஅஉசஞ - அக்டோபர்மீ - அ௳.)

289. பாகத்துக்காக வியாச்சியம்பண்ணுகிறவன் வியாச்சியம் நடந்துகொண்டிருக்கும்போது இறந்துபோனல் அவன் அவிபக்தனென் றெண்ணவேண்டியது. ஆகையால் அவனுடைய பத்நீ அவனுடையபாகத்தைக் கேட்கப் பாத்தியஸ்தையல்லள் (ஸ - அ - கஅருசஞ - ரி- அப்பீல் - நம் — அசு ல் - தீர்ப்பு.)

290. குடும்பசொத்தில் பாகத்துக்குப் பாத்தியஸ்தனென்று கண்டிருக்கிற தீர்ப்பு அவன் இறந்துபோகுமுன் நிறைவேறு விட்டால் அவன் அவிபக்தனய் இறந்துபோனனென்று எண்ணவேண்டியது. (ஸ - அ - கஅருருஞ - ஸ்பெ-அப்பீல் - நம் - சுஅ - ல் தீர்ப்பு.)

291. சிலசொத்துக்களை மாத்திரம் பாகித்துக்கொண்டு சிலவற்றை ஒருகாரியார்த்தமாய் சிலகாலவரையில் சமுதாயத்தில் வைத்திருந்தால் அதைச்சேர்ந்தவர்களை விபக்தர்களென் றெண்ணவேண்டியது. அவர்களில் ஒருவன் இறந்தால் அவனுடையபத்நீ சமுதாயத்தி லிருக்கிறசொத்தில் தன்புருஷனுடைய பாகத்தைக்கேட்கத் தகுதியுள்ளவளாயிருக்கிருள். (ஸ - அ - பண்டிதர்கள் - கஅருருஞ - ஏப்பிரல் மீ - ககவ.)

அவிபக்தர் களென் றூஹம். 292. ஹிந்துகுடும்பஸ்தர் ஒன்ருய்க்கூடியிருப்பது சாதாரணமானதால் விபாகசங்கதி ஆக்ஷேப கிரஸ்தமாய்விட்டால் விபாகஸ்தர்களாஞர்களென்கிறசங்கதி நிதரிசனமாகிறவரையில் விபாகமாகவில்லை யென்றே ஊகிக்கவேண்டியது. (ஒன்று-உஉ௫)

293. விபாகமானதற்குப்பிரத்தியக்ஷ பிரமாணமில்லாதப

பாகநிச்சயத்துக்கு அனுமாபக லக்ஷணங்கள்.

க்ஷத்தில் அது அனுமானத்தினுல் நிச்சயிக்கத்தக்கது. இதை உபயோகத்திற்குக் கொண்டுவருகிறது கஷ்டம்.

294. ஒருகுடும்பமானது குடியிருப்பு விஷயத்திலும் சாப்பாட்டுவிஷயத்திலும் சடங்குகள்விஷயத்திலும் பிரிந்திருந்தபோதிலும் சொத்துவிஷயத்தில் கூடியிருக்கலாம். மேலும் சொத்துவிஷயத்தில் பிரிந்து குடியிருப்புவிஷயத்திலும் சாப்பாட்டுவிஷயத்திலும் சடங்குகள்விஷயத்திலும் ஒன்ருகக்கூடியுமிருக்கலாம். (ஒன்று - உஉரு - உஉகூ.)

295. வைசுவதேவமுதலிய கர்ம்மம் பிரத்தியேகித்துச்செய்தலும், சமையல் பிரத்தியேகித்துச் செய்தலும், ஒருவரிடத்தில் ஒருவர்கடன்வாங்குதலும், கிரயவிக்கிரயம் இதர உடன்படிக்கைகள் அவர்களுக்குள்செய்தலும், ஒருவனுக்கொருவன் பிணைப்படுதலும், சொத்துவிஷயத்தில் ஒருவனுக்கொருவன் பிரதிகூலமாயாவது அனுகூலமாயாவது சாட்சியம் சொல்லுதலும், விபக்தர்களென்று சமீபஸ்தர்களுக்குத் தெரிந்திருத்தலும், கிராமத்தின் வரும்படிகளைத் தனித்தனியே வரப்பற்றிக்கொள்ளுதலும், விபாகமாயிற்றென்று ச[illegible]டத்தகுந்த குறிகள். (ஒன்று - உஉஎ.)

296. குடும்பசமுதாயத்திற் சம்பந்தித்தகர்மத்தைப் பிரத்தியேகமாய்ச் செய்வது விபாகமானதைக்காட்டத் தகுதியுள்ளதாயிருக்கும். அவனவன் இஷ்டானுசாரமாய்ச் செய்துகொள்ளும் தனிமையானகர்மங்கள் அப்படியாகமாட்டா. ஆனுலும்சமுதாயகர்மத்தில் வேறுபடாமலிருப்பதுவே முடிவான அவிபக்த்தத்துவலக்ஷணமென்று எண்ணக்கூடாது. (ஒன்று - உஉஎ - உஉஅ) குடும்பசமுதாய கர்மங்களாவன, சிராத்தம் வைசுவதேவம் கிருகதேவதாராதனம். அவனவன் செய்யவேண்டியதனிக்கர்மங்களாவன, பிராதக்காலத்திலும் மத்தியானத்திலும் சாயங்காலத்திலும் விதிக்கப்பட்டிருக்கிற ஸந்தியாவந்தநம் பிர்ம்மயஜ்ஞம் நவக்கிரஹபூஜை ஔபாஸநம் முதலியவைகள்.

297. விபக்தர்களாய் விட்டார்களென்கிறதற்கு உறுதியான நிதரிசநமிருக்க அபரக்கிரியைகள் சேர்ந்துசெய்தார்களென்கிறதினாலே அவிபக்தர்களென்று சொல்லக்கூடாது. (இரண்டு-௩௩௧ - ௩௩௨ - கோ - ௭.)

298. மேற்கண்ட சங்கதிகளெல்லாம் சாதகபிரமாணங்களாயிருக்கின்றன - ஆனாலும் யாவும் இருக்கவேண்டுமென்பது ஆவசிகமன்று. (ஒன்று - ௨௨௮.)

299. பங்காளிகள் ஒரேவீட்டில் இருந்துகொண்டு சமையலை பிரத்தியேகம்பிரத்தியேகமாய்ச் செய்துகொண்டிருத்தல் விபக்த்தத்துவத்திற்கு முககியமான நிதரிசநமென்று நம்பத்தக்கது. இதுவும் வேறுஹேதுக்களினாலே பரிஹாரமாகத்தக்கது. (ஒன்று - ௨௨௮ - ௨௨௯ ; இரண்டு - ௩௩௭ - கோ.)

300. பங்குக்காரரெல்லாரும் சம்மதிப்பட்டுத் தங்களிலொருவனுக்குப் பொதுவானபொருளை விற்றுப்போடலாம். (௰ - கோ - ௧௮௯0 - ஸ்பெ - அ - நம் - ௮௮ ல் - தீர்ப்பு.) அது விபாகத்துக்குக் குறியன்று.

XI. அத்தியாயம்.

தாயபாத்தியம்.

301. மரணமாவது சந்நியாசியாய் லோகவியாபாரத்தை விட்டுவிடுதலாவது இறந்துபோயிருப்பானென்று ஊகிக்கத்தக்க தீர்க்ககாலபிரவாசமாவது ஒருவனுக்கு நேர்ந்தால் மற்றைய பாத்தியஸ்தர் தாயபாகஞ்செய்துகொள்ளலாம். (ஒன்று—கஉஉ) தாயபாகத்திற்கு ஆரம்பம்.

302. ஜாதிபிரஷ்டத்துவமும் இப்படியே (ஒன்று-கஉஉ) ஆனாலும் இது ஒருவன்சொத்தை இழந்துபோகக் காரணமாயிருக்கிறதென்று இங்லிஷ்துரைத்தனத்தார் இதைத்தள்ளிப்போட்டார்கள். (கஅ௫0ஷு - உக வது - ஆக்ட்டு.)

303. ஒருவன் இன்னவிடத்திலிருக்கிறானென்று சமாசாரம் தெரியாமற் காணப்படாதிருக்கிறவன் இறந்துபோயிருப்பானென்று ஊகிப்பதற்கு அவனுடைய வயதுக்குத்தக்கபடி காலபரிமாணம் வேறுபட்டிருக்கிறது. ௬0 வயதுள்ளவனானால் மேல் உ0 ஷுத்திற்கு இறந்தவனென்று நினைக்கப்படுவான் - ௬0 ஷு ௬0 - வயதுள்ளவனானால் மேலே - கரு - வருஷத்திற்கும் - ௬0- வயது தாண்டினவனானால் மேல் - கஉ - ஷுத்திற்கும் அவன் இறந்தவனாக எண்ணப்படுவான். (இரண்டு-உ௬எ-உ௬அ-கோ.) மரணத்தை ஊகிக்கத்தக்க காலபரிமாணம்.

304. தாயபாக பாத்தியமானது இறந்துபோனவனைக்குறித்து உத்தரக்கிரியை செய்கிறவர்களுக்கு உண்டாகிறது. அவனுக்கு உத்தரக்கிரியைசெய்வதற்கு பந்துக்களில்யார்தக்கவர்களோ அவர்களே பிந்தியபாத்தியஸ்தராகிறார்கள். அப்படியல்லாதவர்கள் பிந்தியபாத்தியஸ்தராகமாட்டார்கள். (எல்பர்லிங் -௬எ.) உத்தரக்கிரியை செய்வதனால் வந்த தாயபாத்தியம்.

305. இறந்தவனுக்கு உத்தரக்கிரியை செய்வதற்குத்தகுதியில்லாதவன் உத்தரக்கிரியை செய்கிறதினாலே தாயபாகபாத்தியஸ்தனாகமாட்டான். (ஒன்று - கஉக - க௬0.)

306. ஸ்திரீகளில் சிலர்மாத்திரம் உத்தரக்கிரியை செய்ய லாம். அவர்கள் சுதாவில் வேதமோதக்கூடாதாகையால் ஒருவ ரைக்கொண்டும் செய்விப்பார்கள்.

பின்னிட்டுப்பிறக்கிற பிள்ளைக்குப்பாத்தியமுண்டாகலாம்.

307. தாயாதிகாரம் சித்திப்பதற்குத்தாயாதிகாரி பிறந்திருக்கவேண்டுமென்கிற நிமித்தமில்லை. கர்ப்பத்திலிருப்பதே போதுமானது. (எல்பர்லிங் - ௬0.)

பல அந்தஸ்துடைய வார்சுகள்.

308. சபிண்டர்கள், சமானோதகர்கள், பந்துக்கள், என்று தாயாதர் மூன்றுவிதமுள்ளவர்களா யிருக்கிறார்கள். சபிண்டர்களென்றால்இறந்தவனுக்குத்தண்ணீரோடு பிண்டதானஞ்செய்கிறவர்கள்-சமானோதகர்களென்றால் உதகதானமாத்திரம் செய்கிறவர்கள் - மற்றஞாதிகள் பந்துக்களென்னப்படுவார்கள். (மிதாக்ஷரை - இரண்டாவது - புஸ்தகம் - ஐந்தாவது - அத்தியாயம் - ௬ - வது வாக்கியம் ; இரண்டாவது புஸ்தகம் - ௬ - வது - அத்தியாயம்) ஸபிண்டர்களில்லாவிட்டால் ஸமானோதகர்கள் பிண்டதானஞ்செய்வார்கள். சபிண்டர்களும் ஸமானோதகர்களு மில்லாவிட்டால் பந்துக்கள் செய்வார்கள்.

309. ஸபிண்டர்கள் இரண்டுவிமானதர்கள்-அதில் ஸமீபஸ்தர்கள், பிண்டங்களின் தானகிரகண சம்பந்தமுள்ளவர்கள். தூரஸ்தர்கள்,கையிலொட்டிக்கொண்ட பிண்டலேபத்தின்தானக்கிரகணசம்பந்தமுள்ளவர்கள். ஸமானோதகர்களும் இரண்டுவிதமானவர்கள். ஆனால் உதகதானம் செய்யும்விஷயத்தில் அவர்களில் பேதமில்லை. (மநுவர்த்தமுக்தாவளியில் மநு அஞ்சாவது அத்தியாயம் - ௬0 - வது - வாக்கியம்.)

ஸபிண்டகர்களுடைய அவதி.

310. ஒருவனுக்குப் பின்னிட்ட ஆறாவது தலைமுறைவரையிற் புத்திரபரம்பரையார்களும் முன்னிட்ட ஆறாவது தலைமுறைவரையிற் பிதுருபரம்பரையார்களும் அந்தப்பிதுருபரம்பரையாருடைய ஆறுதலைமுறைவரையிற் புத்திரர்களும் சபிண்டர்களெனப்படுகின்றார்கள். சோதரர்களும் அவர்களுடைய ஐந்

தாந்தலைமுறைவரையிற் புத்திரபரம்பரையார்களும் மூலபுருஷனைபிதாவுக்குச் சந்ததியாராகின்றார்கள்-பத்நி புத்திரிகள் தௌஹித்திரர்கள் தாய் பிதாமஹி இவர்கள் ஸபிண்டவர்க்கத்திற்குட்பட்டவர்கள். (ஸரஸ்வதீவிலாஸம்-வரதராஜீயம்-ஸ்மிருதிமுக்தாபலம்.) எதிரீபாம்பரையில் மேற்கண்டவர்களைவிட ஸபிண்டர்களில்லை - ஸபிண்டவர்க்கத்தில் கடைசிசபிண்டன் மகன்பேரனுடைய கொள்பேரன்.

311. சமீபஸபிண்டர்கள், ஒருவனுக்குப்பின்னிட்ட மூன்றுதலைமுறையார்களும் முன்னிட்ட மூன்றுதலைமுறையார்களும் இரண்டாந்தரஞ்சொன்ன மூன்றுதலைமுறையாருடைய இரண்டாந்தலைமுறைவரைக்குமுள்ள சந்ததியார்களுமாம். (ஸ்மிருதிசந்திரிகை) பத்நியும் புத்திரிகளும் தௌஹித்திரர்களும் தாயும் பிதாமஹியும் ஸமீபஸபிண்டர்களிற் சேர்ந்தவர்கள். (ஸ்மிருதிமுக்தாபலம்) புருஷனுக்குப் பிரபௌத்திரன் வரைக்கும் ஸமீபஸபிண்டர்கள் - மற்றையவர்கள் தூரஸபிண்டர்கள். ஸமீபஸபிண்டர்கள்.

312. ஸபிண்டர்களான புருஷர்களுக்குப்பின்னாறுதலைமுறைப்புருஷர்களும் முன்னாறுதலைமுறைப்புருஷர்களும் இவர்களுக்குப்பின் ஆறுதலைமுறைப் புருஷர்களும் ஸமானோதகர்கள். (மிதாக்ஷரை - இரண்டாவது புஸ்தகம் - ருவது - அத்தியாயம்-சு-வது சுலோகம் ; ஸ்மிருதிசந்திரிகை ; ஸ்மிருதிமுக்த்தாபலம்.) ஸமானோதகர்கள்.

313. மேற்படி வர்க்கத்திற்சேர்ந்த ஞாதிகள் எல்லோரும் கர்மகர்த்தாவோடுகூடித்தங்களுக்கெல்லாம் பொதுவாக மூலபுருஷனாயிருக்கிற வொருவனுக்குக் கர்மஞ்செய்கிறார்களானதனால் இவர்கள் இத்தனைபெயரென்று முன்பு ஏற்படுத்தினோம். இப்படிசெய்யும் பிதுர்கர்மமேகூடிப் பிண்டோதகதானஞ் செய்வதென்னப்படும். பிண்டோதகதானங் கூடிச்செய்தல்.

314. பந்துக்கள் மூன்றுவிதமாயிருக்கின்றார்கள் - அவர்களில் தன்னோடு ஸமான அந்தஸ்தை யுடையவர்கள் யாரொன்றால் பந்துக்கள்.

பிதுருசோதரியின்புத்திரர்கள், மாதுருசோதரியின் புத்திரர்கள், மாதுலனுடைய புத்திரர்கள். தகப்பனோடுசமான அந்தஸ்தையுடையவர்கள் யாரென்றால் அவனுடைய பிதுருசோதரியின் புத்திரர்கள், மாதுருசோதரியின் புத்திரர்கள், மாதுலனுடைய புத்திரர்கள். தாயோடுசமான அந்தஸ்தையுடையவர்கள் யாரென்றால் தாயினுடைய பிதுருசோதரியின்புத்திரர்கள், மாதுருசோதரியின் புத்திரர்கள் மாதுலனுடைய புத்திரர்கள். இவர்கள் மேலே சொன்னபிரகாரம் ஒருவரோடொருவர் சம்பந்தப்பட்டிருக்கிறவர்கள். (மிதாக்ஷரை - இரண்டாவது புஸ்தகம் - ரு வது - அத்தியாயம்.)

தாயபாத்தியக்கிரமம்.

315. ஒருவனுக்குண்டாயிருக்கிற சொத்தானது அடியிற்கண்ட கிரமப்பிரகாரம் முதலில் ஸமீபஸபிண்டர்களை அடைகின்றது—

புத்திரர்கள்.

பௌத்திரர்கள்.

பிரபௌத்திரர்கள்.

பாரியை.

புத்திரிகள்.

தௌஹித்திரர்கள்.

தாய்.

தகப்பன்.

சோதரர்.

சோதரருடைய பிள்ளைகள்.

பிதாமஹி.

பிதாமஹன்.

பிதாமஹனுடைய புத்திரர்கள் (என்றால் பிதுருவ்யர்கள்.)

பிதாமஹனுடையபௌத்திரர்கள். (என்றால் ஞாதிகள்.)

பிரபிதாமஹன்.

அவனுடைய புத்திரர்கள்.

அவனுடைய பௌத்திரர்கள்.

இவர்களுக்குப்பின் அரசபிண்டர்கள் தங்கள்வரிசைப்படி தாயாதர்களாவார்கள் - அவர்களுக்குப்பின்பு சமானோதகர்கள் தங்களுடைய முறைப்படி தாயாதராவார்கள்- கடைசியில் பந்துக்கள் அவர்களுடைய வரிசைப்படி தாயம்பெறுவார்கள்.

316. முன்சொன்னவரிசையிற் சேர்ந்தவர்கள் மூலபுருஷனுடைய சொத்தில் முன்முன்முறையாய்ப்பாத்தியஸ்தராவார்கள். சொத்து மூந்தியவனைச்சேர்ந்தபின்பு வரிசையாய்த் தாயம்பெறும் பரம்பரையிருந்தாலும் அதிற்சேரமாட்டாது. இதற்கு உதாரணம். புத்திரன் முதலானோரில்லாதவனுடைய திரவியம் அவன் சகோதரபுத்திரனுக்குவந்து பின்பு அவனுடைய புத்திரபரம்பரைக்கு வருமேயல்லது முதல்வனுடைய பிதாமகிக்குவரமாட்டாது. மேலும் புத்திரிகைக்காவது மற்றொரு உறவின் முறையாளுக்காவது வந்ததிரவியம் இனிசொல்லப்படும் விதிப்படி அவளுடைய பின்பாத்தியஸ்தருக்கு வரும்.

317. புத்திரர்கள் பிதாவோடு வீபக்தர்களாய்த் தங்கள் அம்சங்களைப் பெற்றிருந்தாலும் பிதாவிற்குப்பின்பு அவன்சொத்து சேரத்தக்க பின்பாத்தியஸ்தராதலால் பங்குசுதந்திரமுள்ளவர்களாவார்கள். (ஒன்று - கஅ௯.) புத்திரர்கள்.

318. விபாகத்திற்குப் பின்னிட்டுப் புத்திரர்களுண்டானால் அந்தப்புத்திரர்களே பிதாவின் சொத்தையடைவார்கள். (ஒன்று - கஅஉ.)

319. புத்திரர்கள் எல்லாரும் சமமாகப்பாகம்பெறுவார்களேயல்லாமல் தாய்களையனுசரித்து வித்தியாசமாகப்பாகமடையார்கள். (ஒன்று - உ0ரு) இந்தவிதி எல்லாச்சாதியாருக்கும் வித்தியாசமில்லாமல் உபயோகப்படும். (ஸ - அ - கஅசசு௵ - ரி - அப்பீல் - நம் - உ0 ல் - தீர்ப்பு.)

320. ஜேஷ்டனுக்கு அதிகபாகபாத்தியம் இந்தக்காலத்தி லில்லை. (ஒன்று - ககூகூ) ஆனால் ராச்சியமும்பூர்விகமான ஜமீன் களும் ஜேஷ்டபுத்திரனை யடையும். (ஸ-அ - கஅசசுஹு - ரி - அப்பீல் - நம் - உ0ல் - தீர்ப்பு.)

பௌத்திர பிரபௌத்திரர்கள்.

321. பௌத்திரர்களும் பிரபௌத்திரர்களும் அவரவர்க ளுடைய பிதாக்களின் அம்சங்களுக்குத் தக்கபடி பாகத்தை யடைவார்கள். (ஒன்று - உ0எ.)

322. பிதாவிறந்த பௌத்திரனும், பிதாவும் பிதாமகனுமி றந்த பிரபௌத்திரனும் பாகித்துக்கொள்ளும் விஷயத்தில் அப் போது ஜீவித்திருக்கும் புத்திரனோடு பாகஞ்செய்துகொள்ள வே ண்டியது. (இரண்டு - உருக - ஸ்ரீகிருஷ்ணன்.)

பிரபௌத்திரபுத்திரன்.

323. விபாககாலம் நேரிட்டபோது புத்திரனும் பௌத் திரனும் பிரபௌத்திரனும் இறந்துபோய் பிரபௌத்திரனுடைய புத்திரனிருந்தால் அவன்பாகார்ஹனாகமாட்டான். 'தூரஸ்த ஸ பிண்டனென்கிறதினால் பாத்தியஸ்தனாகலாம் - தாயம், இறந்து போனவனுடைய பத்நியைப்போயடையும். பிரபௌத்திரனி ருந்து சொத்தையடைந்தால் அவனுடைய புத்திரனே பாத்திய ஸ்தனாவான். (ஒன்று - கஉரு.)

தேசபிரஷ்டனுடைய பாத்தியம் சீவித்திருக்கும்.

324. சொத்துக்குடையவன் போனவிடம் தீர்க்ககாலம் தெரியாமல் அவன் இறந்திருப்பானென்று நம்ப இடமுண்டா யும் அவனுடைய சந்ததியார்போன விடமும் அனேககாலம் தெ ரியாமலுமிருக்க அவனுடைய ஆறுதலைமுறைக்குட்பட்ட யா ராவதுவந்தால் அவனே சொத்தையடைய பாத்தியஸ்தனாவான். அந்தக்கைம்பெண் ஆகமாட்டாள். (ஒன்று - கஉரு, ககூஉ.) இந் தப்பரம்பரையில் இந்தத்தூர சபிண்டனுக்கு முற்பட்டவனெ னாகிலும் எதிரில் பிழைத்திருந்து தாயம்பெற்றபக்ஷத்தில் அந்தத்தாயம் இவனுக்குமுறையாய் வருமென்கிற எண்ணத்தி னால் இவனுடைய தாயாதத்துவ மொப்புக்கொள்ளப்பட்டது.

325. பாகயோக்கியகாலம் நேரிடுமுன் இறந்துபோன புத்திரனுடைய அம்சமானது அவனுடைய பத்நியை அடையமாட்டாது. (இரண்டு - ௨௬௧, ௨௬௨ - கோ - டோரின்.) இறந்துபோன புத்திரனுடையஅம்சம்

326. ஒருவனுக்கு அநேகபத்நிகளிருக்கிற விஷயத்தில் அவனுடைய திரவியம் முன்னே முதல்பெண்சாதிக்கு வருமென்றும் அவளுக்குப்பின்பு மற்றவர்களுக்கு விவாஹக்கிரமப்பிரகாரம் வரிசையாய்க் கிடைக்குமென்றும் தீர்ப்புசெய்யப்பட்டிருக்கின்றது. (ஒன்று - ௧௬௯, ௧௬௭ ; ஸ - அ - ௧௮௨௪(ஹ) - ரி - அப்பீல்-நம் - ௫ல் ; ௧௮௬௫ஹ்ரி-அ-நம்-௧-ல்-தீர்ப்புகள்.) இது திராவிடாசாரத்தில் சாஸ்திரீயமாக விருக்கவில்லை. ஆதலால் பார்யைகளெல்லாரும் பர்த்தாவின் திரவியத்தில் சமமான சுவத்துவமுள்ளவர்களா யிருப்பார்கள். (மிதாக்ஷரை - ௨ - ௧ - இவ்வசனம் கோல்புருக்துரை மொழிபெயர்த்த புத்தகத்தில்-௫-ம் வசனத்துக்கும் - ௬ம் - வசனத்துக்கும் இடையில் விட்டுப்போய்விட்டது ; ஸ்மிருதிசந்திரிகை.) பத்நிகள்.

327. புத்திரிகைகளுள்ள விதவைகள் ஸ்தாவரசொத்துக்களைச் சரியாய்ப்பங்கிட்டுக்கொள்வார்கள். அது புத்திரிகைகளில்லாத விதவைக்கு வரமாட்டாது. ஜங்கமசொத்து எல்லாருக்கும்சரியாய்க் கிடைக்கும். (ஸரஸ்வதீவிலாசம்.)

328. புத்திரிகைகளுக்குள் அவிவாஹிதைகள் முதலிலும் அவர்கட்குப்பின்பு புத்திரசந்ததியை யுடையவர்களும் புத்திரர்களைப் பெறத்தக்கவர்களான விவாஹிதைகளும் புத்திரர்களையுடையவர்களான விதந்துக்களும் சொத்தையடைவார்கள் - இவர்களில் பின்னிட்ட மூன்றுவகையார்களும் சமமான ஸ்வத்துவமுள்ளவர்கள். (ஸ்மிருதிசந்திரிகை.) புத்திரிகைகள்.

329. மேற்கண்டவர்கட்குப்பின்பு புருஷனுள்ளவர்களாய் மலடிகளாயிருக்கிறவர்களும் புத்திரஹீனர்களாய் விதந்துக்களானபுத்திரிகைகளும் சொத்தை யடைவார்கள். இவர்களும் சம

மானஸ்வத்துவமுள்ளவர்கள். (மிதாக்ஷரா இரண்டாவது புஸ்தகம் - கக வது - அத்தியாயம் - கரு வது - வாக்கியம்.)

330. மேற்கண்ட ஒவ்வொருவர்க்கத்தவர்களிலும் தனமுள்ளவனைக்காட்டிலுந் தனமில்லாதவனுக்குமுந்தி தாயம்சேரும். (மிதாக்ஷரா - இரண்டாவது புஸ்தகத்தில் - கக வது - அத்தியாயம் - கரு வது - வாக்கியம்.) இவ்வளவு தனமுள்ளவனுக்குத் தாயம் கிடையாதென்று தனத்தின் அளவுசொல்லப்படவில்லை. ஆனாலும் அதுஜீவனோபாயத்திற்குப் போதுமானதாயிருக்கவேண்டுமென்று தெரியவேண்டியது.

331. முன்சொன்ன அந்தந்தவர்க்கங்களில் புத்திரிகைகளெல்லாம் சமமானபாகஸ்வத்துவ முடையவர்கள். (ஸ - அ - பண்டிதர்கள் - கஅ௫உ ௵ - மேமீ - உ0வ.) இது பிதாவினுல்வந்த தாயாதிகாரத்தைப்பற்றியது என்றறியவேண்டியது. தாயின்சொத்தை யடைகிறவிஷயத்தில் தகப்பனுக்கு அநேக பத்னிகளிருந்தால் புத்திரிகைகள் தன்தன்தாய்சொத்தை யடையவேண்டியவர்கள். (ஸ-அ-பண்டிதர்கள்-கஅ௫ச ௵ ஜூலைமீ ௬வ.)

புத்திரிகைகளுடையபுத்திரிகைகள்.

332. இந்தத்தாயஸ்வத்துவம் புத்திரியின் புத்திரசந்ததிக்குச்சேருமேயன்றிப் புத்திரிகாசந்ததிக்குக் கிடைக்கமாட்டாது. (பெரியமக்கிநாட்டன் - கா.)

தௌஹித்திரர்கள்.

333. தௌஹித்திரர்கள் அவரவர்களுடைய தாயின் அமிசத்திற்குத்தக்கபடி சொத்தைப்பங்கிட்டுக் கொள்ளவேண்டும். (ஒன்று - கச௫.)

தௌஹித்திரிகள்.

334. தவுஹித்திரிகளுக்குத் தாயம்கிடையாது. (ஸ-கோ-கஅ௬க - ஸ்பெ - அ - நம் - உசகா ல் - தீர்ப்பு.)

சூத்திரர்களில் வைப்பாட்டிபிள்ளைகள்.

335. சூத்திரர்களில் தௌஹித்திரரில்லாவிடின் வைப்பாட்டி புத்திரர்கள் பூர்ணமானபாகத்தை யடைவார்கள். (ஒன்று - கருஉ.) இருந்தால் அரைப்பங்கை யடைவார்கள்.

தாய்.

336. பிதுருபரம்பரையில் தகப்பனுக்குமுன் தாய்பொரு

ளை யடைவாள். (ஸ - அ - பண்டிதர்கள் - கஅகூஅ௵ - டிசம்பர்மீ - உசஉ.)

337. தகப்பனுக்கு அநேகபாரியைகள் இருப்பார்களானால் இறந்தவனுடைய சொத்து சக்களத்தித்தாய்மாருக்குக்கிடைக்கமாட்டாது. அவன் தாய்க்குமாத்திரங் கிடைக்கும். (ஒன்று - கசச.)

338. பிராதாக்களில் சோதரர்கள் முன்னேசொத்தை யடைவார்கள். அவர்களில்லாவிடின் பின்னோதரர்கள் அடைவார்கள். (ஒன்று - கசச.) பிராதாக்கள்.

339. பங்குபிரிந்த சகோதரர்கள் மறுபடியுங்கூடியிருந்து திரும்பியும் பங்குபிரித்துக்கொள்ளும்போது கூடுங்காலத்திலிறந்தவனுடைய பங்கு கூடியிருந்த ஏகோதரருக்கும் அவனுடன் பிறந்தபெண்களுக்கும் சமமாகச்சேரும். ஏகோதரரில்லாதபக்ஷத்தில் அவர்களுடன் பிறந்தபெண்களுக்கும் பின்னோதரருக்கும் சமமாய்ச்சேரும். (மிதாக்ஷரை - உ - க - கரு.)

340. மேல்சொன்னபடி தகுதியுள்ளவர்கள்தவிர சோதரிகள் வார்சுவர்க்கத்திற் சேர்ந்தவர்களல்லர். (இரண்டு - உசரு - உசச - கோல்புருக்கு - சதர்லாண்டு.) சோதரிகள்.

341. இறந்தவனுக்கு உடன்பிறந்த பெண்களும் அவர்களுடைய புத்திரர்களும் அபரக்கிரியை செய்யலாமாகையால்தாயம் பெறும்படியானவர்கள் இல்லாதபக்ஷத்தில் அவர்களுக்குஸ்வத்துவமுண்டென்று சதர்கோர்ட்டுப்பண்டிதர்கள் வாதிக்கிறார்கள். (கஅருகூ-ஆகஷ்டு-உச ; கஅசுக-அக்டோபர் - கூ0.) இந்தவாதம் ஊகிக்கப்பட்டதென்றும் உடன்பிறந்தபெண்களையும் அவர்கள் புத்திரர்களையும் தாயபரம்பரையிற் சேர்த்தெண்ணாத மிதாக்ஷரைக்கு நேரேவிரோதமானதென்றும் சதர்கோர்ட்டார் அதையங்கீகரித்தாரில்லை. (ஸ - கோ-கஅருஅ-ஸ்பெ-அ-நம்-ககஅ ; கஅருகூ-ஸ்பெ-அ-நம்-க0எ ; கஅக0-ஸ்பெ-அ-நம்-கஅச ல்-தீர்ப்புகள்.)

பிராதாக்களுடையபுத்திரர்கள்.

342. பிராதாக்களுடைய புத்திரர்களில் சோதரர்களுடைய புத்திரர்கள் முன்னும் பின்னேதரர்களுடைய புத்திரர்கள் பின்னும் அடைவார்கள். (ஒன்று - கசரு.) மேலும் அவிபக்தர்கள் முன்னும் விபக்தர்கள் பின்னுமடைவார்கள். (இரண்டு -உருச-ஸ்ரீகிருஷ்ண.) அந்தந்த வர்க்கத்தவர்களும் தங்கள் பிதாக்களுடைய கணக்குக்கு ஒத்தபடி சொத்தை யடைவார்கள். (மிதாக்ஷரை - இரண்டாவது புஸ்தகம்- நான்காவது அத்தியாயம்-எ—௬ - வாக்கியங்கள்.)

343. இறந்தவனுடையபொருள் பிழைத்திருக்கும் அவன் சோதரர்களுக்கு வருமேயல்லது அப்படிவருவதற்குமுன் இறந்தசகோதரருடைய புத்திரருக்குவரமாட்டாது. (பெரியமக்கினுடன் - ௯ ; எல்பர்லிங் - எஅ.)

சோதரர்களுடைய பௌத்திரர்கள்.

344. சோதரர்களுடைய பௌத்திரர்கள் நேரானவார்சுவர்க்கத்தவர்களல்லர். (எல்பர்லிங் - எஅ) ஆனாலும் பின்பு இவர்கள் தூரஸ்தஸபிண்டத்துவத்தாலாவார்கள்.

சோதரர்களுடைய புத்திரிகைகள்.

345. சோதரர்களுடைய புத்திரிகைகளுக்குப் பாகங்கிடையாது. (இரண்டு - உ௯௧ - உ௪0 - சதர்லிண்டு.)

மருமகள்.

346. மாமியாருக்கு மருமகள் கர்மம்செய்யலாமாகையால் அவளுடைய திரவியம் மருமகளுக்கு வருமென்று சதர்கோர்ட்டுப்பண்டிதர்கள் சொல்லுகிறார்களானாலும் இக்கருத்தைச்சதர்கோர்ட்டார் அங்கீகரிக்கவில்லை. உடன்பிறந்தவர்களேயும் அவர்கள்புத்திரர்களேயும் தாயபரம்பரையிற் சேராதகாரணங்களே இதற்கும் ஆகின்றன. (ஸ-கோ-கஅ௫அ-ரி-அ-௩ம்-௯௯ ல் தீர்ப்பு.)

அவிபக்தரூடும் பவிஷயத்தில்பாத்தியம்.

347. அவிபக்தரான சோதரர்களுடைய தாயமடையும் பரம்பரை, விபக்தனுடைய தாயமடைகிறவருடைய பரம்பரையினும் சிலசங்கதியில் வேறுபடுகின்றது. ஒவ்வொரு சோதரனுக்கும் ஏற்பட்டபாகம் கிரமமாக அவன்புத்திரர்களுக்கும் பௌத்திரர்களுக்கும் பிரபௌத்திரர்களுக்கும் விபக்த சொத்தைப்போ

லப்போய்ச்சேருகிறது. இவர்களில்லாதபக்ஷத்தில் அவன்பாகம் அவன் சோதரர்களுக்குச் சமமாகப்போய்ச்சேருகிறது. இறந்து போன சோதரனுடைய பிரபௌத்திரபுத்திரனுக்குக் கிடைக்க மாட்டாது. ஆனால் அவன்பிதாவுக்கு அல்லது பிதாமகனுக்கு வந்திருந்தால் கிடைக்கும். சோதரர்களுக்குவந்தபாகம் பிரபௌத்திரன்வரையில் புத்திரசந்ததியை யடையும். அவர்களில்லாதபக்ஷத்தில் அவர்களில் கடைசியில் இறந்தவனுடைய பாரியையைப் போயடையும். முன்னிட்டு இறந்துபோனவர்களுடைய பாரியைகளுக்குப்பங்கு கிடையாது. அவிபக்தசோதரர்களுடைய புத்திர்சந்ததியில் ஒருசோதரனுடைய புத்திரனிடத்திலிருந்து அவிபக்தரான அத்தியந்த தூரஜ்ஞாதிவரையிலும் அந்தப்பங்கு போய்ச்சேரும். இவர்களில் யாருமில்லாவிட்டால் அவர்களில் கடையில் இறந்தவனுடை பாரியையைப்போயடையும்-அவளில்லாதபக்ஷத்தில் விபக்தர்களே அடையும். (கஅ௬அ - ஸ்பெ - அ - க௬௯ - நம் - ஸ - கோ - தீர்ப்பு.)

348. இறந்தவனுடைய பெண்சாதிக்குமுன் தூரஸ்த அவிபக்தபந்துக்களுக்குச் சொத்துகிடைக்கிறது. (ஸ - அ - பண்டிதர்கள் - கஅ௨௯ஞு - செப்டம்பர்மீ - க௨௨.)

349. இரண்டு அவிபக்தசோதரர்கள் ஒருவனுக்குப் பின்னொருவனாகப் புத்திரசந்ததி யில்லாமல் இறந்துபோய் அவர்கட்குப்பத்நிகளிருந்தால் பின்னிட்டு இறந்தவனுடைய பத்நி மாத்திரம் சொத்திற்குப் பாத்தியஸ்தையாகிறாள். ஏனென்றால் முதல் இறந்தவன் மரணமடைந்தவுடனே சொத்தெல்லாம் ஜீவித்திருக்கிற சோதரனையடைகின்றன. பின்பு அவனுடையபத்நியை அடைகின்றன. (இரண்டு - ௨௩க - ௨௯௨ - கோ - டோரின்.)

350. அவிபக்தசோதரர்களிருவரில் ஒருவனிறந்து அவனுக்குப் புத்திரியிருந்தால் அந்தப்புத்திரி அவனுக்குவார்சாகமா

ட்டாள் – ஜீவித்திருக்கிற மற்ருெருசோதரனையும் பின்பு அவன்புத்திரசந்ததியையும் சொத்துஅடையும். (ஸ - அ - பண்டிதர்கள் - கஅ௫௩ஞூ - அக்டோபர்மீ - உசவ.)

சமாம்சகனுடைய ஸ்வார்ஜிதம்.

351. சமாம்சகனுடைய ஸ்வார்ஜிதமான ஸ்தாவரஜங்கமசொத்துக்கள்யாவும் அவனுடைய பிரபௌத்திரன் வரையிற் புத்திரசந்ததிகளை யடையும். (ஸ-அ-பண்டிதர்கள்-கஅ௩அஞூ-ஜூன்மீ-க௫வ ; கஅ௫0-நவம்பர்மீ - எவ.) புத்திரசந்ததியில்லாவிடின் அவிபக்த சோதரர்களைச்சேர்ந்து அவர்கள் வமிசத்தைஅடையும். (ஸ-அ - பண்டிதர்கள் - கஅ௩௯ஞூ- ஜநவரிமீ- கசவ.)

சுவீகிருத புத்திரனுடையசொத்து.

352. சுவீகிருதனுடைய சொத்து அந்தச்சுவீகாரம்செய்துகொண்டகுடும்பத்தில் யாருமில்லாவிட்டால் அவனுடையஜநககுடும்பத்திலிருக்கிற பந்துக்களைவர்க்கக்கிரமமாக அடையுமென்றும் ஜநகபிதாவின்சந்ததியில் யாருமில்லாதபக்ஷத்தில் அந்தத்திரவியம் ஸ்வீகிருதனை யடையுமென்றும் சதர்க்கோர்ட்டுப்பண்டிதர் சொல்லுகிருர்கள் - முக்கியமல்லாத தத்தகமீமாம்சையென்கிற கிரந்தத்தில் ஸ்ரீராமபண்டிதர்வாதிக்கும் வாதத்தை யனுசரித்துச் சொன்ஞர்களாஞலும் அது, நந்தபண்டிதர் தேவநாதபட்டர் ஸ்வீகாரவிஷயமாய்ச்செய்த கிரந்தங்களிற் சொல்லப்படாமற்போனதுமன்றி மனுவசனத்துக்கு நேரோ விரோதமாயிருப்பதிஞலும் ஸ்வீகாரத்திஞல் ஸ்வீகிருதனுக்கும் ஜநகபிதாவுக்கு முண்டானபிரிவு திருப்பக்கூடாததானதிஞலேயும் சதர்க்கோர்ட்டாரால்ப்பண்டிதர்களுடைய அபிப்பிராயம் சம்மதிக்கப்படவில்லை. (ஸ-கோ - பண்-கஅ௫௫-அக்டோபர்-கூ ; கஅ௫எ-ஆகஷ்டு - உஎ ; ஸ-கோ-கஅ௫௫ - ஸ்பெ - அ - நம் - ககஉ ல் - தீர்ப்பு ; ஹை - கோ - கஅசுக - ஸ்பெ - அ - நம் - கஎஎ - கஅஉ ல் - தீர்ப்புகள்.) மேலும் ஸ்ரீராமபண்டிதர் வம்சபரம்பரையில் ஜநகபிதாவின் வம்சஸ்தனை தாயவிஷயமாய் எவரி

டத்திலும் சேர்க்கவில்லை. பாரியைக்குமுன் என்று பண்டிதர் சொல்லுகிறார்களானாலும் அதுபிராமாணிக கிரந்தமான மிதாக்ஷ ரையிற்சொல்லப்பட்ட தாயபரம்பரைக்குநேரோவிரோதமானது.

ஸ்திரிகளுடைய பாத்தியம்.

353. விபக்தகுடும்பத்தில் மாத்திரம் ஸ்திரீகள்சொத்துக்குப்பாத்தியர்களாகின்றார்கள். (எல்பர்லிங் - சுஅ.) அவிபக்தகுடும்பங்களில் புருஷர்களில்லாவிடின் சொத்தை அடைகின்றார்கள்.

ஸ்திரியின் சொத்திற்குப் பாத்தியஸ்தர்கள்.

354. ஸ்திரீகட்குக்கிடைத்தசொத்து எவ்விதமாகக்கிடைத்ததானாலும் அது முதலில் புத்திரிகளை யடைகிறது. அவர்களில்முதலில் விவாகிதைகளைவிட அவிவாகிதைகளையும் சொத்தைப்பெற்றிருக்கிறவர்களைவிட சொத்தில்லாதவர்களையும் பின்பு புத்திரிகைகளுடைய புத்திரிகைகளையும் புத்திரிகைகளுடைய புத்திரர்களையும் பின்பு புத்திரர்களையும் பௌத்திரர்களையும் அடைகின்றது. (ஒன்று - ருக ; மிதாக்ஷரை - இரண்டாவது புஸ்தகம் கக வது - அத்தியாயம் - ௯ - கரு வது - வாக்கியங்கள்.) அபுத்திரவதிகளுக்குமுன் புத்திரவதிகளுக்கும் அல்லது புத்திரர்களைப்பெறத்தக்கவர்கட்கும் சேரும். (ஸ்மிருதிசந்திரிகை.) இவர்களில்லாமற்போனால் பாரியைக்குக்கிடைத்த பர்த்தாவின்சொத்து பர்த்தாவைச் சேர்ந்தவர்களுக்கு முறையாய்க்கிடைக்கும். பிராமிய, தைவ, ஆரிஷ, பிராஜாபத்திய, காந்தர்வமாகிய உத்தமவிவாகங்களாயிருந்தால் தாய்தந்தைகளால்வந்த ஸ்திரீதனசொத்து அவர்களை யடையாமல் புருஷனையும் அவனைச்சேர்ந்தவர்களையும் வர்க்கப்பிரகாரம் அடைகின்றது. ராக்ஷஸ ஆஸுரபைசாசங்களாகிய அதம விவாகங்களானால் தாய்தந்தைகளாற்கிடைத்த ஸ்திரீதனம் அவர்கள்பிழைத்திருந்தால் அவர்களையும் இல்லாவிட்டால் பர்த்தாவையும் அவனைச்சேர்ந்தவர்களையும் வரிசைக்கிரமமாய்ப் போயடையும். (ஒன்று - ருக - மிதாக்ஷரை இரண்டாவது புஸ்தகம் - கக வது - அத்தியாயம் — கக வது - வாக்கியம் ; ஸ்மிருதி சந்திரிகை.)

ஸ்திரீ கட்கு வெகுமதி.

355. ஸ்திரீகட்கு விவாககாலத்தில் புருஷன் கிரகோபகரணங்கள் பசுமுதலியவைகளை வாங்குகிறதற்காகக்கொடுத்தவெகுமதிப்பொருள். (ஸ்மிருதிசந்திரிகை-விவகாரமயூகம்) மாத்திரம் அவளுடைய சோதரர்களைப்போயடையும். (ஒன்று-௩௪-௨௫0.)

விவாஹ மில்லாத ஸ்திரியின்சொத்து

356. விவாகமில்லாமல் ஒருஸ்திரீ இறந்துபோனால் அவளுக்கு விவாகத்துக்சாக நிச்சயித்திருந்த புருஷனாலே பொன்முடிப்புக்காகக்கொடுப்பட்ட எந்ததிரவியமும் அவனைமறுபடி அடையவேண்டியது. அதில் இருதிறத்தார்களுக்கும் நேரிட்டசெலவுகழிக்கப்படவேண்டியது. அவளுடைய மற்றப்பொருள்அவள்சோதரர்களையும் பின்பு தாய்தந்தைகளையும் அடையவேண்டியது. (மிதாக்ஷரை இரண்டாவது - புஸ்தகம் - கக வது - அத்தியாயம் - ௬0 வது - வாக்கியம்.)

புத்திரிகைகளுடையபுத்திரிகைகள்.

357. புத்திரிகைகளுடைய புத்திரிகைகள் தம் தம் தாயின் வகையாகச் சொத்தையடைவார்கள். (மிதாக்ஷரை - இரண்டாவது புஸ்தகம்-கக வது- அத்தியாயம் - க௬ வது - வாக்கியம்.)

பந்துக்களில்லாதவிஷயத்தில் சொத்து அடையவேண்டியகிரமம்.

358. பந்துக்கள் ஒருவருமில்லாவிட்டால் ஒருபுருஷனுக்குக்கிடைத்திருந்தசொத்து அவனுடைய குருவையும் சிஷியனையும் சகபாடியையும் முறையே அடையும் - பிராமணரல்லாத ஜாதியாருடைய அந்தத்திரவியம் துரைத்தனத்தாரை யடையும். (மிதாக்ஷரை இரண்டாவது புஸ்தகம் - எ வது - அத்தியாயம்) பிராமண ஸ்திரீயல்லாத ஸ்திரீக்குக்கிடைத்தசொத்து பந்துக்களில்லாவிடின் துரைத்தனத்தாரை யடையும்.

359. பிராமணருக்குள்ளே பந்துக்களில்லாத பக்ஷத்தில் புருஷனுடைய திரவியமானாலும் ஸ்திரீயினுடைய திரவியமானாலும் வேதங்கற்ற குருவுக்கும் யோக்கியனான பிராமணனுக்கும் முறையாய்ச்சேரும். (மிதாக்ஷரை - ௨ - எ - ௬—௫.) ஆனாலும் பிரிவிகவுன்சலவர்கள் அந்தத்திரவியம் இதரஸ்திதிகளைப்போலே அரசனுக்கே சேருமென்று பிரகடனம்பண்ணி யிருக்கிறார்

கள். (௧அசுO - சூலை - ௬O ல் - காவலி வெங்கடநாராயணப் பாமேல் பந்தர் கலக்ட்டர் கொண்டுவந்த விவகாரம்.)

அரசன் பிராமணனுடைய திரவியத்தைப் பெறக்கூடா தென்று மனுவசனத்தில் ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிற து. பிராமணனுடைய திரவியம் அவன்மரணத்துக்குப் பிற்பாடு தாயாதிகாரி யில்லாதபக்ஷத்தில் பிராமணனுககே கொடுப்பிக்க வேண்டும், கொடாதபக்ஷத்தில் அரசனைப்பாவம் சுற்றிக்கொள் ளுமென்று நாரதவசனமிருக்கின்றது. (மிதாக்ஷரை-உ - எ - ௫.) இந்துசாஸ்திரமிப்படி ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருந்தாலும் பிரி விகவுன்சலர்கள் இதற்குவிபரீதார்த்தஞ்செய்கிறார்கள். பிராமண திரவியம் வேதமறிந்த நல்லபிராமணனைச் சேரும் என்பதனால் அப்படிப்பட்டவனை ஏற்படுத்தும் அதிகாரம் ஒருவனுக்கு உண் டாயிருக்கிறதென்றும் அப்படி திரவியத்தை உபயோகப்படுத் தாமற்போனால் அரசனைப்பாவஞ் சேருமானதினால் அவ்வதிகா ரம் அரசனிடத்திருக்கிறதாகையால் அப்படிப்பட்டவனை ஏற்ப டுத்துமளவும் திரவியாதிகாரம் ராஜாவினிடத்திருக்கின்றது, ஆ தலால் தாயாதிகாரியில்லாத பிராமணனுடைய திரவியம் மற்ற வனுடைய திரவியத்தைப்போலே அரசனைச்சேரவேண்டி யிரு க்கிறதேயல்லாமல் அதிலும்மேலான சுதந்திரமில்லாதவனுக்குச் சேராதென்று பிரிவிகவுன்சலவர்கள் வாதிக்கிறார்கள். இப்படிவா தித்துப்பின்பு இந்த அம்சம் சாதாரணநிபந்தனைகளின்படி தீர்க் கவேண்டியதேயல்லாமல் இந்துதருமசாஸ்திரப்படி யல்லவென் று வெளிப்படையாய்ச் சொல்லுகிறார்கள். இப்படிவாதித்தாலு ம் கடைசியில் இந்துசாஸ்திரத்தின்படி எப்போதாவது அரசன் எடுத்துக்கொள்ளக்கூடாததும எடுத்துக்கொண்டபக்ஷத்தில் பா பத்தை யுண்டாக்கத் தக்கதுமாகியதிரவியம் பிரிடீஷ்துரைத்தனத் தாருடையகாலத்தில் ராஜனையே அடையுமல்லது சாஸ்திரத்திற் சொல்லப்பட்டவருக்குக் கிடையாதென்று ஏற்படுகின்றது.

விரக்த்தனுடைய சொத்து.

360. லோகபந்தத்தைவிட்டு நீங்கினவனுடைய சொத்து அவனோடு சேர்ந்திருக்கிற ஆத்மசம்பந்தியானவனை யடையும். பிரமசாரியினுடையசொத்து அவன்குருவை அடையும். சந்நியாசியினுடையசொத்து அவனுடைய உத்தமசிஷியனை யடையும். வாநப்பிரஸ்தனுடையசொத்து அவ்வாச்சிரமத்தையடையத்தக்க அவன்கூட்டாளியையடையும். கடைசியில் அவனோடு ஒத்த ஆச்சிரமஸ்தர்களில் யாரையாவது அடையும். தேகசம்பந்திகளை அடையமாட்டாது. (மிதாக்ஷரை இரண்டாவது புஸ்தகம் - அ - வது அத்தியாயம் - க - சு வது - வாக்கியங்கள்.)

வேசியினுடைய சொத்து.

361. வேசியினுடையசொத்து முதலில் அவளுடைய புத்திரிகாசந்ததியையும் அதில்லாமற்போனால் இதரஸ்திரீகளுடைய சொத்தைப்போலே புத்திரசந்ததியையும் அடையும்.

362. சந்ததியில்லாவிடின் வேசியினுடையசொத்து அவள் எந்தக்கோயிலுக்கு ஊழியஞ்செய்கிறாளோ அந்தக்கோயிலைப்போயடையும். (ஸ - அ - பண்டிதர்கள் - கஅ௫௬௵ - செப்டம்பர்மீ - க௨௳.)

வைப்பாட்டிகள்.

363. வைப்பாட்டிகளுக்குப் பந்துக்களென்கிற கட்டுப்பாடு நீங்கிப்போனபடியினாலே அவளுடையசொத்து குலத்திற்பிறந்தகுழந்தைகள் முதலானயாருக்குஞ் சேராது. (ஸ - கோ - புரோ - கஅசச௵ - நவம்பர்மீ - கக௳ ; ஸ - தி - அ - எ - வது புஸ்தகம் - உஎ௬ வது - சைட்டு.) பின்பு பிறந்தசந்ததியாருக்குச்சேரும்.

XII. அத்தியாயம்.

பங்காளதேசசாஸ்திரம்.

364. பங்காளதேசத்தில் ஆசரிக்கப்படுகிற தர்மசாஸ்திரத்தோடு திராவிடதேச சம்பிரதாயத்துக்கு ஒத்தகாசிதேசசாஸ்திர சம்பிரதாயம் எந்தமுக்கியமான விஷயங்களில் பேதப்படுகிறதோ அந்தவிஷயங்கள் அடியிற்காட்டப்படுகின்றன.

பங்காளகாசீ சாஸ்திர பேதங்கள்.

365. தத்துசெய்துகொள்ள விதந்துவிற்குப் புருஷனுடைய அநுஜ்ஞையில்லாத பக்ஷத்தில் அவன்பந்துக்களுடைய அநுஜ்ஞைமாத்திரம் போதாது. (தத்தகமீமாம்சை - ஒன்று - கஅ) இதற்குவிரோதம் விவகாரமயூகம் - நாலாவது புஸ்தகம் - ரு வது - அத்தியாயம் - கஎ வது வாக்கியம். (இரண்டு - சுஉ - கோ.) ஸ்ரீராமபண்டிதருடைய தத்தமீமாம்சைக்கு விரோதம்.

சுவீகரிக்க விதந்துகட்கு அநுஜ்ஞை.

366. பிதுரார்ஜிதமான ஸ்தாவரசொத்திலும் அல்பபாகத்தைப் பிதா தன் இஷ்டப்படிக்கு விநியோகஞ்செய்யலாம். (தாயபாகம் - இரண்டு - உச.) இதற்குவிரோதம் மிதாக்ஷரா - க - வது - புஸ்தகம் - ரு வது - அத்தியாயம் - க - க0 வது - வாக்கியங்கள். இந்தவாக்கியங்களின் பிரகாரம் பிதா புத்திரர்களுடைய சம்மதியின்றி ஒன்றும் விநியோகஞ்செய்யக்கூடாது.

ஸ்தாவிர சொத்திற் பிதாவிற் குண்டாயிருக்கிற அதிகாரம்.

367. ஒருவிநியோகமானது சாஸ்திரத்தினாலே நிஷேதிக்கப்பட்டாலும் மிஞ்சிநடந்துபோனது தடுக்கப்படமாட்டாது. செய்தகாரியம் நூறுநிஷேதங்களாலும் தடுக்கப்படாதல்லவா. (தாயபாகம் - இரண்டு - கூ0.) இந்தச்சித்தாந்தத்தைக் காசிதேசத்தில் ஒப்புக்கொள்ளவில்லை. (ஒன்று - உகூ - உச - ஸ்மிருதிசந்திரிகை.)

சாஸ்திரவிரோதமான விநியோகங்கள்.

368. தகப்பன்சொத்து பிதுரார்ஜிதமானாலும் மற்றெவ்விதமானாலும் அவனிறந்துபோகும்வரையிற் புத்திரர்களுக்கு அ

தகப்பன் சொத்திற்புத்

திரர்களுடையபாத்தியம்.

திலே சொத்துவமில்லை. (தாயபாகம் - ஒன்று - ௯0 ; இரண்டு - ௯, ௧௧.) இதற்குவிரோதம் மிதாக்ஷரை முதலாவது புஸ்தகம் முதலாவது அத்தியாயம் - ௯ - ௨௯ - ௨௭ வது - வாக்கியம்.

தகப்பனைப்பாகங்கேட்கப்புத்திரர்களுக்குப் பாத்தியம்.

369. ஆகையால் பித்திரியமானசொத்திலும் புத்திரர்கள் தகப்பனைப் பாகங்கொடுக்கும்படி பலாத்காரஞ் செய்யக்கூடாது. பாகங்கொடுக்கவேண்டியது தகப்பனுடைய இஷ்டம். (தாயபாகம் – ஒன்று - ௯௮ ; இரண்டு - ௨0.) இதற்குவிரோதம். மிதாக்ஷரை முதலாவது புஸ்தகம் - இரண்டாவது அத்தியாயம் - ௭ வது - வாக்கியம். (ஒன்று - ௧௭௯.)

பிதாவின் பாகம்.

370. பித்திரியத்தைப் பிதா புத்திரர்களோடு பாகித்துக்கொள்ளுங்காலத்தில் பிதாவிற்கு இரண்டுபாகமுண்டு. (தாயபாகம் - இரண்டு - ௨0.) இதற்குவிரோதம் மிதாக்ஷரை முதலாவது புஸ்தகம் - ௫ வது - அத்தியாயம் - ௫ வது - வாக்கியம் - இந்த வாக்கியப்பிரகாரம் புத்திரர்களுக்கும் பிதாவுக்கும் சமபாகமுண்டாயிருக்கிறது.

விபாகந்திற்குப் பின்னிட்டுப்பிறந்தபுத்திரனுடைய பாகம்.

371. பிதாவுக்கும் புத்திரர்களுக்கும் பாகமானபிற்பாடு பிறந்தபுத்திரனுக்கு பிராதாக்களுடைய பாகங்களிலிருந்து பாகம் கிடைக்கவேண்டியது. (தாயபாகம் - ௭ வது - அத்தியாயம் - ௧0 ஆ ௧௨ - வரையும் வாக்கியங்கள்.) இதற்குவிரோதம் - மிதாக்ஷரை - முதலாவது புஸ்தகம் - ௬ வது - அத்தியாயம் - ௨ வது - வாக்கியம். மேற்படிவாக்கியப்படிக்குப் பிதாவின்பாகத்திலிருந்து கிடைக்கவேண்டியது.

சமாம்சகர்களாலே சொத்துஒளிக்கப்பட்டால்.

372. பாகத்திற்குட்படவேண்டிய சொத்தை ஒருசமாம்சகன் மறைத்திருந்தால் அவனுக்கு அதிற்கிடைக்கவேண்டிய பாகத்தில் சுதந்திரம்போகாது. (தாயபாகம் பதின்மூன்றுவது அத்தியாயம் – ௨ வது - வாக்கியம.) இதற்கு விரோதம் மிதாக்ஷரை முதலாவது புஸ்தகம் - ௯ வது - அத்தியாயம். ௪ - ௫ வது - வாக்கியங்கள்.

373. மலடிகளான புத்திரிகைகளுக்கும் புத்திரனில்லாமல் வைதவ்யத்தையடைந்த புத்திரிகைகளுக்கும் பிதாவின்சொத்தில் சொத்துவமில்லை. (தாயபாகம்-கக வது-புஸ்தகம்-உ வது-அத்தியாயம் - ௩ வது - வாக்கியம்.) இது மிதாக்ஷரை இரண்டாவது புஸ்தகம் இரண்டாவது அத்தியாயத்திலும் இரண்டாவது புஸ்தகம் - ௧ வது - அத்தியாயம் - க௩ வது - வாக்கியத்திலும் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. வந்தியைகளாயும் அபுத்திரவதிகளாயும் விதந்துக்களாயும் இருக்கிற புத்திரிகைகள்.

374. தனக்குமுன்னிட்ட பரம்பரையில் தாய்க்கு முந்தின பாத்தியஸ்தன் தந்தை. பிதாமஹிக்கு முந்தினபாத்தியஸ்தன் பிதாமஹன். (தாயபாகம்-கக வது-புஸ்தகம்-ச வது -அத்தியாயம்-௩-ச வது - வாக்கியம்.) இதற்குவிரோதம் மிதாக்ஷரை - இரண்டாவதுபுஸ்தகம்-௩ வது-அத்தியாயம்-ரு வது-வாக்கியம் - மேற்படிவாக்கியத்தில் நேரோ விரோதமான வசனத்தைச்சொல்லி நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. தாய்க்குமுன் தந்தைக்குப் பாத்தியம்.

375. சோதரனுடைய பௌத்திரர்கள் பிற்பட்ட பாத்தியஸ்தர் வரிசையிலிருக்கின்றார்கள். (தாயபாகம் – கக வது - புஸ்தகம் – ரு வது – அத்தியாயம் - ரு வது - வாக்கியம்.) இதற்குவிரோதம் மிதாக்ஷரை இரண்டாவது புஸ்தகம் - ரு வது - அத்தியாயம் - ச வது-வாக்கியம் - இந்தவாக்கியத்தால் அவர்கள் உத்தராதிகாரிகள் அல்லவென்று நீக்கப்பட்டிருக்கின்றார்கள். சோதரனுடையபௌத்திரர்கள்.

376. சோதரியின் புத்திரர்களும் பிற்பட்டபாத்தியஸ்தர்களுடையவரிசையி லிருக்கின்றார்கள். (தாயபாகம் - கக வது-புஸ்தகம் - ௬ வது - அத்தியாயம் - அ - க வது - வாக்கியங்கள்.) இது மிதாக்ஷரைக்குவிரோதம். (ஒன்று - கசஎ.) இதில் அவர்கள் பிற்பட்ட பாத்தியஸ்தர்களாகக்கண்டிருக்கவில்லை. சோதரியின் புத்திரர்கள்.

377. அபுத்திரவந்தனா யிறந்துபோனவன் விபக்தனாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவனுடைய சொத்தை அவன்பாரியை அடைவாள். (தாயபாகம் - கக வது புஸ்தகம் - க வது - இறந்துபோன அவிபக்தனுடைய பாரியை.

அத்தியாயம் - ௯௯ வது - வாக்கியம்.) இது, மிதாக்ஷரை-௨வ து-புஸ்தகம் - ௧ வது - அத்தியாயம் - ௫௦ வது - வாக்கியத்துக்கு விரோதம். இதனுல் புருஷன்விபக்தனு யிருந்தால் மாத்திரம்சொத்துவிதந்துவுக்குக் கிடைக்குமென்ருகிறது. (ஒன்று - ௧௨௧.)

ஸவுதாயகம். 378. ஸ்திரீக்குமாத்திரம் சுதந்திரமுள்ளபொருள் ஸ்திரீதனமென்னப்படும். (தாயபாகம்-௪ - ௧ - ௧௫—௨௦.) மிதாக்ஷரையில் - ௨ - ௧௧ - ௫, ௬.) எந்தவிதத்திலுலாவது ஸ்திரீக்குக்கிடைத்த திரவியம் ஸ்திரீதனமென்றும் ஸ்திரீக்குமாத்திரம் சுதந்தரமுள்ளதிரவியம் ஸவுதாயிகமென்றும் சொல்லப்படும.

379. ஸ்திரீதநம், விவாஹகாலத்தில் புருஷனல் கிடைத்ததென்றும் மற்றவர்களாலே கிடைத்ததென்றும் மறுபடி இரண்டுவிதமாயிருக்கிறது. மேற்கண்டபடி புருஷனுற் கிடைத்ததற்கு யௌதகமென்றும் வேறுவிதமாய்க் கிடைத்ததற்கு அயௌதகமென்றும் பெயர். (தாயபாகம் நாலாவது புஸ்தகம் இரண்டாவது அத்தியாயம் - ௧௫, ௧௪ - வாக்கியங்கள்.) மிதாக்ஷரைல் இந்தப்பேதமில்லை.

380. ஸ்திரீதநம் யௌதகமானுல் அவளுடைய புத்திரிகளைப்போய் அடையும் - அவர்களில் முதலில் விவாகமில்லாதவளையும் பின்புநிச்சிதார்த்தஞ் செய்யப்பட்டவளையும் கடைசியில் விவாகமானவளையும் அடையும் - புத்திரிகளில்லாவிட்டால் புத்திரர்களை அடையும். (தாயபாகம் நாலாவது புஸ்தகம் - இண்டாவது அத்தியாயம் - ௧௫ - ௨௫ - ௨௬ வது - வாக்கியங்கள்.) மற்றை ஸ்திரீதநசொத்து அவளுடைய புத்திரர்களையும் நிச்சிதார்த்தஞ்செய்யப்படாத கன்னிகளான புத்திரிகளையும் சமமாக அடையும். இவர்களி லொருவரில்லாவிட்டால் மற்றொருவரைச் சேரும். அவர்களில்லாமற்போனுல் விவாகிதையாயும் புத்திரவதியாயு மிருக்கிறவளாவது புத்திரனைப்[1] பெறத்தக்கவளாவது அடைவாள். அவர்கட்குப்பின்பு அவள்புத்திரனுடைய புத்திர

னும் அதற்குப்பின்பு தௌஹித்திரனும் அவர்கட்குப் பின்பு வந்தியையானபுத்திரிகைகளும் விதந்துவானபுத்திரிகைகளும் அடைவார்கள். (தாயபாகம் நாலாவதுபுஸ்தகம் இரண்டாவது அத்தியாயம் - க - கக - கஉ வது - வாக்கியங்கள்.) ஸ்திரீதநம் புருஷனிடத்திலே யிருந்துவந்ததாயிருந்தால் அதுபின்பு அவனுடைய பிற்பட்ட பாத்தியஸ்தர்களே அடையும் - அவர்களில் முதலிற்புத்திரியை யடையும் - அவளுடையசொத்தை யடையத்தக்க பாத்தியஸ்தர்களே யடையமாட்டாது. (தாயபாகம் - கக வது புஸ்தகம் - க வது - அத்தியாயம் - ருசு - ருஎ வது - வாக்கியங்கள்.) இதற்குவிரோதம் மிதாக்ஷரை இரண்டாவது புஸ்தகம் - கக வது - அத்தியாயம் - க - கரு வது - வாக்கியங்கள். இந்த வாக்கியங்களில் ஸ்திரீதனமானது எவ்விதமானதானாலும் புத்திரிகளேப்போ யடையும் - அவர்களில் அவிவாகிதைகள் முன்னும் விவாகிதைகள் பின்னும் சொத்தைப்பெற்றிராதவள் முன்னும் பெற்றவள் பின்னுமாக அடைவார்கள். அவர்கட்குப்பின்பு புத்திரிகளுடைய புத்திரிகைகளும் புத்திரிகளுடைய புத்திரர்களும் பின்பு புத்திரர்களும் பௌத்திரர்களுமாக அடைவார்களென்றிருக்கிறதேயல்லாமல் முன்சொன்ன பேதமில்லை.

381. சஹபாடியில்லாதவிஷயத்தில் சொத்தானது சகோத்திரரையும் பின்பு சமானபிரவரர்களேயும் அடைகின்றது. அவர்களுமில்லாவிட்டால் ஆசாரியனேயும் அந்தக்கிராமஸ்தர்களாகிய பிராமணர்களேயும் அடைகின்றது. அவர்களில்லாதபக்ஷத்தில் பிராமணரல்லாதவர்களுடைய சொத்து துரைத்தனத்தாரை யடைகின்றது. (தாயபாகம் - கக வது - புஸ்தகம் - ௬ வது - அத்தியாயம் - உ௫ ஷீ உஎ - வரையும் வாக்கியங்கள்.) இதற்கு விரோதம் மிதாக்ஷரை இரண்டாவது புஸ்தகம் - எ வது - அத்தியாயம் - ௬ ஷீ ௬ - வரையும் வாக்கியங்கள். மேற்படி வாக்கியங்களின்படிக்கு சஹபாடியில்லாதபக்ஷத்தில் பிராமணதிரவியம் பிராமணர்களேயே யடையுமென்றும் இதரஜாதிகளின்திரவியம்துரைத்தனத்தாரை யடையுமென்றும் ஏற்படுகின்றது.

பந்துக்களில்லாதவிஷயத்தில் சொத்தின் போக்கு.

XIII. அத்தியாயம்.

மலையாளதேசசாஸ்திரம்.

ஸ்திரீசந்ததியிற் சொத்துக்குப் பாத்தியம்.

382. மலையாளராச்சியத்திலே கனராதேசந்தவிர மற்றை அந்தராச்சியத்தின் குடிகளில் பெரியகூட்டத்தில் வழங்கிவரும் பாத்தியத்தின் ஏற்பாடு இந்த ராஜதானிக்குட்பட்ட மற்றைய தேசங்களில் வழங்கிவருகிற ஏற்பாட்டோடு பேதப்படுகிறது. தாயபாகபாத்தியம் புருஷபரம்பரைக்கில்லாமல் ஸ்திரீபரம்பரைக்குண்டாயிருக்கிறது. ஒருபுருஷனுடைய புத்திரர்கள் அவனுக்குப் பிற்பட்டபாத்தியஸ்தர்களுடைய வரிசையிற்சேர்ந்தவர்களல்லர். புருஷனுடைய சொத்து அவன்சோதரிகளையும் சோதரிபுத்திரர்களையும் சோதரிகளுடைய புத்திரிகளையும் சோதரி புத்திரிகைகளுடைய புத்திரர்களையும் புத்திரிகைகளையும் தாயையும் தாயின் சோதரிகளையும் அவர்கள் குழந்தைகளையும் மாதாமஹியையும் மாதாமஹியின் சோதரிகளையும் அவர்களுடைய குழந்தைகளையும் போயடைகின்றது. இவ்விததாயாதபரம்பரை இல்லாவிடின் இந்தராஜதானிக்குட்பட்ட மற்றைப்பிரதேசங்களில் நடந்துவருகிறபடிக்கு அவனுடையசிஷியனையும் பின்புசகபாடியையும் பின்பு துரைத்தனத்தாரையும் முறையே போய்ச்சேருகின்றது.

இந்தஏற்பாட்டின் மூலம்.

383. இப்படி ஸ்திரீபரம்பரையில்வரும்தாய ஏற்பாட்டுக்கு மருமக்கதாயமென்றுபெயர். மலையாளதேசத்துக்கு முதல் அரசனாயிருந்த பரசுராமன் பிராமணர்களை அந்தத்தேசத்திற் கொண்டுவந்துசேர்த்தது அவர்களுக்கு ஸ்வாஸ்தியத்தையுண்டுபண்ணி அந்தஸ்வாஸ்தியங்கள் துண்டுதுண்டாய்ப்பிரிந்து கெடாமலிருக்கும்பொருட்டு ஜேஷ்டசோதரன் ஷெ ஸ்வாஸ்தியத்தை யடையவேண்டியதென்றும் அவன்மாத்திரம் விவாகஞ்செய்துகொள்ளத்தக்கவனென்றும் விதித்ததாகச்சொல்லுகிறார்கள், இந்தஜேஷ்

ட சோதரர்களுடைய புத்திரர்கள் குடும்பத்திற்கெல்லாம் புத்திரர்களென்று எண்ணப்படுவார்கள். கனிஷ்ட பிராதாக்களுக்குப்பாரியைகளில்லாமையால் அவர்கள் தாழ்ந்தஜாதி ஸ்திரீகளோடு ஸங்ஸர்க்கஞ்செய்துகொள்ளும்படி சம்மதியுண்டாயிருக்கிறது. இந்த ஸம்ஸர்க்கத்தால் உண்டாகுஞ் சந்ததியார் அவிவாஹிதஸ்திரீயின் புத்திரர்களாகையாற் பிராமணர்களென்று சொல்லப்படவும் பிதாவின்சொத்தை அடையவும், தகுதியுள்ளவர்களாகாமற்போனார்கள். ஆகையினால் இவர்களுக்குத்தாய்களிடத்திலிருந்தே தாயம் உண்டாகவேண்டியதாயிற்று. தாழ்ந்தஜாதியார் தங்களுக்குள் தாங்கள் இப்படிசங்கரமானஸம்பர்க்க வற்பாட்டுக்கே உட்பட்டவர்களானார்கள். இவர்களில் ஸ்திரீகள் ரஜஸ்வலைகளாகுமுன் ஒருவித விவாகஞ்செய்துகொள்ளுகிறார்கள்- ஆனாலும் வரன், பர்த்தாவாயிருக்கவேண்டுமென்கிற நிமித்தமில்லாதவனா யிருக்கிறான். ரஜஸ்வலைகளானபிற்பாடு ஸ்திரீகள் தங்கள்ஜாதியார்களாயும், தங்களைவிட வுயர்ந்தஜாதியார்களாயும் இருக்கிறவர்களில் யாரோடாவது எத்தனைபெயரோடாவது இஷ்டப்படிக்கு ஸம்ஸர்க்கஞ்செய்து கொள்ளுகிறார்கள். இதனாலுண்டாகும் ஸந்ததியாருக்கு பிதா இன்னானென்று அறிகிறதற்கிடமில்லாமலிருக்கிறதனால் தாயின்சொத்திலேயே பாத்தியதையுண்டாயிருக்கிறது.

384. மருமக்கத்தாயமென்கிற ஏற்பாட்டை எல்லாச்சாதியாரும் அநுசரிக்கின்றார்கள். அதற்குப்புறம்பானவர்கள் யாரென்றால் பிராமணர்களும் அகப்போது என்கிற தேவஸ்தான ஊழியக்காரர்களும் தச்சன் கன்னான் கருமான் தட்டான் என்கிற தொழிலாளிகளும் சர்மகர்கள் மலையர் பாணர் முதலான தாழ்ந்தஜாதியாருமே- இவர்கட்குப் புருஷபரம்பரையிலே தாயபாத்திய வற்பாடு உண்டாயிருக்கிறது. உத்தரமலையாளத்தில் தீயரென்கிற சாணாரும் முக்குவரென்கிற செம்படவரும் மருமக்கதாய

மருமக்கத்தாய ஏற்பாட்டுக் குட்பட்ட ஜாதியார்.

த்தை யனுசரிக்கின்றார்கள். அங்கேதக்ஷிணத்தி லிருக்கிறவர்கள் மக்கத்தாயமாகிய புருஷசந்ததி பாத்தியத்தை அனுசரிக்கின்றார்கள். உத்தரமலையாளத்தில் இருக்கின்ற மாப்பிள்ளைசாதியார்கள் மகம்மதீயர்களாயிருந்தும் பெரும்பாலும் ஹிந்துக்கள்பிரமுகர்களாயிருந்தகாலந்தொடங்கி அவர்களுடைய ஆசாரத்தை மேற்கண்டவிஷயத்தில் அனுசரித்து மருமக்கத்தாய ஏற்பாட்டின்படி நடக்கின்றார்கள்.

தரவாடுகுடும்பங்கள்.

385. மருமக்கத்தாயத்தை யனுசரிக்கின்ற குடும்பங்கள் அனேகஞ்சேர்ந்து ஒருகுடும்பமாயிருக்கும் - அதுதரவாடென்று சொல்லப்படும். ஒருவன் தூரஸ்தனாயிருந்தாலும் குடும்பத்தலைவனுக்கு உட்பட்டிருந்து கர்மானுஷ்டானத்தைச் சேர்ந்துசெய்தால் அவன், குடும்பத்திற் சேர்ந்தவனென்றே ஒப்புக்கொள்ளப்படுகிறான். எந்தப்பிரிவிற்சேர்ந்தவனானாலும் வயதுமூத்தவன் குடும்பத்தலைவனா யிருக்கின்றான். அவனுக்குக்காரணவனென்றுபெயர். மற்றவர்களுக்கு அநந்தரவர்களென்று பெயர்.

காரணவன் பாத்தியம்.

386. இறந்துபோன காரணவனுடைய அதிகாரம் அவன் தரவாட்டைச்சேர்ந்த பாத்தியஸ்தர்களில் வயதுசென்றவனை யடையுமேயல்லாமல் இறந்தவனுடைய அத்தியந்தஞ் சமீபஸ்தனானபந்துவை அடையமாட்டாது - இதற்கு உதாரணம், தாயின் சோதரியினுடைய தவுகித்திரன் ஜேஷ்டனாயிருப்பானாயின் அவன் தாயினுடையசோதரியின் புத்திரனைவிடப்பாத்தியஸ்தனாகின்றான். (கள்ளிக்கோட்டை - சப் - கோ - ௧௮௪௭ ௵ த்திய அப்பீல்நம்பர் - ௬௬ ல் - தீர்ப்பு.) தன்சகோதரியின்புத்திரன் தாயின்சகோதரி புத்திரனைக்காட்டிலும் சமீபபந்துவானாலும் அவனுக்குக்கிடையாது.

பாகங்கேட்கக்கூடாது

387. குடும்பகாரியத்தைக்குறித்துங் குடும்பசொத்தைக்குறித்துங் குடும்பத்தலைவன் சர்வாதிகாரத்தை உடையவனாயிருக்கின்றான். யாவருக்கும் நன்மைகிடைக்கும்பொருட்டு அவன்

காரியம் பார்த்துவரவேண்டியது. குடும்பத்தில் எவனாவது பாகங் கிடைக்கவேண்டுமென்று வழக்கிட்டுப்பங்கு கொடுக்கும்படி வலிமைசெய்வதினாலேயாவது கடன்பட்டு அதைக்குறித்துச் சொத்தின்மேல் சாட்டுகிறதினாலேயாவது குடும்பம் பின்னப்படமாட்டாது. (ஸ-கோ-௧௮௧௪௵ - ரி-அப்பீல் - ௨௮ வது - நம்பரில் தீர்ப்பு ; மலபார் - ஜி - கோ - ௧௮௪௨௵- ஸ்பெசல் அப்பீல் நம்பர் - ௧ ல் - தீர்ப்பு ; கள்ளிக்கோட்டை - ஸி - கோ - ௧௮௪௮௵ - அ - நம் - ௬௬ ல் - தீர்ப்பு ; ஸ - கோ - புரோ - ௧௮௫௪௵ - பிபர்வரிமீ - ௧௬௨.)

388. பாகம் உண்டாகிறதாயிருந்தால் கோர்ட்டுக்கட்டளையினாலாவது (ஸ - கோ - ௧௮௫௭ - ஸ்பெ - அ - நம் - ௪ல் - தீர்ப்பு.) கடன்கொடுத்தவனுடைய வழக்கினாலாவது முடியமாட்டாது. குடும்பத்திற்சேர்ந்தவர்கள் தங்களுக்குள் பரஸ்பரசம்மதியினாற் பாகஞ்செய்துகொள்ளலாம் - அந்தப்பாகத்தைக் கோர்ட்டாரும் ஒப்புக்கொள்ளலாம். அப்படியுண்டாகிற விபாகசங்கதியில் ஒருவனுக்குக் கெடுதிநேரிட்டால் கோர்ட்டார் சந்தேகமின்றி அதற்குப் பரிஹாரஞ்செய்வார்கள். சம்மதியினால் பாகம் உண்டாகலாம்.

389. அப்படிப்பட்ட விபாகம் தவரீஸென்கிற குடும்பப் பிரிவினைக்குத் தக்கதாக இருக்கவேண்டும். அதாவது கூடஸ்தனுடைய சோதரிகள் எத்தனைபெயரோ அத்தனைபிரிவாகச்சொத்தை முதலில் பாகிக்கவேண்டியது - இவர்களுக்குவரும்பாகம் குடும்பப் பிரிவினைகட்குவந்து பின்பு அவர்கள்சந்ததியாருக்கேவரும். பாகத்திற்குக்காரணம்.

390. பூர்வார்ஜிதமாயிருந்தாலும் ஸ்வார்ஜிதமாயிருந்தாலும்காரணவன் யுக்தத்துக்குத் தக்கபடி ஜங்கமசொத்தைவிநியோகம் பண்ணலாம். ஸ்தாவரசொத்தானால் அது பூர்வார்ஜிதமாயிருந்தாலும் ஸ்வார்ஜிதமாயிருந்தாலும் அநந்தரவர்களில் முக்கியமானவர்களுடைய லிகிதபுரஸ்ஸரமான சம்மதிவேண்டும். (ப - க - காரணவனுடைய விநியோக அதிகாரம்.

பு - கோ - ௧௮௯௯௵-ரி - அ - நம் - ௨௱ ல் - தீர்ப்பு ; மலபார்-ஜி- கோ - ௧௮௪௦௵ - ஸ்பெசல் - அ - நம் - ௨௯ ல் - தீர்ப்பு ; ஸ - கோ - ௧௮௪௫௵ - ரி - அ- நம்பர்-௫ ல்-தீர்ப்பு.)

391. காரணவனோடு ஒத்திராத ஒரு அநந்தரவனுடைய சம்மதியில்லாமையானது காரணவனாலே செய்யப்படும் ஸ்தாவர சொத்தின் விநியோகச்செய்கையை அழிக்கமாட்டாது. அப்படிப்பட்ட விநியோகத்துக்கு அனந்தரவருடைய சம்மதிவேண்டுமென்கிறவிதிவாக்கியத்துக்கு குடும்பத்தில் அனுகூலமாயக்கூடியிருக்கிற அனந்தரவருடைய சம்மதிவேண்டுமென்பது தாற்பரியம். (மலபார் - ஜி - கோ - ௧௮௪௦௵ - ஸ்பெசல் - அப்பீல் நம்பர் - ௨௯ ல் - தீர்ப்பு.)

கடன்வாங்க.

392. அனந்தரவர்களுடைய சம்மதியில்லாமற் குடும்பத்தின் பிரயோசனத்திற்காகக் காரணவன் சொத்தை ஒற்றிவைத்துக்கடன்வாங்கலாம். அறுதியாய் விநியோகம் பண்ணிப்போடுகிறவிஷயத்தில் மாத்திரம் அனந்தரவர்களுடையசம்மதி ஆவசியகம். (ஸ - அ - ௧௮௪௫௵ - ரி - அ - நம் - ௫ ல் - தீர்ப்பு.)

393. காரணவன் எழுதிக்கொடுக்கும் பத்திரங்களின் சிலாவணிக்கு அனந்தரவருடைய கையொப்பம் நிமித்தமில்லை. (ஸ-கோ - ௧௮௪௯௵ - ரி - அ - நம் - ௪௧ - லும் - ௧௮௫௨௵ - ஸ்பெ - அ - நம் - ௯௮ - லும் - தீர்ப்புகள்.)

குடும்பசொத்துஈடாதல்.

394. காரணவனாலேயாவது அவன் அனுமதியினால்காரியம் பார்க்கிற குடும்பத்தலைவனாலேயாவது குடும்பப்பிரயோஜனத்திற்காக வாங்கப்படுங்கடனுக்குக் குடும்பசொத்து ஈடாகலாம். குடும்பத்தில் ஒவ்வொருவனும் தனித்துவாங்குங்கடனுக்குக் குடும்பசொத்து ஈடாகமாட்டாது. (கள்ளிகோட்டை -ஜி - கோ- ௧௮௪௮௵ - அ - நம் - ௯௯ ல் - தீர்ப்பு ; ஸ-கோ-௧௮௫௨௵ - ஸ்பெ-அ - நம்-௯௮ ல் தீர்ப்பு ; ௧௮௫௪௵ - ஸ்பெ- அ - நம் - ௪௮ - ௪௬ ல் - தீர்ப்புகள்.)

395. குடும்பத்தலைவன் தன்சொந்தகாரியத்திற்கு வாங்குங்கடனுக்குக் குடும்பசொத்து ஈடாகாது. (ஸ-கோ-கஅசச௵-ரி - அ - நம் - ௬௭ல் - தீர்ப்பு.)

396. குடும்பத்தில் அவனவன் தனித்தனியேவாங்கினகடனுக்குக்குடும்பதிரவியத்தினுள்ளே தன்தன் அம்சம் ஈடாகமாட்டாது. (ஸ - கோ - புரோ - கஅ௹0௵ - ஆகஷ்டுமீ - ௰௨.)

397. காரணவன் வாங்கினகடனானது குடும்பத்தின்பிரயோஜனத்திற்கல்லவென்று ருசுவாகுமளவும் அது குடும்பபிரயோஜனத்திற்காக வாங்கினதென்றே எண்ணவேண்டியது. அநந்தரவன் வாங்கினகடனானது அவன்சொந்தத்திற்கு வாங்கினதென்றேயெண்ணவேண்டியது. அப்படியல்லவென்று ருசுவானல் குடும்பசொத்து அதற்கு ஈடாகும்.

398. யோக்கியனல்லாத காரணவன் நிராகரிக்கப்படத்தக்கவன். (கள்ளிகோட்டை - சி - கோ - கஅசஅ௵ - அ - நம்- ௬௬ல் - தீர்ப்பு.) காரணவன் தகுதியற்றவனென்பதற்குக் காரணங்களாவன- ஜாதிபிரஷ்டத்துவம், வயோதிகம், செவிட்டுத்தனம், குருட்டுத்தன்ம், ஊமைத்தனம், பைத்தியம், இழிவானநடக்கை, குடும்பசொத்தை யழித்தல் இவைகளாம்-குடும்பத்தாராலாவது கோர்ட்டு அதிகாரஸ்தராலாவது காரணவன் நிராகரிக்கப்பட்டுப்போனல் அவனுக்கு அடுத்த தகுதியுள்ள புருஷர்களில் ஜேஷ்டன் அவன்ஸ்தானத்தைப்பெறுவான். காரணவனை நிராகரித்தல்.

399. ஒருவன்குடும்பசொத்தின் உதவியில்லாமல் சொந்தப்பிரயாசையினலே ஆர்ஜித்தஜங்கமசொத்து சம்பாதித்தவனையேசேர்ந்து அவனிஷ்டப்பிரகாரம் விநியோகிப்பதற்கு உரித்தாகும். புருஷர்களைப்போலவே ஸ்திரீகளும் ஸ்வார்ஜிதத்தை அடையலாம். புருஷனுடைய சுவார்ஜிதசொத்து அவனுக்குப்பின்பு அவனுடையசோதரிகளின் புத்திரர்களையாவது சமீப அநந்தரவர்களையாவதுசேரும். (கள்ளிக்கோட்டை - சப் - கோ - ஸ்வார்ஜிதம்.

௧௮௫௨ (ஸு-அ-௩ம்-௩௨0 ல்-தீர்ப்பு.) ஸ்திரீகளுடைய ஸ்வார்ஜிதம் அவர்களுடைய புத்திரரையும் புத்திரிகளையும் அடையும்.

வைதவ்யம்.

400. மற்றத்தேசங்களில் இருக்கிற ஸ்திரீகளுக்குப் போலே இந்தத்தேசத்து ஸ்திரீகளுக்கு வைதவிய ஸ்திதி இல்லை. ஸ்திரீகள் புருஷர்களோடு சம்பந்தப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலுந் தங்கள்சொந்தக் குடும்பங்களிலேயே யிருக்கின்றார்கள்.

குடும்பசொத்தைவைத்துக்கொண்டுகுடும்பத்தைநிர்வகித்தல்.

401. சாஸ்திரப்படிக்குச் சொத்து ஸ்திரீகளையே அடையவேண்டியது. புருஷர்கள் குடும்பகாரியத்தை நடத்திக்கொண்டு தங்கள் ஜீவனாம்சத்தைப் பெற்றுக்கொள்ள அதிகாரமுள்ளவர்கள். அனுபவத்தில் புருஷர்கள் ஸ்திரீகளோடு சமபாகஸ்தர்களாயிருக்கின்றார்கள். புருஷர்களில்லாதபக்ஷத்தில் சமுதாயசொத்தை வைத்துக்கொண்டு குடும்பகாரியத்தை நடத்துகிறார்கள். சிலகுடும்பத்தில் புருஷர்களைவிட ஸ்திரீகளிடத்திலேயே குடும்பவிசாரணை உண்டாயிருக்கின்றது. அப்படிப்பட்ட விஷயத்தில் ஸ்திரீகளில் தலைவியாயிருக்கின்றவள் விசாரணையை வஹித்துக்கொள்ளுகிறாள்.

போஷணை.

402. குடும்பத்தில் தூரஸ்தர்கள் முதலியயாவர்களும்போஷணைக்குப் பாத்தியஸ்தர்களா யிருக்கின்றார்கள்.

ஸ்வீகாரம்.

403. சோதரிக்குப் புருஷசந்ததியாவது ஸ்திரீசந்ததியாவது இல்லாவிடின் குடும்பத்தலைவி அல்லது தலைவன் ஸ்வீகாரஞ் செய்துகொள்ளலாம். பாத்தியம் ஸ்திரீசந்ததியில் வருகின்றதாதலால் புத்திரிகாஸ்வீகாரம் செய்யவேண்டியது. குடும்பவிசாரணை செய்யவேண்டியதாய் நேரிடுங்காலத்தில் ஸ்வீகரிக்கப்படுகிறவளுக்குப் புத்திரர்பாலர்களாயிருக்கக்கூடுமென்கிற எண்ணத்தினாற் குடும்பநிருவாஹத்திற்காகவும் கர்மங்களை நடத்துவதற்காகவும் அவளோடுகூடவே அவள்சோதரனையுஞ் சுவீகரித்துக்கொள்ளலாம்.

404. மருமக்கத்தாய ஏற்பாடோடொத்ததாய் அளியசந்தா

கெனராவில் அளியசந்தானவிதி செல்லுதல்.

ண ஏற்பாடு கெனராதேசத்தில் உண்டாயிருக்கின்றது. மலபாரில் மருமக்கதாயத்தை எப்படியோ அப்படியே அங்கேபிராமணர்கள் மேற்படி ஏற்பாட்டை அனுசரிக்கிறதில்லை. ஷி அளியசாந்தானமென்கிற விதியின் விவரணம் மருமக்கத்தாயவிதியின் விவரணத்தோடொத்ததா யிருக்கிறது. தாயபாகம் புருஷர்களைவிட ஸ்திரீகளுக்குவருவதே மேலானது என்கிற ஏற்பாடானது கெனராதேசத்தில் தப்பாமல் ஆசரிக்கப்படுகிறது. அவ்விடத்தில்குடும்பசொத்தின் விசாரணை சாதாரணமாய் ஸ்திரீகளிடத்திலேயே யிருக்கிறது. மலபாரில் புருஷர்களுக்கு அவ்விசாரணை சாதாரணமா யுண்டாயிருக்கிறது.

XIV. அத்தியாயம்.

கிரயவிக்கிரய முதலானவிவஹாரம்.

கிரயாதிவிவகாரத்துக்குத்தகுதியற்றவர்கள்.

405. பாலனும், சித்தசுவாதீனகாலந்தவிர மற்றக்காலத்திற் பைத்தியக்காரனும், விவேகமில்லாதவனும், குடியாலாவது தீர்க்கரோகத்தாலாவது வார்த்திகத்தளர்ச்சியாலாவது பயம் கோபம் காமம் விசநம் முதலியவைகளாலாவது தகுதியற்றவனும், செய்யும் விவகாரம் செல்லமாட்டாது. (ஒன்று - உஎக, உஎஉ.)

பலாத்காரத்தால் அல்லது கபடத்தால்நடந்த விக்கிரயாதிகள்.

406. பலாத்காரத்தினால் அல்லது கபடத்தினால் செய்த விவகாரம் செல்லமாட்டாது. அபுத்திபூர்வகமாகச் செய்யப்பட்டதும் செல்லமாட்டாது. (ஒன்று - உஎஙு.)

அக்கிரமச்செய்கை.

407. கிரயவிக்கிரயாதி விவகாரம் சாஸ்திரத்தோடொத்திருக்கவேண்டும் - இல்லாவிட்டாற் செல்லாது. நியாயவிரோதமாய்க்கொடுத்ததை மறுபடி வரப்பெற்றுக்கொள்ளலாம். (ஒன்று - உஎச - உஎரு.)

கிரயவிக்கிரயாதிகளுக்கு எழுத்துஇருக்க வேண்டுமென்பதில்லை.

408. கிரயவிக்கிரயாதிகளுக்கு எழுத்து இருக்கவேண்டுமென்றது ஆவசியகமல்ல. (ஒன்று - உஎஎ.) ஆனால் லிகிதபூர்வகமாக இருக்கத்தக்க விவகாரவிஷயத்தில் வாயின்சாக்ஷியத்தின்படி நடத்தக்கோர்ட்டார் சமுசயப்படுவார்கள்.

லிகிதஉடன்படிக்கையின் அழிவு.

409. லிகிதபுரஸ்ஸரமாக வுண்டான கிரயமுதலானது, ரத்து செய்யப்பட்டதினாலாவது விசுத்திபத்திரத்தினாலாவது முடிவை யடையவேண்டும். (ச - கோ. - கஅருரு ஹூ - ஸ்பெ - அ - நம் - கஉஎ ல் - தீர்ப்பு.)

வாக்குமூலம் பத்திரநிபந்தனையிற் செல்லாமை.

410. பத்திரத்திற் சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கு விரோதமாகச் சொல்லுகிற சாக்ஷியம் சம்மதிப்படமாட்டாது. பத்திரத்திற்சொன்னதிரவியம் அதில்சொல்லப்பட்டவனைவிட மற்றவனுக்குச்சேரவேண்டியதென்று சொல்லியசாக்ஷியம் செல்லாது. (ஸ - ஸ்ரீகோ - கஅகூ0 ஸ்பெ - அ - நம் - எகூல் - தீர்ப்பு.)

411. அப்படியே விக்கிரயபத்திரத்திற் சொல்லப்பட்டவனைவிட மற்றொருவனுக்குப் பிறந்ததென்று சொல்லுகிற சாக்ஷியம் செல்லாது. (ஸ - கோர் - ௧௮௫௮ - ஸ்பெ - ௮ - நம் - ௨௯ ; ௧௮௫௯ - ஸ்பெ - ௮ - நம் - ௨௩ ல் - தீர்ப்புகள்.)

லாபமில்லாவிடினும் உடன்படிக்கையை நிறைவேற்றக் கடமை.

412. ஒருவனுக்கொரு காரியத்தைச்செய்யக் கிரமமாய் ஒப்புக்கொண்டவன் அதை நிறைவேற்றுவதில் தனக்கொரு பிரயோஜநங் கிடைக்குமென்கிற நம்பிக்கைக்கு இடமிராவிட்டாலும் தன்னிடத்தில்வைத்த நம்பிக்கைப்படிக்கு அதை நிறைவேற்றக்கடமைப்பட்டவனாக இருக்கின்றான். (ஒன்று - ௨௮௪ - ௨௮௫.)

தன்வசம் வைத்த சொத்திற்கு உத்தரவாதம்.

413. உபநிக்ஷேபத்தின்மேலாவது கடனுக்குப்பதிலாயாவது ஈட்டின்மேலாவது கூலிக்காகவாவது எருமதிசெய்யவாவது வாங்கின சரக்குகளை வாங்கினவன் காப்பாற்றக் கடமைப்பட்டவனாக இருக்கவேண்டும். மேற்படி சரக்குகளைப்பத்திரப்படுத்தவேண்டியதற்கும் அவைகட்கு அபாயமுண்டானபோது அவைகளைத்தடுப்பதற்குங் கடமைப்பட்டிருக்கவேண்டும். சுபாவத்தினாலாவது தெய்விகமாயாவது திருட்டுத்தனத்தாலாவது நேரிடும் நஷ்டத்திற்கு உத்தரவாதியாகமாட்டான். (ஒன்று - ௨௮௨ - ௨௮௩ - ௨௮௯ - ௨௯௨ - ௨௯௪ - ௨௯௫.)

காலாதீதமாகச்சொத்தைக் கொடாமல் வைத்திருந்தால்.

414. சரக்குகளை ஒப்பிக்கும்படி நியாயமாய்க் கேட்டபிற்பாடாவது ஒப்பிக்கவேண்டிய கடுவுக்குப் பிற்பாடாவது ஒப்பிக்காமல் வைத்திருந்தால் அவைகளுக்கு எவ்விதமாக என்ன நஷ்டம்நேரிட்டாலும் அதற்கு உத்தரவாதஞ் செய்யக்கடவன். (ஒன்று - ௨௮௪ - ௨௮௭.)

கிரயமான சொத்து.

415. விலைபெற்றுக் கொண்டபின் சரக்கை ஒப்பியாவிடின் அதன் நஷ்டம் விற்றவனதாகும். (ஒன்று - ௩௦௧)

416. விலைதீர்த்துக் கொண்டவன் சரக்கை ஒப்பித்துக் கொள்ளாவிடின் அவனோடுசெய்த உடன்படிக்கை ரத்தாய் வி

ட்டதென்றெண்ணி விக்கிரயித்தவன் அதை மறுபடி விற்றுப்
போடலாம். நேரிடும் நஷ்டம் முதல்வாங்கினவனதாய்விடும்.
(ஒன்று - ௫0௫.) ஆகிலும் மறுபடிவிற்க நேரிட்டபோது விற்கி
றவன் சரியானவிலை பெறும்படியாய்க் காலவிளம்பமின்றித்தகு
ந்தபிரயத்தனஞ் செய்யவேண்டும்.

அச்சாரம்.

417. கிரயந்தீர்த்துக்கொண்டு அச்சாரமாத்திரங் கொடுத்த
வன் உடன்படிக்கை தப்பிப்போனால் தான்கொடுத்த அச்சாரத்
தை இழந்துபோகக்கடவன். வழுவுதல் விற்றவனதாகவிருந்தால்
அச்சாரத்திற்கிரண்டத்தனை கொடுக்கக்கடவன். (ஒன்று-௫0௫.)

காலநியமம்.

418. இவ்வளவுகாலத்திற்குள் அவரவர்களுடைய சுதந்தி
ரங்களுக்கு வழக்குக்கொண்டுவந்து கொள்ளவேண்டுமென்று ஏ
ற்பட்ட இந்துகால அளவின் ஏற்பாடுகளைப் பிரிடீஷ்துரைத்தன
த்தார் மாற்றிவிட்டார்கள். (௧௮௫௩ - சாசனம் - ௧௪.)

குத்தகைவாங்கின நிலத்தினின்றுஞ் சாமானை அப்புறப்படுத்தல்.

419. ஒருவன் வாடகைக்கு அல்லது ஒற்றிக்குவைத்துக்கொ
ண்டநிலத்தில் வீடுகட்டுவானானால் வாயிதாகாலமானவுடனே க
ட்டடசாமானைப் பிரித்துக்கொண்டுபோகலாம். (ஒன்று-௨௯௪.)

பிணைப்பட்டவனுடையகடமை.

420. ஒருவனை ஒப்பிக்கவாவது அவனுடைய நல்லநடத்
தையைக்குறித்தாவது உத்தரவாதஞ்செய்ய ஒப்புக்கொண்டவர்
கள் அவர்களே உத்தரவாதியாகின்றார்கள். அவர்களிறந்தபின்பு
அவர்களுடைய புத்திரர்கள் உத்தரவாதிகளல்ல. ஆனாலும் அ
வர்களுடைய பிதாக்கள் ஈடுபெற்றிருந்தால் உத்தரவாதிகளாகக்
கடவர்கள். (ஒன்று - ௫0௧.)

421. அனேகர் உத்தரவாதஞ் செய்யும்படிசேர்ந்து பிணை
ப்பட்டிருந்தால் பிணைப்பட்டசொத்தில் அவரவர்க்கு ஏற்பட்
ட பாகத்தினளவு உத்தரவாதியாகவேண்டும் - வேறு விதமாய் உ
டன்பாடாயிருந்தால் அதற்குத் தக்கபடி செய்யக்கடவர்கள்.
(ஒன்று ௫0௧.)

முற்றிற்று.